மகளிர் இல்லம்

பண்டிதை. கிருஷ்ணவேணி அம்மையார்



கழக வெளியீடு

கழக வெளியீடு : ௫அ௨.

மகளிர் இல்லம்

ஆசிரியை :
முன்னைய இந்துநிலையத் தலைவியாரும்,
சென்னை லேடி வில்லிங்டன் போதனுமுறைக் கல்லூரித்
தலைமைத் தமிழ் ஆசிரியையுமாகிய
பண்டிதை. எஸ். கிருஷ்ணவேணி அம்மையார்

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை, 1.

First Edition : March, 1951

Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140. BROADWAY :: MADRAS, 1.

Head Office :

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.

பதிப்புரை

ஒருநாடு மேனிலை எய்தவேண்டுமானல் அந்நாட்டின் கல்வி வளம்பெறல்வேண்டும். கல்வியிலும் பெண்பாலார் கல்வி உரம்பெறல் வேண்டும். பெண்கல்வியும் மாணவிகள் ஒரேஇடத்து உறைந்து, ஒற்றுமையாய் உறவுகலந்து, ஒருவருக்கு ஒருவர் உதவியாய் ஒருங்கு கற்றல்வேண்டும். அப்பொழுதுதான் வீடும் நாடும் மொழியும் நன்னிலை எய்தும்.

அத்தகைய வாய்ப்பை ஒவ்வொருவருக்கும் நல்கி ஊக்கம் அளிப்பதாகும் 'மகளிர் இல்லம்' என்னும் இந்நூல். இந்நூல் திருவல்லிக்கேணியில் அமைந்துள்ள பார்ப்பனரல்லாத மகளிர்க்குரிய 'இந்து நிலையம்' என்னும் பெயர் வாய்ந்த உணவுவிடுதியின் தலைவியார் திருமதி. பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மையாரால் ஆக்கப்பெற்றது. இவ்விடுதி லேடி வில்லிங்டன் உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்தது. அரசினரால் நிகழ்த்தப் பெறுவது. பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக அவ்வில்லத்து அரும்பெருந் தொண்டாற்றிய தலைவியாரவர்களால் தம் உணர்ச்சிப் பழக்கமுடன் எழுதப்பட்டதாகும் இந்நூல்.

இந்நூல் இருபத்தாறு தலைப்புக்களுடன் விளங்குவது. இதன்கண் மாணவிகளின் ஒழுக்கம், உணவு, கல்வி, உடற்பயிற்சி, ஒற்றுமை, பெரியார்ப்பேணல், வழிபாடு, பணிவு, இன்சொல், அன்பு, செட்டு முதலிய பல நலங்களுடன் வாழும் முறைகள் வகுக்கப்பெற்றுள்ளன. இம்முறைகள் குடும்பவாழ்க்கைக்கும் நாட்டுவாழ்க்கைக்கும் நற்றுணையாவன.

இதுபோல் பல இல்லங்கள் தோன்றுவதற்கு இந்நூல் வழிகாட்டியாகும். இனிய எளிய நடையில் இந்நூலை ஆக்கித்தந்த அம்மையார்க்குக் கழகத்தார் நன்றி உரித்தாகுக. மாணவர் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் இந்நூல் அமைந்துள்ளது. எல்லாரும் கற்றும் பயனெய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

★

முன்னுரை

யான் இந்த நிலையத்தில் இருக்குமட்டும் நிலையத்தின் வாழ்க்கையைக் குறித்து எழுதவேண்டும் என்னும் எண்ணமே எனக்குத் தோன்றிற்றிலது. நிலையத்தை விட்டு நீங்கிய சில ஆண்டுகட்குப் பின்னர், ஒருநாள் நிலையப் போக்குகள் சில ஒன்றன்பின்னொன்றாக என் நினைவிற்கு வந்தது. அவை எனக்கு இன்பத்தையும், வியப்பையும், கிளர்ச்சியையும் மாறிமாறித் தோற்றுவித்தன. அவ்வமயம், "இவற்றை எழுதிவைத்தல் நலம்," என்னும் ஓர் எண்ணம் என் மனத்திலுதித்தது. ஆயினும், முதலில் இஃது இவ்வளவு விரியுமென யான் நினைக்கவே இல்லை. இஃது ஒரு சிறு உலகத்தின் வாழ்க்கையன்றோ!

நிலையத்தை மேல்பார்த்து வந்த அப்பதினெட்டு ஆண்டுகளும், குழந்தைகள், பெற்றோர், மேலலுவலாளர்கள், பொதுமக்கள் ஆகிய இவர்களுக்கு இயன்ற அளவு மனநிறைவு உண்டாகுமாறும், ஒருவருக்கும் துன்பமேற்படா வண்ணமும் நடந்து கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் என்னைப் பல துன்பங்களுக்குட்படுத்தியதெனக் கூறல் மிகையாகாது. ஆயினும், அந்நினைவில் வெற்றியடையுமாறு செய்த இறைவனுக்கு யான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

சிறுமிகளுள் பெரும்பான்மையவர் என்னிடம் அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர். சிலரால் ஏதேனும் இடையூறு ஏற்படினும், மற்றவர் அதைப் போக்கி அவரையும் நல்வழிப்படுத்தினர். இஃது எனக்கும் அவர்கட்கும் பெரிதும் நலனளித்தது.

குழந்தைகளிடம் குற்றங்கள் நேருங்கால், அவற்றை யானே திருத்திக்கொண்டு போதலல்லாமல், அநேகமாய் அவற்றைப் பெற்றோரிடம் தெரிவித்தல் இல்லை. ஆயினும், நிலைய வாழ்க்கையில் இவ்வனுபவம் இரண்டு மூன்றுமுறை எனக்கு ஏற்பட்டது. அவ்வமயம் பெற்றோர் எனக்குச் செய்த உதவிகள் பலப்பல. சிறுமிகளின் குற்றங்குறைகள் ஒருபோதும் மேலலுவலாளரிடம் (Principal) சென்றதே இல்லை. "மேலதிகாரிக்குச் சிறுமியரிடம் இருக்கும் நன்மதிப்பையும் அன்பையும் குறைத்தற்கும் அவருக்குத் தொல்லை கொடுத்தற்கும் நாம் காரணமாக இருத்தல் கூடாது," என்னும் எண்ணமே அச்செயலிலிருந்து என்னைத் தடுத்தது. குழந்தைகளும், தம் குறைகளையோ துன்பங்களையோ கல்லூரித் தலைவியாரிடம் தெரிவித்துக்கொள்ளும் அத்துணை அவசியமும் ஏற்படவில்லை.

அவ்வீதியிலிருந்தவரும், மற்றப் பொதுமக்களும் குழந்தைகளுக்காவது நிலையத்திற்காவது யாதொரு தீங்கும் இழைத்தனரில்லை. ஊன்றிக்கூறின், சிலபோது அவர்கள் எங்களுக்கு உதவி செய்தார்களென்றே சொல்லவேண்டும்.

கல்லூரித் தலைவியார் எல்லாப் பொறுப்புகளையும் என்னிடமே விட்டு முற்றும் என்னையே நம்பியிருந்தார்; சிறுமிகளின் உணவு, அவர்களை நடத்தும் விதம், நிலையத்தில் அவர்களுக்குள்ள எண்ணம் முதலியவற்றைச் சிறுமிகளாலோ மற்றவர்களாலோ அறிந்துகொள்ள அவர் என்றும் முயன்றதில்லை. பழைய மாணவிகளும் என்னிடம் மிக்க பிரியங்காட்டினார்கள். நிலையத்தில் அப்போதைக்கப்போது வதியும் பெண்களும் பெரும்பான்மையும் எனக்குக் கீழ்ப்படிந்தே நடந்தார்கள். சிலபோது சில தொல்லைகள் ஏற்படினும், அவற்றை யான் பெரியனவாய்க் கருதவில்லை. மாணவிகள் என்னிடமிருந்து என்ன கற்றுக்கொண்டனரோ இல்லையோ யான் அறியேன். ஆனால், யான் அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டன பலவாகும். எனக்குச் சிறந்த உலக அறிவை ஈந்தது நிலையமே எனல் மிகையாகாது. இம்முறையில் இந்நூல் "உலகறிவீந்த உயர் அனுபவம்," என்னும் பெயருக்கும் ஏற்றதாகும்.

என் உடல் நலக்குறைவும், சமய சம்பந்தமான சில தொண்டுகளைச் செய்யவேண்டுமென்னும் எண்ணமுமே நிலையத்தை விட்டுவிடுமாறு என்னைத் தூண்டின. ஆயினும், கல்லூரித் தலைவியாரின் மறுப்பும், குழந்தைகளின் வற்புறுத்தலும் இரண்டு மூன்று ஆண்டுகள் மட்டும் அங்ஙனம் செய்ய இடந்தந்திலது. இறுதியில் 1938-ஆம் ஆண்டு ஜூன் மாதம் என்னைப் படுக்கையில் வீழ்த்திய பிணியே, யான் நிலையத்தை விட்டு நீங்குதற்குத் தக்க காரணமாயிருந்தது. அம்மட்டோடு எனக்கு ஓய்வைத் தந்த இறைவன் அருளை என்னென்பேன்!

யான் நிலையத்தில் நுழையும்போது என் வாழ்க்கையில் இத்தகைய சிறந்த அனுபவம் ஒன்று எனக்கு ஏற்படுமென்று யான் நினைத்தேனில்லை. இவ்வனுபவம் என்னை எத்துணை உயர்நிலைக்குக் கொண்டுவந்ததென்பது என்னால் அளவிட்டுக் கூற இயலாது. இதனால், யான் அடைந்த அறிவுப்பேற்றை மற்றவரும் அடைய வேண்டுமென்னும் ஆர்வத்தினால் இதை வெளியிட்டதேயன்றிப் பிறிதில்லை. அறிவுடையவர் பிழைகளைப் பொறுப்பாராக.

S. கிருஷ்ணவேணி.

மதிப்புரை

சகோதரி R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள் அவர்கள், B.A., L.T.

திருமதி. பண்டிதை. S. கிருஷ்ணவேணியம்மாள் அவர்கள் பதினெட்டு ஆண்டுகள் லேடி வில்லிங்டன் கல்லூரியைச் சார்ந்த இந்து மாணவிகளின் இல்லம் ஒன்றிற்குத் தலைவியராயிருந்தார்கள். அக்கால் அவர்களுக்குண்டான அனுபவங்களைத் திரட்டி எழுதியுள்ள எழுத்துப் பிரதியை முற்றும் படித்து மகிழ்ந்தேன். அதைப் படிக்கும்போது, யான் பனி நிலையத்தில் (Ice house) இருபது ஆண்டுகள் தலைவியாயிருந்த காலத்தில், எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும், பல பழைய சம்பவங்களும் என் நினைவிற்கு வந்தன. "ஆஸ்டல் அனுபவங்களை எழுதி வெளியிட்டால், மாணவர் இல்லங்களை வைத்து நடத்துபவருக்கு அது மிகவும் பயன்படும்," என்று யான் அடிக்கடி நினைத்ததுண்டு. அந்நினைப்பை யான் செயலளவில் கொண்டு வருவதற்கு முன்பு, திருமதி. பண்டிதை - S. கிருஷ்ண வேணியம்மாள் அதை எழுதிவிட்டார்கள். எங்கள் இருவருடைய அனுபவங்களும் ஏறத்தாழ ஒன்றேயாதலின், நான் அதைப்பற்றி இனி எழுதுவது மிகையே யாகும்.

S. கிருஷ்ணவேணியம்மாள் ஓர் உயர்ந்த பண்புடைய குடும்பத்தில் பிறந்து, சிறுவயதிலேயே வைதவ்வியமடைந்து தகப்பனாரிடமும், ஒரு சிறந்த குருவினிடமும் கல்வி கற்றுச் சீலமுடன் ஒழுகி வந்தார். இவர் நடத்தி வந்த "மாதர் வித்தியாநுபாலன" சங்கத்திற்கு ஒருகால் யான் தலைமை வகிக்க நேர்ந்தபோதுதான், இவர் நட்பு உண்டானது. பின்பு யான் நடத்தி வந்த "சாரதா ஐக்கிய சங்க"த்திலும் இவர் அடிக்கடி சொற்பொழிவாற்றுவதுண்டு. இவர் இந்நூலில் தெரிவித்திருந்தபடியே என் தூண்டுதலின்பேரில், இவர் இந்நிலையத்திற்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டது அம் மாணவிகளின் நல்லதிருஷ்டம் (நல்வாய்ப்பு) என்றே நினைக்க வேண்டும்.

மாணவர்களுடைய உணவு நிலையங்களைக் கண்காணிப்பது கடினமான வேலையன்று என நினைப்பவர் பலர். இந்த நிலையங்களை ஓட்டல், ஆஸ்டல், ஹோம் (ஹோம்) என மூன்றாகப் பிரிக்கலாம். அப்போதைக்கப்போது உணவு மட்டும் வாங்கி உண்ணும் ஓட்டலுக்கு யாதொரு பொறுப்புமில்லை. 16, 18 வயதிற்கு மேற்பட்ட மாணவிகள் வதியும் ஆஸ்டலைப் பார்த்துக்கொள்வதும் அவ்வளவு

பாரமானதன்று. அங்குக் கோட்பாடுகளின்படி மாணவிகள் நடக்கின்றார்களா? என்பதை மட்டும் கவனித்தால் போதும். ஆனால், 16, 18 வயதிற்குட்பட்ட சிறுமிகள் வதியும் இல்லம் (ஹோம்) அப்படிப்பட்டதன்று. ஒரு குடும்பத்தைப் போன்றது. குழந்தைகளின் உடற்பாதுகாப்பு, குணவளர்ச்சி, நன்னடக்கை, சீலம், நேர்மை, வழக்கப்பழக்கங்கள், பத்தி இவற்றை எல்லாம் பெருக்குவதில் பெற்றோருக்கு எத்துணைப் பொறுப்பு உண்டோ, அத்துணைப் பொறுப்பு, சிறு பெண்கள் வதியும் இல்லத் தலைவிக்கும் உண்டு. பெற்றார் உற்றார்களைப் பிரிந்து, கல்வி கற்பதற்காக வெளியூர்களிலிருந்து வரும் பெண்கள், பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போவதைப்போல, "மாணவர் இல்லத்துக்குத்" திரும்பி வருகிறார்கள். அன்னாருக்கு இல்லத்தைப் போன்று வதியுமிடம் அவ்விடுதிதான். ஆக, அவ்வில்லத்தின் தலைவி அன்னாருக்குப் பெற்றோர்கள் நிலையில் இருக்கிறாள். தகப்பனுடைய கண்டிப்பும், தாயினுடைய அன்பும், உடன்பிறந்தாரது ஆதரவும் தலைவியினிடம் இருப்பதுடன், நல்லனவற்றைப் போதிப்பதில் குருவைப் போலவும் தலைவி இருத்தல் வேண்டும். இவ்வளவும் ஒருங்கு அமையப்பெற்ற ஒருத்திதான், ஓர் இல்லத்தின் தலைவியாக இருக்கும் தகுதி வாய்ந்தவள். நான்கைந்து குழந்தைகளைப்பெற்று வளர்ப்பவருக்கே எத்தனையோ துன்பங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அநேக இளம் வயதுடைய பெண்களையோ, ஆண்களையோ வைத்து நடத்துவது எத்துணைக் கடினமானதென்பது அங்கிருந்து நோக்கினவருக்கே தெரியும்.

கிருஷ்ணவேணியம்மாள், இந்த நூலில் அவர்களுடைய அனுபவத்தைச் செவ்வியமுறையில், தகுந்த தலைப்புகளின்கீழ், உயரிய தமிழில் விரித்துள்ளார். ஓர் இல்லத் தலைவிக்கு இன்றியமையாது இருக்கவேண்டிய குணநலங்கள் யாவும் இதில் தெளிவாய் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. மாணவர் இல்லம் வைத்து நடத்துபவருக்கு இஃதொரு சிறந்த வழிகாட்டியாகும்.

தலைவிக்கு இருக்கவேண்டிய முதன்மையான குணம் பொறுமை. மாணவிகள் எத்தனையோ தவறுகள் செய்வார்கள். அவற்றுள் சில, பொறுக்கமுடியாத பெரும் பிழைகளாயும் இருக்கும். மாணவிகள், தங்கள் குற்றங்களைக் குறைத்தும், பிறர் பிழைகளை ஒன்றைப் பத்தாக்கியும், பத்தை நூறாக்கியும் தலைவியிடம் முறையிடுவார்கள். அவ்வமயம் தலைவி இருசாராருடைய வார்த்தைகளையும் மிகப் பொறுமையுடன் கேட்டு, நடுநிலையுடன் நீதிவழங்கல் வேண்டும். அம்மையார் குறித்துள்ளபடி, பிழைகளைப் பெரிதாகப் பாராட்டாமல் விடுவது மட்டுமேயன்றி, மாணவிகளையும் ஒருவருக்கொருவர் பெருந்தகைமையுடன் விட்டுக்கொடுக்கும்படியும், மன்னித்துவிடும்படியும்,

பரந்த நோக்கத்துடன் மேலேறும்படியும் அறிவு புகட்டி அவர்களை நல்வழியில் பழக்கவேண்டும். தலைவி சிறு பிழைகளை எல்லாம் விசாரித்துக்கொண்டும், மாணவிகள் சொல்லும் அற்பச் செய்திகளை யெல்லாம் கேட்டுக்கொண்டும் தன் அருமையான காலத்தை வீணாக்குதல் கூடாது.

தலைவிக்கு இருக்கவேண்டிய இரண்டாவது குணம் எல்லாரையும் ஒரே முறையில் நடத்துவது. இந்நூலாசிரியர் மாணவிகளிடையில் உண்டாகும் சுயநல நட்பைப் பற்றிக் கூறியுள்ளார். இந்நட்பில் மாணவிகளிடம் பல மாறுபாடுகள் ஏற்படுங்கால், தலைவியார், ஏழைகள், செல்வர்கள் என்னும் வேறுபாடின்றி, எல்லாரையும் ஒரே விதமாக நோக்குவது மட்டுமேயல்லால், மாணவிகளையும் அப்படியே நடந்துகொள்ளுமாறு பழக்கவேண்டும்.

தலைவிக்கு இருக்கவேண்டிய மூன்றாவது குணம் உண்மை. விளையாட்டுக்காகவும், வேடிக்கைக்காகவும் பொய் சொல்லக்கூடாது. மன அடக்கமும் வேண்டும். ஒவ்வொரு மாணவியையும் கூர்ந்து கவனித்து, அவர்களுடைய நடத்தை, குணம், எண்ணம் முதலியவற்றைத் தெரிந்து அவரவர்களை நடத்தும் விதமாக நடத்தவேண்டும். இன்னும் தலைவிக்கு ஞானம் பத்தி முதலிய பல சிறந்த குணங்கள் இருத்தல்வேண்டும்.

மேற்கூறிய குணங்கள் யாவும் கிருஷ்ணவேணி அம்மையாருக்கு அமைந்திருந்ததினாலேயே, பதினெட்டு ஆண்டுகள் இந்து மாணவிகள் இல்லத்தின் பொறுப்பை ஏற்று நூற்றுக்கணக்கான மாணவிகளுக்கு உற்ற தாயாராகவும், சகோதரியாகவும், குருவாகவும் இருந்து அவர்களை நல்வழிப்படுத்தி வந்தார். இது பாராட்டற்குரியதாகும். அந்நிலையத்தில் இருந்த காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட அநுபவங்களை எல்லாம் இச்சிறு நூலாய் வெளியிட்டது நம்மவருக்கு அன்னார் செய்த அரிய பணி என்னலாம். பெண் கல்வி முன்னேறி வருகின்றது. இனி வருங்காலத்தில் மாணவிகள் நிலையங்களும் மிகுதியாகும். அந்நிலையங்களில் தலைவிகளாக வருபவருக்கு, அம்மையாரது அனுபவ நூல் மிகுந்த உதவியாயிருக்கும். உபாத்திமைத் தொழில் விரும்புபவர்கள் ஒரு பயிற்சிக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் ஆசிரியத் தொழிலுக்கு வேண்டியவற்றைக் கற்பது போல, நிலையத்தின் தலைமைப் பதவிக்கு வருபவர்களும் அதற்கேற்றவற்றைக் கற்கவேண்டுவது இன்றியமையாததாகும். அதற்கு அம்மையாரின் புத்தகம் மிக்க நலமளிக்கும் என்பதில் ஐயமில்லை. இறைவன் அருளால் இப்புத்தகம் பலருக்கும் பயன்படுமாக.

உள்ளுறை

நூற்பகுதி

நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிகள் சில

மகளிர் இல்லம்

1. தோற்றுவாய்

சான்றோர் பலர் வாழும் சென்னையைச் சார்ந்த பெத்துநாய்க்கன் பேட்டை, கொண்டித்தோப்பிலுள்ள "கிருஷ்ணபதும விலாஸ்" என்னும் எங்கள் வீட்டின் மேல்மாடியில் 1920-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 11-ஆம் நாள், திருக்குறளில் "தெரிந்து செயல்வகை" என்னும் அதிகாரத்தை யான் மிக்க ஊன்றிய கருத்துடன் படித்துக்கொண்டிருந்தேன். காலை பத்துமணி இருக்கும். எங்கள் தோட்டக்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து என்னிடம் நீட்டினான். அவ்வுறையின் மீது என் பெயரும், ஒருபுறம் D. P. I. என்னும் எழுத்துகளும் எழுதப்பட்டிருந்தன. அதில் அரசினர் அஞ்சல் தலை ஒட்டப்பட்டிருந்தது. அஃது என்னைப் பெரிதும் அச்சத்திற்குள்ளாக்கிற்று. "இது யாரிடமிருந்து வந்ததோ! இஃது எதைப் பற்றியதோ!" என மிக அஞ்சினேன்; என் கைகள் நடுங்கின! நெஞ்சம் விரைவாக அடித்துக்கொண்டது! இவ்வுணர்ச்சிக்கிடையில் அதை மெல்லெனத் திறந்து வாசிக்கத் தொடங்கினேன்.

அதில் என் மனத்தைக் கலங்கச் செய்யக்கூடிய ஒரு பொருள் எழுதப்பட்டிருந்தது. "இனி இச்சுமை நம்மேல் இறங்காது," எனச் சின்னாட்களாய்க் கவலையற்றிருந்த எனக்கு, அதிலிருந்த செய்தி இடி தாக்கிய

தெனவாயிற்று! ஒன்றும் தோன்றவில்லை. "நாம் படித்தறிந்தது உண்மைதானு," என நினைத்தேன்; இன்னுமொருமுறை படித்தேன். அப்போதும் அதில் எனக்கு ஊன்றிய நம்பிக்கை உண்டாகவில்லை. மறுபடியும் ஒவ்வொரு வார்த்தையாய்ப் பார்த்தேன். பின்புதான் "நாம் முதலில் படித்ததே உண்மை," என்னும் தெளிவுண்டாயிற்று. "இதற்கு என்ன செய்வது! என்ன முடிவுகட்டுவது!" என்பது எனக்குச் சிறிதும் புலனாகவில்லை. அவ்வமயம் தகப்பனுர் வீட்டில் இல்லை. கீழ்ச் சென்று அக்கடிதத்தின் பொருளை என் தாயாருக்கும் தங்கைக்கும் படித்துக் காண்பித்தேன். அஃது அவர்களையும் திடுக்கிடச் செய்தது. அத்தகைய பொதுத் தொண்டு ஒன்றை யான் மேற்கொள்வது என் தங்கைக்கு விருப்பமே. ஆனல், என்னைப் பிரிந்திருக்கப் பொருத என் தாயாருக்குமட்டும் அது முற்றும் விருப்பமில்லை. அவர், "இதற்கு என் செயலாம்! எங்ஙனமேனும் இதை ஒப்புக்கொள்ள நேரும்போலுள்ளதே!" என்றனர். உடனே யான், "ஏன் அப்படி? நமக்கு அதை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை என எழுதிவிட்டால் என்ன?" எனக் கூறினேன். பின்பு அவர்கள், "தந்தையார் வந்தபின்பு கலந்தெண்ணலாம்," என இயம்பினர்கள். அத்துடன் அக்கடிதத்தை வைத்துவிட்டேன்.

ஆயினும், அதைக் குறித்துச் சிந்தியாமல் இருக்க என்னல் இயலவில்லை. "இக்காரியம் நம்மைச் சாரா வண்ணம் தடுத்துக் கொள்ளல் யாங்ஙனம்? இப்பொறுப்பு நம்மேல் சாரின் என்செய்வது! இச்செயலை நாம் தக்கவாறு இயற்றவேண்டுமே! இதற்கேற்ற அறிவும் ஆற்றலும் நமக்கேது! இதை ஏற்றுக்கொண்டு பழியைப்

பெறுவதைக்காட்டிலும், இதில் நுழையாமலிருத்தல் நல்லதன்றோ! ஏன் நாமாகச் சென்று துன்ப வலையில் சிக்கிக் கொள்ளவேண்டும்! வீட்டிலேயே இருந்து பல நூல்களையும் ஆராய்ந்துகொண்டு இன்பத்துடன் காலங் கழிக்கலாமே! அவண் காரியங்கள் பல இருக்குமாதலின், நூலாராய்ச்சிக்குப்போது கிடைப்பது அருமையாகுமே!" என்னும் எண்ணங்கள் பல என் உள்ளத்தில் உழன்று கொண்டிருந்தன. படிக்கவும் மனமெழவில்லை. யான் சிறிது நேரம் உலவிக்கொண்டும், சிறிதுநேரம் படுத்துக் கொண்டும் இருந்தேன். ஆயினும், நெஞ்சம் கடலலை யென அலைந்துகொண்டே இருந்தது. தந்தையார் வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருந்தேன்.

தந்தையார் வீடுபோதருங்கால், இரவு ஏழுமணி யிருக்கும். அவர் சிறிது இளைப்பாறியவுடன் யான் அக் கடிதத்தை அவரிடம் கொடுத்தேன். அதைப் பார்த்து அவரும் சில விநாடிகள் ஒன்றும் பேசிற்றிலர். பின்பு அவர், "நாம் இக்காரியத்திற்கு உடன்படாதபோது ஏன் அரசியலார் இங்ஙனம் எழுதியுள்ளனர். இதை எங்ஙனமேனும் தடுத்துக்கொள்ளுதல் வேண்டும். இருக் கட்டும், இன்னும் இருபது நாட்கள் இருக்கின்றன அல்லவா? இதைப்பற்றி நன்கு எண்ணிப் பார்த்து, இரண்டு நாட்களில் விடை அளிக்கலாம்," எனப் பகர்ந்தனர். அதைப் பற்றிய பேச்சு அத்துடன் நின்று விட்டது. ஆயினும், அதன் நினைவு மட்டும் என் மனத்தைவிட்டு நீங்கிற்றிலது. இறுதியில் 'இறைவன் நினைவின்படி நடக்கட்டும்' என வாளா இருந்தேன். அக்கடிதத்தின் பொருள்: "பண்டிதை-S. கிருஷ்ண வேணியம்மாள், 1920-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல் நாளில் வந்து, திருவல்லிக்கேணி ஐஸவுஸ் தெருவி

லுள்ள இந்து நிலையத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்," என்பதாகும்.

இக்கடிதம் கிடைத்து இரண்டு நாட்கள் கழித்து இதை அறிந்த பெரியவர்களுள் சிலர், என் தந்தையாரிடம் போந்து, "உம்மகளாரை இந்து நிலையத்திற்குத் தலைமை வகிக்குமாறு கல்வி இலகா டைரக்டர் கேட்டிருப்பதாய் நாங்கள் கேள்வியுற்றோம். உங்கள் கருத்து யாது?" என வினவினர். "மிக்க பொறுப்புள்ள அக்காரியத்தில் என் மகளை நுழைக்க எனக்கு விருப்பமில்லை," எனத் தந்தையார் அவர்கட்கு விடையளித்தனர். அவர்கள் அத்துடன் சென்றார்களில்லை. "இவ்வேலை உம் மகளார்க்குக்குப் பொருத்தமுடையதாகும். படித்து விட்டு வீணே காலங்கழிப்பதில் பயன் என்ன? நீர் இதற்கு ஒப்புக்கொள்ளுவதே தகுதி," என வற்புறுத்திக் கூறினார்கள். என் தந்தையாரோ, அதை மறுக்கப் பல முறைகளைக் கையாண்டனர். பயன் கிடைத்திலது. ஆதலின், என் தந்தையார் அப்போதே அவர்கள் கருத்தை எனக்கு எடுத்தியம்பினர். யானும், "என்னால் அக்காரியம் முடியாது," என மிக்க ஊன்றுதலுடன் தடுத்துப் பார்த்தேன். அது கைகூடவில்லை. இறுதியாக அவர்கள் இயம்பிய ஊக்கவார்த்தைகள், என்னையும், என் அருமைத் தந்தையாரையும் நிலையவேலையை ஒப்புக்கொள்ளுமாறு செய்தன.

2. நிலைய நுழைவு

திருவல்லிக்கேணியில், பார்ப்பனரல்லாத மகளிர்களுக்கு "இந்து நிலையம்" என்னும் பெயர் வாய்ந்த உணவுவிடுதி ஒன்று 1915-ஆம் ஆண்டு அரசாங்கத்தாரால் நிறுவப்பட்டு இதுகாறும் நடைபெற்றுவருவது பலர் அறிவர். அது "லேடி விலிங்டன் கலா சாலை"யைச் சார்ந்தது. அந்நிலையத்திற்கு முதன்முதல் மிஸ். சண்முக அம்மாள் (Asst. Inspectress of Schools-Retired) அவர்கள் தலைமைவகித்திருந்தார்கள். அவர் தம் முதுமையினால் அந்நிலையத்தை விட்டு விலகக் கருதிய போது, அவ்விடத்திற்கு வேறொருவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு கல்வித்துறை மேல்அலுவலாளரைச் சார்ந்தது. சகோதரி—ஆர். எஸ். சுப்புலட்சுமி அம்மாள் B.A. L. T. முதலிய சில சகோதரிகள் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு என்னைப் பன்முறையும் கேட்டிருந்தார்கள்.

எனக்குத் தக்கவயது வந்தபின்பு, என் வீட்டாரோடு இருத்தலும், அடிக்கடி சங்கங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுதலும் தவிர, அயலாரோடு பழகி அவரவர் குணநலங்களை அறிந்துகொள்ளும் முறையில் யான் சிறிதும் பயின்றிருக்கவில்லை. ஆதலின், அப்பொறுப்பின் தன்மை இன்னதென்றுணரும் பான்மை அப்போது எனக்குண்டாகவில்லை. அவர்கள் நிலையத்தைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம், யான், "அத்தொழில் நம்மாட்டுச் சாருங்கால் பார்த்துக்கொள்ளுவோம். அதைச்செய்ய நம்மால் முடியாதா?" என்னும் அசட்டை எண்ணத்துடன் இருந்துவிட்டேன்.

ஒருநாள் என் அருமைத் தந்தையாருடன் சில பொருள்களைக் குறித்துப் பேச நேர்ந்தது. அவ்வமயம்

இந்நிலையச் செய்தியும் என் நினைவிற்கு வந்தது. அதை அவருக்குத் தெரிவித்தேன். அவர் சில விநாடிகள் சிந்தித்து, "அது மிக்க கடின காரியம். பல பொறுப்புகள் உன்னைச் சாரும். குழந்தைகள், பெற்றோர், பொதுமக்கள் மேலலுவலாளர்கள் பலருக்கும் மனநிறைவு உண்டாகுமாறு நீ நடந்துகொள்ளுதல் வேண்டும். அதற்கு மிக்க உலக அறிவு தேவை. சிறு குழந்தை இயல்பு வாய்ந்த உன்னால், அப்பொறுப்பைத் தாங்கல் இயலாது," எனக் கூறினர். 'இளம்பிள்ளை பயமறியாது' என்றிருந்த எனக்கு அப்போதுதான் அச்செயலினிடத்து அச்சம் உண்டாயிற்று. ஒருகால், அப்பொறுப்பு நம்மைச் சார்ந்துவிடின் என் செய்வது! என நினைக்குந்தோறும் என் மனத்தில் ஒருவிதக் கலக்கம் தோன்றும். பின்பு நிலையத்தொண்டை ஏற்றுக்கொள்ளுமாறு என்னைக் கேட்பவருக்கெல்லாம், "அச்செயல் என்னால் இயலாது," என்றே விடை இறுத்து வந்தேன். என் மறுப்பை அறிந்த கல்வித்துறைத் தலைவர், 1920-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வேறொரு அம்மையாரை அந்நிலையத்திற்குத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தனர்.

அச்செய்தி எனக்கெட்டியதும் யான் அடைந்த மகிழ்வு அளவிடற்பாலதன்று. "இக்கவலை நம்மை விட்டொழிந்தது," என மிக்க மகிழ்வுடன் இருந்தேன். இம்மகிழ்வைத்தான், ஆகஸ்டுத் திங்கள் 11-ஆம் நாள் அரசியலாரிடமிருந்து கிடைத்த கடிதம் அடியோடு தொலைத்துவிட்டது.

அக்கடிதத்திற்குப் பின்பு எப்போதும் அதுவே நினைவுதான். அப்போதைக்கப்போது பெருந் தியக்கமும் உண்டானது. நிலையம் செல்வதற்கு முதல் நாள் இரவு நீண்டநேரம் என் கண்கள் துயில்கொள்ளவே

இல்லை. அச்சமும் வருத்தமும் என்னை அலைக்கழித்தன. யான் 1920-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல்நாள் காலை 6-மணிக்கு என் சுற்றத்தாரிடம் பிரியா விடைகொண்டு, என் தாயாருடன் நிலையத்தை அடைந்தேன். அவ்வமயம் இந்துநிலையம், தற்போதைய பெஸண்டு சாலையில் இப்போதிருக்கும் பணிநிலையத்திற்குப் பக்கத்தில் இருந்த இரண்டு சிறு இல்லங்களில் அமைந்திருந்தது. முதலில் யான் மேற்கூறிய பெண்கள் நிலையத்திற்குத் தலைவியராய் இருந்த சகோதரி, ஆர். எஸ். சுப்புலட்சுமியம்மாளைச் சென்று பார்த்தேன். அவ்வம்மையார், அவ்வமயம் இந்துநிலையத்திற்குத் தலைவராய் இருந்தவரை எனக்கு அறிமுகப்படுத்தினர். அவண் நடந்துகொண்டிருந்த சமையலும், திரண்ட மாணவிகளின் கூட்டமும் எனக்கு அச்சத்தை விளைவித்தன. அவ்வச்சத்தை உள்ளடக்க என்னால் இயலவில்லை. ஆதலின், சகோதரி சுப்புலட்சுமியம்மாளிடம். "இந்நிலையத்தின் பொறுப்பை ஏற்று நடத்துவது மிக்க வருத்தமாயிருக்கும் போலிருக்கிறது!" எனப் பகர்ந்தேன். உடனே அவர், "அஞ்சாதீர், இப்போதென்ன முழுகிவிட்டது! ஏதோ ஒரு ஆறு திங்கள் பாருங்கள். உம்மால் முடியவில்லையேல், விட்டுவிட்டால் போகிறது," என்றார். அவ்வார்த்தைகள் என் மனத்தைத் திருத்தி, எனக்கு ஒருவித வீரத்தை ஊட்டின. அவ்வீரம் சில வார்த்தைகளை வெளித்தள்ளின. "என்ன இறுதியில் இவ்வாறு சொல்லிவிட்டீர்கள்! அங்ஙனம் ஆறு திங்கள் பார்த்து விட்டுவிடுவதற்கு, யான் ஏன் ஒரு தொழிலை மேற்கொள்ள வேண்டும்? ஒன்றில் நுழைந்தால் சில ஆண்டுகளேனும் ஊக்கத்துடன் உழைக்கவேண்டாவா? அங்ஙனமின்றேல், முதலிலேயே அதை மேற்கொள்ளுதல்

கூடாது. 'இன்னார் நிலைய வேலையை ஏற்றுச் சில திங்கள் பார்த்து வன்மையற்று விட்டுவிட்டார்,' என்னும் இழி பெயரைப் பெற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை," என்றேன். இவற்றைச் செவியேற்ற அவ்வம்மையார், "அங்ஙனமாயின் சமர்த்துடன் பார்ப்பதற்கென்ன," என்றனர், அவர்களுடைய அவ்வார்த்தைகளே பதினெட்டாண்டுகள் அப்பொறுப்பைத் தாங்க எனக்கு வன்மை ஈந்தது போலும்!

அன்று மாலை அந்நிலையத்தைப் பார்த்துக்கொண்டிருந்த தலைவியார் அந்நிலையத்தின் பொருள்களை என்னிடம் ஒப்புவித்தனர். அவ்வமயம் நிலையத்தில் குழந்தைகளின் பெயர்களைக் குறித்த புத்தகம் ஒன்றும், பித்தளை மர ஏனங்களைப்பதிந்த புத்தகம் ஒன்றும்தான் இருந்தன.

என் தாயார் நிலையத்தில் என்னுடன் மூன்று திங்கள் இருந்தனர். அவர்கள் காட்டிக்கொடுத்த முறையைக்கொண்டு உணவின் நிலைகளை அறிந்து கொண்டேன். உலகியல் அறிவு சிறிதும் அறியாத எனக்கு, அக்குழந்தைகளை ஒழுங்குடனும் மகிழ்வுடனும் நடத்துதற்கு இறைவனே தோன்றாத்துணையாயிருந்து வழிகாட்டித் தந்தான் எனத்தான் கூறல் வேண்டும். நாளுக்குநாள் மாணவிகளின் எண், பெருகிக்கொண்டே வந்தது. நிலையமும் செவ்வனே நடைபெற்றது.

---

3. நிலையத்தை எதற்கு ஒப்பிடலாம்?

உலகில் வழக்க ஒழுக்கங்கள் வேறுபட்ட மக்கள் பலர் ஒன்றுசேர்ந்து வாழும் பொது இடங்கள் பல உண்டு. அவற்றுள் கல்விகற்கும் மாணவிகள் குழுமி வாழும் நிலையமும் ஒன்று. அஃதொரு சிறு உலகம். பெரிய உலகில் நடைபெறும் வேறுபட்ட செயல்கள் யாவற்றையும் அவண் காணலாம். அஃது, உலகறிவைத் தெளித்துக்காட்டுதற்கு, பெரிய உருவைச் சிறு வடிவில் தெளித்துக் காட்டும் ஓர் கண்ணாடி எனின் மிகையாகாது. அச்சிறு உலகின் வழியாக அங்குறையும் மாணவிகளும், தலைவியாரும் அறிவன அளவிறந்தன.

கல்வி கற்கும் மாணவிகளுக்கு, பொருள் குறைந்த குடும்பங்களில்நேரும் பொருள் முட்டுப்பாடு, நேரம் தவறிய உணவு, தங்கை தம்பிகளைத் தூக்கித்திரியும் தொல்லை, வீட்டுவேலைகளின் பெருஞ்சுமை முதலியன நிலையத்தில் உண்டாதல் இல்லை. அஃதன்றியும், வயதிலும் கல்வியிலும் தன்னொத்த பெண்களோடு கூடிக் குலாவல்-தத்தம் பருவத்திற்கேற்ற விளையாட்டுகளில் போதுபோக்கல்-வேடிக்கை வார்த்தைகளில் களித்தல் ஆகிய இன்பங்கள் பல, அவர்கட்கு ஏற்படுகின்றன.

அவண் வதியும் சிறுமியர், தமக்கு அமைந்திருக்கும் இத்தகைய இன்ப வாழ்வை உண்மைக் கண்கொண்டு காண்பரேல், அதன் அருமை அவர்கட்குப் புலனாகாமல் இராது. ஆயினும், அதிகாலையில் படுக்கையைவிட்டெழுந்திருத்தல்—அவரவர் காரியங்களை வேளை தவறாமல் அவரவரே செய்துகொள்ளல்—உணவு, சிற்றுண்டிகள் முதலியவற்றைக் கண்டபோதெல்லாம் உண்ணமுடியாமலிருத்தல்—அடிக்கடி வெளிச்செல்ல முடியாமை—

குறித்த நேரத்திலேயே படித்தல் முதலியன அவ்விளமையில் அவர்கட்குத் துன்பங்கள் போன்று தோன்றினும், அவை அவர்களுடைய பிற்கால வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவனவாகும். ஆதலின், அவற்றை அறிவுடையவர் துன்பங்கள் எனக் கொள்ளமாட்டார் என்பது துணிவு. சிறுமியரும் இந்நிலையக் கூட்டுறவினால் பிற்கால வாழ்க்கையில் தாம் அடையப் போகும் நலங்களை ஊன்றி நோக்குவரேல், அச்சிறு செயல்கள் அவர்கட்குத் துன்பங்களாய்த் தோன்ற. தம் கூர்ந்த மதிகொண்டு சோம்பல் விழிப்பின்மைகளை ஒழித்துவிடின், பெரும்பான்மையும் அத்துன்பங்களி லிருந்து விடுபடலாம். ஆனால், சிறுமிகளுக்கு, நிலையத்தில் உள்ளவரை அதன் அருமை பெருமைகள் பெரும்பான்மையும் மனத்தில்படுதல் இல்லை. வெளிப்புறம் போந்தபின்பே, அவை விளக்கமுறும். "வெய்யிலில் காய்ந்தபின்பன்றோ நிழலின் அருமை அறிதல் கூடும்."

இத்தகைய நிலையம், கல்விக்கழகம், அறிவகம், ஒழுக்கஉறையுள் எனப் பல பெயர்களைத் தாங்குதற்கும் ஏற்புடையதே.

கல்விக் கழகம் : இதற்கு அறியாமையைக் கல்வி எறிந்து அறிவைப் பெருகச் செய்யும் இடம் எனப் பொருள் கூறலாம். பலர் சேர்ந்து பொருள்களை உய்த்துணரும் இடத்திற்குத்தானே கழகம் எனக் கூறுவது! நிலைய மாணவிகளுக்கு, உண்ணல் உடுத்தலில் கழியும் சிறுபொழுது தவிர, மற்ற முழுக்காலமும் கழிவது எதில்? நூல்களிலேயே அன்றோ! அந்நூல்களே அல்லவா, பொருள்களின் இயல்பு, அயல்நாட்டின் தன்மை, பண்டைக்காலப் பண்பு முதலியன அவர்கள் உணர்தற்குக் கருவிகளாக உள்ளன? அவற்றைத் தம்

வகுப்பு மாணவிகள் சிலரோடு சேர்ந்து கற்குங்கால் ஏற்படும் தெளிவும், இன்பமும் அளவிடற்பாலனவல்ல என்பதை அம்மாணவிகளே உணர்வார்கள் என்பது திண்ணம். இதற்குக் கல்விக் கழகமாகிய நிலையம் தவிர வேறு இடம் பயனளிக்குமா?

அறிவகம்: நிலைய மங்கையர் கேவலம் நூலறிவோடுமட்டும் நிற்பவரல்லர். அச்சிறு உலகில் வதியும், குலத்திலும், குணத்திலும், இடத்திலும், செயலிலும், படிப்பிலும் வேறுபட்ட மற்ற மாணவிகளின் தன்மைகளும், அவண் வரும் பெற்ருேர் மற்ருேர்களின் பேச்சும் முறைகளும் அவர்தம் மனத்தில் நன்கு பதிகின்றன. இவற்ருல் அவர்கள் அடையும் உலக அறிவு வரையறுக்கற்பாலதோ? இவ்வுலக அறிவன்ருே யாவற்றிலும் சிறந்தது! இவ்வறிவு, அவர்கட்குக் குணத்திஞல் உயர்ந்தவர் தாழ்ந்தவர்களின் உண்மை நிலைகளை அறிய இடந்தருதல் மட்டுமேயன்றி, இயன்ற மட்டும் உயர் பண்புடையார் வாழ்க்கையைப் பின்பற்றும் இயல்பையும் உண்டாக்குகின்றது. இதஞல், மாணவிகள் சிறந்த அறிவணியைப் பூணுகின்ருர்கள். இஃதே உண்மை அறிவுடைமையாகும். இம்முறையில் இதை அறிவகம் எனக் கூறத் தடை யாது?

ஒழுக்க உறையுள்: ஒழுக்கத்தின் உருவமே நிலையம் என இயம்பல் மிகையாகாது. ஏன்? வாழ்க்கையைக் காலந் தவருது ஒழுங்குமுறையில் நடத்துதலைத் தானே ஒழுக்கம் எனப் பகருகிருேம். முற்குறிப்பித்தவாறு நிலையத்தில் உண்ணல், உறங்கல், எழுதல், படித்தல், காரியஞ்செய்தல் யாவும் காலந்தவருது நடைபெறல் இன்றியமையாததன்ருே? பெரியாரை எதிர்த்துப்பேசல், பொய்யுரைத்தல், மற்றவரோடு வீண்

வார்த்தையாடல், சண்டையிடல், கண்டவற்றிற்கெல்லாம் காசை இறைத்தல், கடன் வாங்குதல், வரம்பின்றி நடத்தல் முதலிய திருவிளையாடல்கள் இங்கு நடைபெறல் இயலுமா? இங்ஙனம் இளமையிலேயே பழகிய பழக்கம், வாழ்க்கையில் அவர்களை ஒழுங்குமுறையில் நிறுத்துமன்றோ? இவ்வொழுங்குமுறையன்றோ, இம்மை மறுமைகளுக்கு இன்பத்தையூட்டும் கருவியாகிறது!

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என்பதை மறுப்பவர் யாவர்? இத்தகைய நலங்களை அளிக்கும் இடந்தானே சான்றோர் மதிக்கும் ஒழுக்க உறையுளாகத் திகழக்கூடும்!

குருகுலம்: நிலையச் சிறுமிகளின் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்தும் வைத்து அவர்கட்கு அப்போதைக்கப்போது இன்முகத்துடன் அறிவு புகட்டித் தம் உரிய மக்களைப்போன்றே அவர்களைக் காத்துவரும் தலைவியாரும், அவரைத் தமக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் வளர்ப்புத்தாயாரெனக் கருதும் மாணவிகளும் தாயும் குழந்தைகளும்போன்று இரவும் பகலும் ஒருங்கு உண்டு, ஒருங்கு உறையும் நிலையத்தைக் குருகுலம் என்னுது வேறென்னென்றியம்புவது!

அவ்வளர்ப்புத்தாயார் உணவிலும் உடையிலுமே கனிவுகாட்டும் தாயாராக மட்டும் இருக்கமாட்டார். உணவளிப்பதில் அன்னையாராகவும், கல்வி போதிப்பதில் தந்தையாராகவும், விளையாட்டிலும், விளையாட்டுப் பேச்சிலும் தோழியராகவும், அறிவு, ஒழுக்கம், கடவுள் அன்பு முதலியவற்றை ஊட்டுவதில் குருவாகவும் விளங்குவார். அவர் நடந்துகாட்டும் முறைகளே குழந்தைக

ளின் சீர்மைக்கு அடிகோலுவனவாகும். செல்வர், ஏழைகளை ஒரே நிலையில் நடத்துதலும், அக்குழந்தைகள், நிலையத்தைப் பெரும்பான்மையும் தங்கள் வீடு போன்று நினைத்து இன்புற்று இருத்தற்கு முயலலும், பெருந்தகைமை வாய்ந்த தலைவியாருக்குக் கடமைகளாய் இருக்கும்.

தம் பொறுப்பை நன்குணர்ந்த தலைவியார், குழந்தைகளின் இனிய இயல்பையும், பெற்றோர், தம் அருமை மக்களைத் தம்மிடம் அடைக்கலமாக ஒப்புவித்திருக்கும் உயர்நிலையையும், அவர்களின் கல்வி, அறிவு, ஒழுக்கம், பிற்காலச் சீர்மை முதலியன தம்மைப் பொறுத்திருக்கும் தன்மையையும் உன்னி உன்னி, அவற்றிற்கேற்பத் தொழில் புரிவார். அவர்களைக் கண்டித்தல், தண்டித்தலைக் காட்டிலும், அவர்களிடம் காட்டும் அன்பே விஞ்சியிருக்கும். இதை நன்குணர்ந்த மாணவிகளும் தலைவியார் மாட்டு மிக்க மதிப்பையும் பத்தியையும் பாராட்டுவார்கள். உடல் வளர உணவும், அறிவு ஓங்க நல்லுரைகளும், உயிர் பண்புறப் பத்தி நலனும் ஈந்து, மாணவரை வாழ்வுறச் செய்யும் நிலையத்தின் மாண்புதான் என்னே! என்னே!

உயர்ந்த பட்டக்கல்வியைப் பெறும் கல்லூரிகளிலும் மாணவர் இத்தனை பயன்களைப்பெற இயலாதென்பதை அறியார் உளரோ? உண்மை ஒழுக்கத்தை ஊட்ட முற்படாத கல்வியன்றோ நம் நாட்டின் சீர்குலைவிற்குக் காரணம்! அக்குறையை நீக்கி நற்பண்புகள் பல போதித்தற்கு, மாணவ மாணவிகள் உறையும் நிலையமே முன்னிற்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் கல்வி முற்றுப்பெறுவதாகும். இதற்

குத் தக்க வசதியும் வாய்ப்பும் மாணவர் நிலையங்கள் தவிர மற்ற இடங்களில் கிடைத்தல் அருமை.

இங்ஙனம் இளைஞரை முற்போக்கில் உருப்படுத்தும் நிலையம், பழைய குருகுல வாழ்வின் பண்பை நினைப்பூட்டுமன்றோ? பழமையைக் காட்டிலும் பல சிறப்பியல்புகளைக் காணும் புதுமையில், மழுங்கிக் கிடக்கும் இம்மாண்பும் காணப்பெறின், எத்துணைச் சீரியதாகும்! இம்மாண்பிற்கு உறையுளெனத் திகழ்வது மாணவர் நிலையமே யன்றோ? இன்னும் ஈண்டுப் பகரவேண்டுவன பல உள. விரிவிற்கு அஞ்சி விடுத்தாம்.

இவ்வாறு தம் பொறுப்பை நன்குணர்ந்த தலைவியாரும், தலைவியாரின் உயர் எண்ணத்தை உய்த்துணர்ந்த பிள்ளைகளும் சேர்ந்துவாழும் நிலையம், ஏன் பழைய குருகுல வாழ்வாகத் திகழாது? இத்துணைச் சிறப்புகள் பல வாய்ந்த நிலையம் பொதுமக்களின் மதிப்பையும், பெற்றோரின் மகிழ்வையும், மேலலுவலாளரின் அன்பையும் பெற்று இலங்கும் என்பது திண்ணம். இது நிற்க.

---

4. நிலையத்தில் என் முதல் அனுபவம்

இத்தகைய நலங்கள் பல வாய்ந்த நிலையங்கள் பல வற்றுள் ஒன்றாகிய இந்துநிலையத்தின் பொறுப்பை யான் ஏற்றுக்கொள்ளும்போது, நிலையத்திலிருந்த மங்கையர் ஏறக்குறைய இருபதுபேர். அவர்களுக்கு எவ்வளவு அரிசி, பருப்பு, காய்கறிகள் சமைத்தல் என் னும் குறிப்புப் புத்தகம் ஒன்றும் அங்குக் காணப்படா மையின், அதை வரையறுத்தல் எனக்கு மிக்க துன்ப மாகவே இருந்தது. முன் குறிப்பித்தவாறு பெரிய குடும்பத்தை நடத்திய என் தாயார் உதவியால் இதை அறிந்துகொண்டேன். அதன் பின்பு அதன் தன்மை எனக்கு நன்கு புலனாயிற்று; அப்போது எனக்கு வயது ஏறக்குறைய இருபத்தாறு. அவணுள்ள பெண்களுள் சிலர், மூன்று நான்கு ஆண்டுகள்தாம் என்னிலும் குறைந்தவராக இருந்தனர்.

பொதுஇடங்கள் ஒழுங்குமுறையில் நடைபெறு தற்குச் சிற்சில கோட்பாடுகள் இன்றியமையாதனவே யாயினும், முதன்முதலில் நிலையத்தின் முறைகள் எனக் குத் தெளிவாகத் தெரியாமையின், சின்னாட்கள் வரை யும் கோட்பாடுகள் ஒன்றிலும் யான் நுழையவே இல்லை; அவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாய்ப் பேசலிலும், சில பேரை ஒன்றாய்க் கூட்டி வார்த்தை யாடுதலிலுமே காலங் கழித்தேன். இச்செயல், நிலையக் கோட்பாடுகளின்தன்மை, முன்னிருந்த உணவின்நிலை, மாணவிகளின் நட்பின் போக்கு, நாகரிகமுறை, அவர்கள் நிலையத்தில் மாட்டுக்கொண்டுள்ள எண்ணம் முதலிய வற்றைப் பெரும்பான்மையும் அறிந்துகொள்ளுமாறு எனக்கு உதவி செய்தது.

பொது நிலையங்களில் தலைமை ஏற்றுத் தொழில் புரிதல் மிகக்கடினம் என்பதை அறிவுடையோர் அறிவர். ஒரு குடும்பத்தில் உள்ள சிலரே, ஒரே கருத்தையும் ஒரே செயலையும் உடைத்தாயிருத்தல் அருமையெனின், வழக்க ஒழுக்கங்கள் வேறுபாடுடைய பற்பல இடங்களிலும் பற்பல குடும்பங்களிலும் இருந்துவந்த குழந்தைகள் யாவருக்கும் கருத்தும் செயலும் எங்ஙனம் ஒரே தன்மையதாய் அமையக்கூடும்?

மகளிர்நிலையத்தில், இன்னுமொரு துன்பமும் உண்டு. அவரைப்பற்றி அண்டை அயலார் வம்பளக்காதவாறும், மற்றவரின் குறும்பாகிய அம்புகள் அவர்கள்மேல் பாயாவண்ணமும், அறிவுடையவர் அம் மாணவிகளைக் குறை கூருதவாறும் நோக்கிக்கொள்ளல் வேண்டும். இன்றேல், நிலையத்திற்கு மதிப்பு உண்டாதல் அருமையினும் அருமை.

அழுக்காறு என்னும் பேய், எங்கும் எப்போதும் நடையாடல் உண்டன்றோ? அது, யான் இந்துநிலையத்தின் பொறுப்பைத் தாங்கியவுடன் சிலர்மேல் குடி ஏறியது; அச்சிலர், இது குற்றம், அது குறை எனப் பேசி, எனக்கு மிகத் தொல்லை கொடுக்குமாறு சில குழந்தைகளைத் தூண்டிவிட்டனர். அவர்கள் சொற்களின்பாற்பட்ட மகளிர், என்னிடம் வேறுபாடுடையவராகவும், வேறு சிலர், உண்மை அன்புடையவராகவும், மற்றுஞ்சிலர், அன்புடையவர்போன்று நடிப்பவராகவும், வேறுசிலர், பொதுத்தன்மை உடையவராகவும் ஒழுகிக் கொண்டனர். இங்ஙனம் நிலையத்தில் நான்கு பிரிவுகள் இருந்தன. ஒருகூட்டத்தைக் காணில் மற்றொரு கூட்டத்திற்குப் பிடிப்பதில்லை. ஒரு குழுவிற்குப் பின் இன்னொரு குழு புறஞ்சொல்லுதலும் உண்டு. அப்போதைக்

கப்போது அவர்களுக்குள் சிறு சண்டைகளும் ஏற்படும். ஆயினும், எட்டு ஒன்பது அகவை (வயது) உடைய சிறுமிகளை, மூத்த மாணவிகள் அன்புடன் நடத்தி, அவர்கள் வேலைகள் யாவற்றையும் தாங்களே பார்த்துக் கொள்ளல், நோயுற்ற காலத்தில் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்ளல், துணிகளையும், மற்றப் பொருள் களையும் ஒழுங்காக வைத்தல் முதலிய சில நற்பழக்கங் களும் அவர்களிடையே அமைந்திருந்தன. அந்நற்செயல் களுக்காய் அடிக்கடி அவர்களைப் புகழ்ந்து கூறுதலும், தீய செயல்களை நேராகக் கடிந்துரையாமல், பொதுப்பட சில அறிவுரைகளை அவர்களுக்கு நாடோறும் இனிமை யாய் எடுத்துரைத்தலும் கையாளப்பட்டு வந்தன. அவை அவர்களுக்கு மிக்க பயனளித்தனவென்றே பகரு தல் வேண்டும். இக்கொடிய இயல்புகளுள் பாதிப்பங்கு சில மாதங்களில் அவர்களிடமிருந்து ஒழிந்தது. கூடிய மட்டும் அன்பும் ஒற்றுமையும் அவர்களிடையே தவழ்ந் தன. முன்பு என்னிடம் வேறுபட்டவரே பின்பு மிக்க அன்பு பாராட்டத் தொடங்கினர்.

முன் பகர்ந்தவண்ணம், யான் பொது இடங்க ளில் நடந்துகொள்ளும் முறை தெரியாதவளாயும், விரிந்த அறிவும், அப்பொறுப்பைத் தாங்கும் வன்மையும் அற்றவளாயும் இருப்பினும், அங்குச் சென்றவுடன் எனக்கு அவ்வேலை எளிதாகவும், இன்பமாகவும் தோன் றிற்று. அதற்குக் காரணம் சுற்றத்தினர் பலர் நிறைந்த பெரிய குடும்பத்தில் பழகிய பழக்கமும், இறையருளுமே என்பது என் கருத்து.

சின்னாட்களில் அந்நிலயத்தின்மாட்டு எனக்கு ஊன்றிய பற்றுண்டாயிற்று. அப்பற்றினால், "நில

யத்தை ஒற்றுமைவாய்ந்த ஒரு பெரிய குடும்பத்தைப் போல ஒழுகச்செய்தல், குழந்தைகளைச் சொந்த உறவி னரைப்போல் நடத்துதல், அவர்கள் ஒழுக்கத்தில் உயரு மாறு பழக்குதல், மற்றப் பொது இடங்களைவிட இந் நிலையத்தைச் சீரிய நிலையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும்," என்னும் உயர்ந்த எண்ணங்கள் எனக்குத் தோன்றின. அதற்கேற்ப நடந்துகொள்ளு தற்குப் பொறுமையும் அறிவும் இறைவன் அளித்த தற்கு என்றும் கடமைப்பாடுடையேன்.

———

5. பெற்றோர்

தென்னிந்தியாவிற்குத் திலகமெனத் திகழும் சென்னையிலும், ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு "பெண்களுக்குக் கல்வி கற்பித்தல் பெரும்பிழை" எனக் கருதப்பட்டது. சிறிது காலத்திற்குப்பின்பு பெண்குழந்தைகளுக்குப் பத்துவயதுவரை கல்வி போதிக்கலாம் என்றும், இன்னும் சின்னாட்கள் செல்லச் செல்லப் பெண்கள் மங்கைப்பருவம் அடையுமட்டும் பாடசாலை சென்று படிக்கலாம் என்றும் சிறிது சிறிதாகப் பெண்கல்வி முன்னேற்றமடைந்ததைப் பலர் அறிந்திருப்பர். 1922-ஆம் ஆண்டு வரையுங்கூட, "வயது வந்த பெண்களை நிலையத்தில் விட்டுப் படிக்கவைத்தல் இழிவு," என்று எண்ணினர். "அன்றியும், உண்ண உணவும் கட்டத் துணியும் அற்றவரும், தாழ்குலத்தவருமே நிலையத்தில் இருந்து படிப்பர். அத்தகைய பெண்களை நற்குடும்பத்தைச் சார்ந்தவர் மணஞ் செய்துகொள்ள லும் அருமை. அது நம் குலத்திற்கே இழிவைத் தரும்," என்னும் பேச்சுகள் வழங்கிவந்தன. அதனால், அரசாங்கத்தார் கொடுத்த உபகாரச்சம்பளம் சிலவற்றிற்கும் போதுமான சிறுமிகள் கிடைத்தல் அரிதாயிற்று. இரண்டாவது வகுப்பிற்குத் தகுதியற்ற பெண்களையும் வலுவில் அழைத்துவந்து கல்வியில் நுழையச் செய்த காலமும் அதுவே.

'பெண்கல்வி பெண்கல்வி,' எனக்கதறிய காலம் எங்ஙனம் நகரங்களில் மலையேறிவிட்டதோ, அங்ஙனமே நிலையத்தில் சிறுமிகளை விடுத்துப் "படிப்பியுங்கள் படிப்பியுங்கள்," என இரந்த காலமும் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பே வானேறிவிட்டது. அதி

விருந்து பெற்றோர் தம் பெண்குழந்தைகளின் உபகாரச் சம்பளத்தின்பொருட்டு அணிஅணியாக என்னிடம் போதரத்தொடங்கினர். இவர்களுள் உயர் குலத்தினர், தாழ்குலத்தினர், செல்வர், ஏழைகள் என்னும் வேறுபாடு காணப்பட்டிலது. யாவரும் உபகாரச் சம்பளம் பெற வும், தம் பெண்மக்களுக்குக் கல்வி ஊட்டவும் விரும்பி நின்றனர். நாள் ஏற ஏற உபகாரச்சம்பளம் சிலவும் அதை விரும்பிவருபவர் பலருமாயினர். ஆதலின், அவ் வமயம் "விண்ணப்பக்காரருள், குறைந்த வயதும், மேல் வகுப்பும், அதிக ஏழ்மையும் உடையவருக்கே உபகாரச் சம்பளம் கொடுத்தல் வேண்டும்," என மேலலுவலாளர் களால் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வுபகாரச் சம்பளத்தின்பொருட்டுச் சிறுமிக ளைக் கொணர்வோரை ஏழைகள், செல்வர், இடைப் பட்டவர் என முத்திறமாகப் பிரிக்கலாம்.

ஏழைகள்: ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு பையனுக்கும் குறைந்தது ஐந்நூறுரூபாய் நகைகளும், மற்றச் சீர்களும் கொடுத்துப் பெண்ணை மணஞ்செய்து கொடுக்கவேண்டிய காலமாகவன்றோ இஃதுள்ளது! இக் காலத்தில் பெண்களைப் பெற்ற ஏழைப் பெற்றோர் என் செய்வர்! தம் பெண்மக்களைப் படிக்கவைத்தால் நல்ல வரன் வருவானென்றுவது, அன்றி ஏதேனும் உத்தி யோகம் செய்து பிழைப்பாள் என்றுவது அவ்வேழைப் பெற்றோர்க்குத் தோன்றுதல் இயல்புதானே! ஆதலின், பெற்றோர் என்னிடம் போந்து தம் ஏழ்மையை எடுத்துக் கூறி உபகாரச் சம்பளத்திற்கு மன்றுடுவர்.

செல்வந்தர்: செல்வரோ, "அரசாங்கத்தார் மண மாகாத பெண்களுக்கு உபகாரச் சம்பளம் தருதலின்,

நம குழந்தைக்கும் அது கிடைத்தால் நலந்தானே! படிப்பிக்கும் பணத்தை மீதப்படுத்திக் குழந்தைக்குச் சீர்கள் சிறப்பாகச் செய்யலாமல்லவா! கற்றிருப்பின், கல்வியும் மேன்மையும் வாய்ந்த மாப்பிள்ளை கிடைப்பானே! பணச் செலவின்றிக் கல்வி வருங்கால் ஏன் விட்டுவிடல் வேண்டும்," என்னும் எண்ணத்துடன் தம் மக்களைக் கொண்டுவருவர். அத்தாயார் என்னிடம், "இப்பெண் வீட்டிலிருந்து தன் காலத்தை வீணே கழிக்கின்ருள்! இவளைப் படிக்கவைக்க வேண்டுமென்னும் விருப்பம் எனக்குப் பெரிதும் உண்டு. ஆனல், இவளுடைய தகப்பனுரோ, 'ஏன் வீணுகப் பெண்பிள்ளையின் படிப்பிற்கு இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும்? நான் ஒன்றும் தரமாட்டேன், உனக்கு விருப்பமிருப்பின் எப்படியாவது படிக்க வைத்துக்கொள்," என்கிருர்; "பெண்குழந்தைக்குக் கல்வி இருந்தால் எவ்வளவு நன்மை," என யான் பன்முறை எடுத்துச் சொல்லியும், அவர் பணத்திற்குப் பின்வாங்குகிருர். இவளோ, 'எனக்கு இப்போது கலியாணம் வேண்டாம். நான் படிக்கவேண்டும்,' என்று ஒரே நிலையில் நிற்கிருள். இரு புறமும் எனக்குத் தொல்லையாக இருக்கிறது. பணமிருந்தும் என்ன பயன்! பெண்கள் வார்த்தை ஏறுகிறதா! நம் ஆடவரின் தன்மை நீங்கள் அறிந்ததுதானே? ஆதலின், நீங்கள் எவ்வாறேனும் என்னிடம் கருணை கூர்ந்து இக்குழந்தைக்கு உபகாரச்சம்பளம் தந்தால் பெரும் புண்ணியமாக இருக்கும்," எனச் சொல்வர். இவர் கூறும் உரைகளில் மூன்று பங்கு பொய்யாய் இருப்பினும் இருக்கலாம். இஃதன்றியும் உபகாரச் சம்பளம் கிடைக்கும்வரை ஏழைகளாகவே நடிக்கும் செல்வரும் சிலருண்டு. இத்தகையவரின் ஊதிய மிகுதியை அறிந்த அரசியலார் இவர்களுள் பெரும்

பான்மையோருக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது இல்லை.

இடைப்பட்டவர் : இடைப்பட்டவரும் தம் பெண்களைச் செல்வத்திலும் கல்வியிலும் உயர்ந்த குடும்பத்திலேயே மணம் புரிவிக்க விரும்புவர் என்பது திண்ணம். அவ்விருப்பம் ஈடேறவேண்டுமாயின் பெண்களுக்குச் சிறிது கல்வியும், நாகரிகமும், நல்ல வழக்க ஒழுக்கங்களும் இருத்தல் வேண்டுமல்லவா? இவை இல்லாத பெண்ணைத் தற்போது நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த இளைஞன் மணத்தல் அருமையன்றோ! இன்றேல், நிறைய வரதட்சணையாவது கொடுத்தல் வேண்டும். அதற்கு அக்குடும்பநிலை இடந்தருதல் இல்லை. அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியமோ, இரு பாலாரையும் படிக்கவைக்கப் போதியதன்று. இந்நிலையிலுள்ள பெற்றோர், தம் அருமை மகளைக் கொணர்ந்து விட்டு, "இப்பிள்ளைக்கு எப்படியாவது உபகாரச் சம்பளம் வாங்கித் தந்து முன்னுக்குக் கொண்டு வருவது உங்கள் பாரம். இஃது ஒரு பெரும் புண்ணியமாகும்," என்று மன்றாடுவர்.

இம்முத்திறத்தினரும் தம் மக்களின் உபகாரச் சம்பளத்தின்பொருட்டு நிலையத்திற்குப் பன்முறை வருவர். சிலர் வருகை கணக்கிலடங்காது. சிலர் இரண்டொருவருடங்கள்கூடத் திரிந்துகொண்டிருப்பர்.

உபகாரச் சம்பளம் கிடைத்தபின்பு பெற்றோர் தம் மக்களை நிலையத்தில் கொண்டுவந்து சேர்க்கும்பொழுது தலைவியாரிடம் தம் குடும்பத் தொல்லைகள் முழுவதையும் சொல்வதுமட்டுமேயல்லாமல், "நீங்கள் இவ்வுபகாரச் சம்பளத்தை ஈயாவிடின், என் மகள் கதி

என்னுயிருக்குமோ! நாங்கள் பல துன்பங்களுக்கும் ஆளாகி இருப்போம்! நீங்கள் தெய்வம்போல நின்று எங்களைக் காப்பாற்றினீர்கள்! நீங்களே இப்பெண்ணிற்குத் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாம்! இவ்வுதவியை நாங்கள் என்றும் மறவோம். நீங்கள் இருப்பதனுற்ருன் எங்களைப்போன்ற ஏழைக் குடும்பங்கள் பல பிழைக்கின்றன. இதற்கென்றே உங்களைக் கடவுள் தோற்றுவித்தார் போலும்! உங்கள் அருளிருந்தால் போதும்! நீங்கள் நீண்ட ஆயுளுடன் பன்னுட்கள் வாழ வேண்டும்!" எனப் பல முகமனுரைகளை அவர்கள் வாய் வழங்கும். ஆனுல், அறிவுடைய தலைவியார் இச்சொற்களுக்கு மயங்கிப் பெருமிதங்கொள்ளலோ, மகிழ்ந்து விடலோ செய்யார். ஏன்? இவற்றுள் பாதிக்குமேல் முகத்திற்குமுன் புகழும் வார்த்தைகளே யாகும். உள்ளுணர்ச்சியுடனும், உண்மை மனத்துடனும் சொல்வன சிலவே. இவையும் நாட்செல்லச் செல்லக் குறைந்து விடும். இஃது உலக இயல்பு.

ஒவ்வோர் ஆண்டும் பலர், விண்ணப்பங்கள் அனுப்புவதுண்டு. அச்சிறுமிகளுக்குப் பாடசாலையில் தேர்வு நடைபெறும். எவ்வகுப்பிற்கு அவர்கள் விண்ணப்பிக்கின்ருர்களோ, அவ்வகுப்பிற்கு அவர்கள் தகுதி உள்ளவர்களாய் இருத்தல்வேண்டும். அங்ஙனம் தேறுகின்றவர்களுள்ளும் எல்லாப் பாடங்களிலும் மிகுதியான எண்களைப் பெறுகின்றவர்க்கும், குறைந்த அகவை உடையவர்க்கும், மிக்க வறுமையாளர்க்குமே உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். இம்முறையில் இருபது விண்ணப்பக்காரருள் நான்கு அல்லது ஐந்து பேர்களுக்கு மட்டுமே அது கிடைக்கும்.

பெற்ருேர் பிள்ளைகளைக் கொண்டுவந்து தலைவியாரிடம் ஒப்படைக்கும் காட்சி மிக இரங்கத்தக்கதாயிருக்கும். "இக்குழந்தையைவிட்டு நான் ஒரு நாளும் பிரிந்ததே இல்லை; இதுதான் முதன் முறை. சரியாகச் சாப்பிடமாட்டாள்; தனியாக உறங்குவதற்குப் பயப் படுவாள். நீங்கள் குழந்தைகளை உங்கள் குழந்தைகளைப் போன்றே பாதுகாப்பதாகக் கேள்விப்பட்டேன். குழந்தையை உங்களிடம் விடத் துணிந்ததற்கு இதுவே காரணம். கொஞ்சம் பழகுமட்டும் உங்கள் அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டுகின்றேன். இனி இவள் என் மகளல்லள்; உங்கள் மகளென்றே நினைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் ஒப்புவித்து விட்டேன். இனிமேல் ஒரு கவலையும் எனக்கில்லை," என மிக்க துயரத்துடன் பகருவர். ஆனால், தாயாருக்குள்ள அவ்வளவு வருத்தம் மகளுக்கிருப்பதில்லை. ஆயினும், மகளும் சிறிது வருத்தத்துடன்தான் நின்றுகொண்டிருப்பாள். மகளின் கண்கள் தன்னைவிட்டு வெளிச் செல்லும் தாயாரின்மீது பதிந்திருக்கும். தாயாரின் கண்களோ உள்நிற்கும் குழந்தையைத் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் செல்லும். தலைவியார் வேருெருத்தியை அழைத்து அச்சிறுமியை ஒப்புவித்த பின்பே அம்மாணவி அவ்விடத்தைவிட்டு மெதுவாக நகருவாள். அந்தச் சமயம் தலைவியார் அப்பிள்ளையின் வாயிலிருந்து ஒரு வார்த்தையையும் எதிர்பார்க்க முடியாது.

சென்ற தாயார் நேரே வெளிச்செல்ல மாட்டார். அங்குள்ள பிள்ளைகளிடம், தம் நிலையையும், தம் குழந்தையின் போக்கையும், விட்டுப் பிரிவதால் தமக்குண்டாயிருக்கும் வருத்தத்தையும் வெளியிடுவார்; "அவ

ளுக்கு ஒன்றுந்தெரியாது. ஏதாவது தவறிழைப்பினும் நீங்கள் தயவுசெய்து புத்தி சொல்லி அவளை உங்கள் தங்கையைப்போலப் பார்த்துக்கொள்ளுங்கள். துணி மணிகளைக் கவலையுடன் வைத்துக்கொள்ளுமாறு சொல் லுங்கள் நீங்கள்தாம் அவளுக்கு அக்கா தங்கைகள்,'' என்று சொல்லிச் செல்வார். தாய்மாருக்குள் பெரும் பான்மையோர் எண்ணம், தம் மக்களுக்கு ஒன்றுந் தெரி யாது என்பதே. இப்படித் தம் குழந்தைகளை விட்டுப் பிரியும்போது ஏற்படும் வருத்தம், பணத்தைக் கொடுத் துப் படிக்கவைக்கும் செல்வருக்கும் உதவித் தொகை பெறும் ஏழைகளுக்கும் ஒரேவிதந்தான். இதனுல், எங்கும் தாயன்பு ஒருநிலைப்பட்டதே என அறியலாம்.

குழந்தைகள் தம்முடன் உறைவதைக்காட்டிலும், அவர்கள் நிலையத்தில் வதியுங்கால், அவர்களிடம் பெற் ருேர்க்கு அன்பு மிகுதி. பெற்ருேர், சில இனிய உணவு களை உண்ணுங்கால், தம் குழந்தைகளை நினைத்துக் கொள்ளல் இயல்பன்ருே! ஆதலின், பெற்ருேர் வாரம் ஒரு முறையேனும், நல்ல சிற்றுண்டியையோ, பழங் களையோ கொண்டுவந்து தம் குழந்தைகளுக்குக் கொடுக் கத் தான் செய்வர். அதைத் தலைவியார் தடுத்தல் அறிவு டைமையாகாது. அங்ஙனம் செய்யினும், கள்ளத்தன மாகவேனும் அக்காரியம் நிகழும். தலைவியார் கட்டுக் குட்படுபவர் நூற்றிற்கு இரண்டு பேர் இருத்தலும் கடினமே! ஆயினும், பெற்ருேர் குழந்தைகளுக்கு நோயுண்டாக்கும் பண்டங்களைக் கொடாதவாறும், குழந் தைகளும் ஒரே நாளையில் எல்லாவற்றையும் உண்டு வயிற்றுப் போக்கை உண்டாக்கிக் கொள்ளாதிருக்கு மாறும் தலைவியார் பார்த்துக்கொள்ளலாம். அதனினும், ஊரில் தொற்று நோய்கள் நடையாடுங்கால், சிற்றுண்டி

கொள்வதில் தலைவியார் மிகக் கண்டிப்பாய் இருத்தல் நல்லது.

ஒரு கிழமைக்கு ஒருமுறை வரும் பெற்றோரிடம் குழந்தைகள் ஐந்து அல்லது பத்து நிமிடங்களே பேசுதல் வேண்டுமெனக் கட்டுப்படுத்தலும், அவர்கள் படிப்பிற்குக் குறைநேருமாறு மணிக்கணக்காய்ப் பேசவிடுதலும் தகுதியுடையன அல்ல. இக்காரியத்தில் குழந்தைகள் நடந்து கொள்ளவேண்டிய முறையைப் பொதுவாகத் தெரிவித்துவிடில், அது கூடியமட்டும் சரிவர நடைபெறும்.

ஆண்டிறுதியில் மேல்வகுப்பிற்குச் சென்ற பிள்ளைகளின் பெற்றோருள் பெரும்பான்மையவர், தம் மகிழ்வைத் தெரிவித்தற்கும் தலைவியாரிடம் வருதல் அருமை. ஆனால், பிள்ளைகள் தேர்வில் தவறிவிடிலோ, "அடுத்த ஆண்டிற்கு நாங்கள் என் செய்வது! உதவித் தொகை இன்றி எங்களால் படிக்கவைக்க முடியாதே! இத்துடன் நிறுத்திவிட்டால் வாங்கிய தொகையைத் திருப்பித்தர வேண்டுமே! இப்பெண்ணின் கதி என்ன! நீங்கள் தாம் எல்லாம் பார்த்துக்கொள்ள வேண்டும்! ஏழைகளாகிய யாங்கள் என் செய்வோம்!" எனப் பல சொல்லி அப்பெற்றோர் தலைவியாருக்குத் தரும் தொல்லைகள் கணக்கிலடங்கா. அக்கால் அவர்களுக்குத் தக்க ஆறுதல் பகர்தல் தலைவியாரின் கடமை. அம்மாணவிக்கு வாங்கித்தந்த தொகைக்கோ தலைவியார் பெரிதும் பொறுப்பாளர் ஆவார். இந்நிலைமையில் தலைவியாருக்கு இருபுறமும் துன்பமே! குழந்தைகள் ஆண்டுதோறும் மேல்வகுப்பிற்குச் சென்றுகொண்டிருப்பின், பல துன்பங்களுள் இஃதொன்றேனும் குறையும்.

நிலையத்தில் ஐந்தாறு ஆண்டுகள் படித்து S. S. L. C. யில் தேர்ச்சியடைந்த மாணவிகளின் பெற்றோருள் சிலர், தம் மகிழ்வைத் தலைவியாருக்குத் தெரிவித்து வணக்கங் கூறிச் செல்வர். அவர்களுள் பெரும்பான்மையவருக்கு அந்நினைப்பே தோன்றுதல் இல்லை. ஆனால், தம் குழந்தைகள் மேற்குறிப்பித்த S. S. L. C. யில் தவறிவிடில், அதற்குப்பின் நடைபெற வேண்டியவைகளுக்காக, அவர்கள் தலைவியாரிடம நடக்கும் நடைக்கும், அறிந்துகொள்ள விரும்பும் உபாயங்களுக்கும் கணக்கே இரா. குழந்தைகளை நிலையத்தில் சேர்த்தல், அவர்கள் தேர்வில் தவறுதல், தேறுதல், நிலையக் கல்வியை முடித்து வீடுசெல்லல் முதலிய காலங்களில், பெற்றோர் நடந்துகொள்ளும் முறைகள் தலைவியாருக்கு உலகியல் அறிவையும், தற்கால மக்களின் நாகரிகத் தன்மையையும் நன்கு புலப்படுத்தும். யாதொரு பயனையும் தன்னலத்தையும் கருதாது உழைக்கும் தலைவியார், இதன் பொருட்டு வருந்துதலோ, குழந்தைகளைக் குத்திச் சொல்லுதலோ செய்யார்; ஆனால், நம் நாட்டினர் அறியாமையைக் குறித்தே இரங்குவார்.

---

6. புதிய பிள்ளைகள்

அப்போதைக் கப்போது போக்குவரவுகள் நடைபெறும் இடங்கள் பல உண்டு. அங்கு, பழமையாய் இருந்தவருள் சிலர் போதலும், புதிதாகச் சிலர் வருதலும் ஒருவகை வேடிக்கை தருவனவே! இவற்றைப் பெரும்பான்மை புகைவண்டிகளிலும், சிறுபான்மை மரக்கலங்களிலும் காணலாம். இவை இயற்கைப் பொருள்களிலும் உண்டு. சூரியன், சந்திரன், இளவேனில், முதுவேனில் முதலியனவற்றுள் ஒன்றுபோக மற்றொன்று தோன்றுகின்றதன்றோ! ஊன்றி நோக்கின், இறப்பும் பிறப்பும் இத்தொகுதியைச் சார்ந்தனவே அல்லவா? இங்ஙனம் போதலும் வருதலும் யாதேனும் ஒரு பயனைக் கருதியே நடைபெறுகின்றன.

அங்ஙனமே கல்விப்பயனைக் கருதிப் பல மாணவர் வதியும் பொதுநிலையங்களிலும், ஒவ்வொரு ஆண்டும் சில பழைய மாணவிகள் நீங்கலும், சில புதிய மாணவிகள் வந்து சேரலும் வழக்கம். புதிதாகவரும் ஒவ்வொரு குழந்தைக்கும், நிலையத்தின் கோட்பாடுகளும், மற்றவர்களோடு கலந்து உறவாடுந் தன்மையும், பழையவர்களைப் போன்றே நடந்துகொள்ளும் சீர்மையும் பதிவதற்குக் குறைந்தது இரண்டு மாதங்களேனும் கொள்ளும். அதன் பின்பே அவர்களுக்குப் பழைய வழக்க ஒழுக்கங்களின் நிலை மாறி நிலையத்தின் கொள்கை சிறிது பதியும். அதுவரை அவர்களை மிக்க கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தல் நலமளியாது. அங்ஙனம் செய்யின் அவர்கள் நல்வழிப்படுதலும் அருமையாகும். இம்முயற்சி தலைவியாருக்குப் பெருந்துன்பமளிப்ப தொன்றே. நிலையத்தின் நீர்மைகளையும், கோட்பாடுகளின் இன்றியமையாமையையும் அவர்களை உய்த்துணர அவர்கட்குச் சின்னு

கள் இடைவெளி அளித்தல் வேண்டும். பழைய குழந்தைகளின் செயல்களே புதிய குழந்தைகளை ஒழுங்கு படுத்தும் திறவுகோல்களாகும். ஆதலின், புதியவரிடம் அன்பு பாராட்டி, அவர்களுக்கு அப்போதைக்கப்போது உதவி புரிந்து எல்லாக்காரியங்களிலும் அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்குமாறு பழைய மாணவிகளுக்கு அறிவு புகட்டல் தலைவியாரின் கடமையாகும். நிலையத்தின் தலைவியார் கண்ணுங் கருத்துமாய் நோக்கவேண்டுவன பல இருப்பினும், சில மிக இன்றியமையாதனவாக இருக்கும். அவற்றுள் புதிய பிள்ளைகளைத் திருத்தி அவர்களை நிலையத்தின் கோட்பாடுகளின்படி நடந்து கொள்ளப் பழக்குதலும் ஒன்ருகும். சில குழந்தைகளுக்கு, இம்முறை பதிய, பத்து நாட்கள் தொடங்கிப் பத்துத் திங்கள்கூடச் செல்லலாம். ஊன்றிக் கூறின் இனிமையாகப் பேசுந்தன்மை, செயல்களின் நாகரிக நிலை, வேறுபட்ட குடும்பங்களிலிருந்து வந்த மற்றக் குழந்தைகளோடு பழகும் முறை, காலந்தவருது காரியஞ் செய்யும் ஒழுங்கு முதலியன சில குழந்தைகளுக்குச் சில ஆண்டுகள் வரையும் பதியாமலே இருக்கவும்கூடும். அத்தகையவரைத் திருத்துவதுதான் தலைவியாருக்கு மிக்க துன்பம். அச்சிலரைத் திருத்தத் தலைவியார் பல முறைகளைக் கையாள நேரினும் நேரலாம். இதற்குத் தலைவியார் சோம்பலோ வெறுப்போ கொள்ளின் அப்பிள்ளைகள் நல்வழிப்படாமற் போதல்மட்டுமே அல்லாமல், அவ்விரண்டொருவரால் சிலர், அல்லது பலர் முறை பிறழவும் நேரிடும். இது தலைவியாருக்கு மிக்க துன்பந் தருவதொன்றன்ருே? இக்குழந்தைகளின்பால் தலைவியார் மேற்கொள்ளவேண்டுவன, பெரும்பான்மை இன்சொற்களும், சிறுபான்மை கடுஞ் சொற்களுமேயாகும்.

ஒவ்வொருகால் பெற்ருேர் உதவியைக்கொண்டும் காரியஞ் செய்யவேண்டும்.

இச்செயல்களே அச்சிறுமியர் ஒழுங்குமுறையில் வருதற்குத் தக்க கருவிகளாகும். இங்ஙனமின்றி, அவர்களை அடிக்கடி கண்டித்தல், அவர்களுடைய பெற்ருேரின் வளர்ப்புக்குறை, அவர்களின் குணத் தீமை முதலியவற்றைக் குறித்துப் பேசல் மேற்கொள்ளின் அவர்களுக்குச் சினம் தோன்றி, இன்னும் மழுங்கல்களாக ஆவரேயல்லாமல் நலமடைதல் அருமை. இறுதியில் இரு திறத்தினருக்கும் துன்பமே விளையும். சிலர், பல ஆண்டுகள்மட்டும் தம் முரட்டுத்தனத்தையும், நாகரிகமற்ற செயலையும் விடாமலே இருப்பினும் இருப்பர். அத்தகையவரையும் தலைவியார் ஒருபோதும் கடுகடுத்தும் இழித்தும் பேசுதல் கூடாது. கூடியமட்டும் அவர்களை நல்வழியில் திருப்பவே முயலவேண்டும். இன்றேல், மற்றச் சிறுமியர் அவர்களைப் புறக்கணித்து, அவர்கள்மேல் இல்லாத கோள்களையுஞ் சொல்லி அவர்களுக்கும் தலைவியாருக்கும் பெருந்துன்பத்தை விளைவிப்பர். ஆனுல், இத்தகையவர் ஒருவர் இருவர்தாம் இருப்பர். எத்துணை மழுங்கல் தன்மையுடையவரும் மற்றவர் நடந்துகொள்வதைப் பார்த்துச் சிறிது சிறிதாகத் திருந்திவிடுவர் என்பது ஒருதலை.

ஈண்டு, நிலையத்தில் வந்து சேரும் புதிய பிள்ளைகளின் வேறுபாடுகள் சிலவற்றை நோக்குவோம்: சிறு கிராமங்களிலிருந்து வரும் சிறுமியருக்கு நிலையத்தில் நடைபெறும் யாவும் புதியனவாகவே தோன்றும். அவருள் சிலர், நிலைய அமைப்பையும், கல்லூரிக் கட்டிடங்களையும், அங்கு நடைபெறும் செயல்களையும், மக்கள்

போக்குகளையும் கண்டு அச்சங்கொள்வர். அவ்வச்சம், "திரும்பி ஊருக்குச் சென்றுவிடலாம்" என்னும் எண்ணத்தை அவர்கட்கு அடிக்கடி உண்டாக்கும். சிலருக்குத் தம் உறவினரை விட்டுப் பிரிந்திருப்பது மிக்க வருத்தத்தைத் தரும். அவ்வருத்தத்தினால் அச்சிறுமியர் சின்னாட்கள் எதிலும் மனஞ் செலுத்தாமல் இருப்பர்.

சில குடும்பங்களில் நினைத்தபோது குழந்தைகளுக்குச் சிற்றுண்டிகளைத் தருதலும், அவர்கள் கேட்டபோது காசைக் கொடுத்தலும் வழக்கம். குறித்த காலத்தில் உணவுப் பொருள்களைத் தருதலல்லாமல், இத்தீய பழக்கங்கள் ஒன்றும் நிகழப்பெறாத நிலையத்தின் வாழ்க்கை அச்சிறுமியருக்குத் தொடக்கத்தில் எங்ஙனம் துன்பந்தாராமலிருக்கக்கூடும்! உணவுப் பொருள்களை ஒவ்வொருநாட்டினரும் ஒவ்வொரு வகையில் பாகப் படுத்துவரல்லரா? வடநாடு, தென்னாடு, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து வரும் மாணவிகளுக்கு நிலையத்தின் பொதுத் தன்மை வாய்ந்த உணவின் சுவை முதல் முதலில் பிடித்தல் இல்லை. அதனால், அவர்கள் போதிய உணவு கொள்ளாமல் மெலிவடைவார்கள்.

சிலர் வீடுகளில் ஒரு வேளை அரிசி உணவும், மற்றப்போது கோதுமை முதலியவற்றில் செய்த சிற்றுண்டியும், சிலர் இல்லங்களில் மாமிச உணவும், சிலர் வீடுகளில் மிக்க எளிய உணவும், சிலர் மனைகளில் மிக்க உயர்ந்த உணவுமாக இருக்கக்கூடும். நிலையத்தில், குறிப்பிட்ட காலத்தில் கோதுமையும், அரிசியும் கலந்த நடுத்தரமான காய்கறி உணவுகளை உண்ணுங்கால், அம்மாறுபாடு அவர்கட்குச் சிறிது துன்பத்தைத் தருதல் இயல்புதானே! இத்தகைய உணவுதான் உடலிற்கு நன்மையை

யும், பிற்கால வாழ்க்கைக்கு வன்மையையும் தரும் என்னும் உணர்ச்சியைப் பெறக்கூடிய வயதை அம்மகளிர் அப்போது அடைந்தாரல்லரே !

சிலர், தம் இல்லங்களில் காலை ஏழு அல்லது ஏழரை மணிக்கே துயிலெழும் வழக்கமுடையராயிருப்பர். கல்லூரிக்குச் செல்லும் சிலருக்கு, தலை பின்னல், குளிப்பாட்டல், ஆடை துவைத்துத்தரல், உண்கலம் அலம்பி வைத்தல் முதலிய சிறு சிறு காரியங்களையும் தாயார் அல்லது பணியாளர் செய்துவிடுவர். அத்தகையவருக்கு, காலை ஆறு மணிக்குள் படுக்கையை விட்டெழலும், தம் காரியங்களைத் தாமே செய்துகொள்ளலும் துன்பமாகத் தானே இருக்கும் !

குழந்தைகள், வீதிகளில் சென்று பெரும் பொழுது ஓடியாடல்—அடிக்கடி கடைவீதிக்குச் சென்று பண்டங்களை வாங்கிவருதல்—அண்டை அயல் வீடுகளுக்குச் சென்று விளையாடுதல்—அதிக நேரம் தெருவிலும் பல கணிகளிலும் நின்று வேடிக்கை பார்த்தல்—தாயார் பிறரிடம் பேசுங்கால் அப்பேச்சுகளைக் கேட்டுக்கொண்டிருந்து, தாயார் விடையளித்தற்கு முன்பே தாங்கள் விடையளித்தல்—வீட்டிலுள்ள பண்டங்களைத் தாயாருக்குத் தெரியாமலே பிறருக்கு அள்ளிக் கொடுத்தல்—தெருவில் விற்கும் தின்பண்டங்களை வாங்கி உண்ணல்—வேலைக்காரரோடு வழக்கிடல் முதலிய பல தீய பழக்கங்கள் சிற்சில வீடுகளில் நடைபெறும். அம்முறையில் பழகின குழந்தைகளை, நல்வழியில் கட்டுப்படுத்தி வைக்குங்கால், அவர்களுக்குத் தொடக்கத்தில் வருத்தம் தரும் என்பதில் ஐயம் உண்டோ ? சின்னாட்கள் பழகிய பின்னர், யாவும் அவர்களுக்கு வழக்கமாய் அமைந்து

விடுதலையல்லாமல், அவைகள் நன்மை பயப்பனவே எனவும் அவர்களுக்குத் தோன்றும். சிலர், விடுமுறைத்தி வீடு சென்று வந்தவுடன் ஒன்றிரண்டு வாரங்களுக்குத் தம் வீட்டின் வழக்கத்தையே பின்பற்றுவர்; சில சிறுமியரோ, புதிதாய் வந்ததிலிருந்தே நிலையத்திற்கேற்ப நடந்து கொள்வர்; சிலர், இரவில் அறைக்குள் தனியாகச் செல்லவும், தனியாக உறங்கவும் பயப்படுவர்; சிலர், தமக்குள்ள துன்பங்களை வாய்விட்டுக் கூருமல் மனத்திலேயே இருத்திக்கொள்வர்; சிலர் சிறியதையும் பிறரிடம் தெரிவித்து அது நீங்கும் வழியைத் தேடிக்கொள்வர். உலகம் பலவிதம் என்பது நிலையத்தில் நன்கு புலனுகும்.

ஆயினும், தலைவியார் ஒவ்வொரு குழந்தையின் இயல்பையும் பொறுமையுடன் கவனித்து, இயன்ற மட்டும் அவர்கள் கலக்கத்தைப் போக்கி அவர்கட்கு களிப்பை உண்டாக்க முயலவேண்டும். தம் இனிய சொற்களும், அன்புமே புதிய பிள்ளைக்குப் புத்துயிர் அளிப்பன. நிலயத்தில் தனித்தனி உணவு செய்ய முடியாததையும், தத்தம் வேலைகளைத் தாமே செய்து கொள்வதின் நன்மையையும், அடக்கம் பொறுமைகளை உடைத்தாயிருத்தலின் மேன்மையையும், அஞ்சவேண்டாதவைகளுக்கு அஞ்சாமலிருப்பதின் ஆண்மையையும், நிலயத்தில் வதிவதின் சிறப்பையும் அவர்களுக்கு அப்போதைக்கப் போது எடுத்தியம்பின், அவர்கள் மனம் தெளிந்து எல்லாக் காரியங்களிலும் பழைய பிள்ளைகளின் நிலைக்கு வந்துவிடுவார்கள்.

அன்றியும், பழைய சிறுமியர், புதியவர்களுக்குத் தம் பழைய நிலைமையையும், பின்பு தாம் நிலய வழக்கத்தில் ஒன்றுபட்ட தன்மையையும், அதனுல், தமக்கேற்பட்ட

நன்மையையும் எடுத்தியம்பி, அப்புதிய மாணவிகளைத் தம் வழிக்குக் கொணருமாறு செய்தல் வேண்டும். தலைவியாருக்குப், புதிய பிள்ளைகளைப் பழைய பிள்ளைகளின் வரிசையில் சேர்ப்பதற்கு மேற்கொள்ளும் வேலை ஒவ்வொரு ஆண்டும் ஏற்படினும், பெரிய வகுப்புச் சிறுமியர் சிறிது வன்மையுள்ளவராயிருப்பின், அக்காரியத்தின் பொறுப்பு தலைவியாருக்குச் சிறிது குறையும். அத்தகைய மாணவிகள் இல்லாத காலத்தில்தான் தலைவியாருக்குத் துன்பம் மிகுதி.

ஏறக்குறைய ஒரு மாதம்வரை பெற்ருேர், குறைந்தது வாரத்திற்கு இரு முறையேனும் வந்து தம் மக்களைக் காணவும், ஏதேனும் சிற்றுண்டிகளைக்கொணர்ந்து தரவும் விரும்புவர். அது மாணவிகளுக்கும் சிறிது ஆறுதலை அளிக்கும். அப்பெற்ருேர், சிலபோது நீடித்த நேரம் இருந்து தம் குழந்தைகளுக்குச் சடைப்பின்னி மலர் சூட்டி மகிழ்வர்; தம்மகள் நிலையத்தில் நடந்து கொள்ளும் தன்மை, அவள் உண்ணும் அளவு, படிப்பின் நிலை, அவள் பிறருடன் பழகும் முறை, அவள் மகிழ்ச்சியின் போக்கு இவற்றை மற்றப் பிள்ளைகளிடம் வினவித் தெரிந்துகொண்டு அதன் பொருட்டுத் தம் மக்களுக்குக் கூறவேண்டிய புத்திமதிகளையும் கூறுவர். இன்னும், அப்பெற்ருேர் தலைவியாரிடம் வந்து, "இவள் சிறுபெண். இத்தகைய இடங்களில் நடந்துகொள்ளும் முறை இவளுக்குத் தெரியாது. ஏதேனும் குறையிருப்பினும் நீங்கள்தான் பொறுத்துக்கொள்ள வேண்டும்; இவள் படிப்பையும் தயவு செய்து கவனித்துக்கொள்ளுங்கள். எங்கள் துன்பம் உங்களுக்குத் தெரிந்ததே! ஓர் ஆண்டு தவறிவிட்டால், திரும்பவும் படிப்புப் படிப்புத்தான். யாராவது பெரிய குழந்தைகளைத் தெரியாததைச் சொல்

விக்கொடுக்குமாறு தயைகூர்ந்து ஏற்பாடு செய்வீர்களானால், உங்களுக்கு மிகவும் புண்ணியமாயிருக்கும். எல்லாம் தெரிந்த உங்களுக்கு என்ன சொல்லப்போகிறோம்! நீங்களே இப்பெண்ணிற்குக் கதி," எனச் சொல்லிச் செல்வர்.

சிலபோது, அப்பெற்றோர் அரைமணி நேரங்கூடச் சொல்லியதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு நிற்பர். இது தாயன்பின் நிலை. அப்போதும் தலைவியார் தம் பொறுமையை இழத்தலாகாது. இழப்பின், அது பெற்றோர் மனத்தைப் புண்படுத்தி அவர்களுக்குத் தலைவியாரிடம் இருக்கும் நம்பிக்கையைப் போக்கிவிடும். ஆயினும், பெற்றோர் இங்ஙனம் செய்வதால் தனக்குண்டாகும் தொல்லையையும் இரண்டொரு வாரத்திற்குப் பின்பும் வாரம் ஒருமுறையன்றி அடிக்கடி நிலையத்திற்கு வந்து நீண்ட நேரம் இருத்தலினால், மற்றப் பிள்ளைகட்கு ஏற்படும் அழுக்காறுமையையும், கோட்பாட்டிற்கு உண்டாகும் குறைகளையும் அவர்கட்குத் தெளிவாக இனிய சொற்களால் எடுத்துக்கூறின், பெற்றோருள் பெரும்பான்மையோர் அவற்றை அன்புடன் ஏற்றுக் கொள்வர். ஈண்டுத் தம் நிலைக்கேற்ற அதிகாரமும், கடுகடுத்த சொற்களும் பயன்படா.

7. கல்வி அறிவு

மக்கள் விரும்பும் பேறுகள் பல உண்டு. அவை பதினாறு எனக் கூறுவர். இதனாற்றான், பெரியோர் மண மக்களை வாழ்த்துங்கால், "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க," என மொழிகின்றனர். ஆனால், இதற்குப் பலர் கொள்ளும் பொருள் பதினாறு மக்கள் என்பதே. அப்பதினாறு செல்வங்களில் அரசச் செல்வம், அறச்செல்வம், பொருட் செல்வம், அறிவுச் செல்வம், கல்விச் செல்வம், மக்கட்செல்வம் எனப் பல செல்வங்களும் அடங்கும். இவற்றுள், தலை சிறந்தது மக்கட் செல்வமே. ஆயினும், அம்மக்களை மாக்களிலிருந்து வேறு படுத்தி மக்களாக்குவது தூய அறிவே என்பதை மறுப்பவர் யார்? இதனாலன்றோ தெய்வப் புலவர்,

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற."

எனக்கூறிப் போந்தனர். "இவ்வறிவைத் தளிர்க்கச் செய்வது யாது? எக்கருவியைக்கொண்டு இவ்வறிவைக் கூர்மைப்படுத்தலாம்! எந்த எருவினால் இவ்வறிவுப் பயிரை ஓங்கச் செய்யக்கூடும்!" என நோக்கின் இதற்குக் கல்வி என்னும் சிறந்த பொருளே இன்றியமையாத தெனத் தெள்ளிதின் புலப்படும்.

இத்தகைய சிறந்த கல்வியின் பொருட்டே பல மகளிர் நிலையத்தை நாடி வருவர். அச்சிறுமியர் வருவது கேவலம் உணவின் பொருட்டன்று.

ஈன்றோர் தம் அருமை மக்களை மற்றோரிடம் ஒப் படைக்கவும் பிரிந்திருக்கவும் துணிவது கல்வியின் காரணமாகவே. இக்கல்வியே தம்மக்களை உயர்நிலைக் குக் கொண்டுவருமென்பதை உணராதார் யார்? தம்

மகளிர் உதவிச் சம்பளம்பெற்று நிலையத்தில் சேர்ந்தவுடன், அவர் புதிய வாழ்வைப் பெற்றதாகவே பெற்றோர் நினைப்பர். அவர்க்குத் தம் மக்கள்மாட்டு உள்ள அன்பும், மதிப்பும் முன்பைவிட மிகுதிப்படும். அம் மக்கள் கற்பதையும், புத்தகந்தாங்கிப் பாடசாலை செல்வதையும் காணுங்கால் தாய் தந்தையரின் மனம் ஆனந்தத்தினால் அலரும்.

கல்விக் கடலை நீந்தி அறிவுக்கரையை அடைதற்கு இளமையே சிறந்ததெனினும், பிற்கால நலங்களை ஆய்ந்தறியும் திறமையற்ற அவ்விளஞ் சிறுமியர் சோம்பலுக்கு இடந்தந்து விடுகின்றனர். இதை ஒழித்தவரும், இயற்கையிலேயே நுட்ப அறிவு வாய்ந்தவரும் தாம் நிலையத்திற்கு வந்ததன் காரணத்தையும், தம் நிலையையும் நன்கு மனத்திருத்திக் கவலையுடன் கற்பவரும், ஒவ்வொரு ஆண்டும் மேல் வகுப்பாகிற கல்விப் படிகளைக் கடந்து செல்வர் என்பதில் ஐயமிலது. நாடோறும் தம் பாடங்களை ஒழுங்குடன் படித்து முடிப்பவர் ஆண்டின் இறுதியில் அலமருதற்குக் காரணமே இராது. உழும்போது ஊர் திரிந்து வந்தவன், அறுக்கும்போது அரிவாள் கொண்டு செல்லின் எதை அறுப்பது? தன் சோம்பலைத்தான் வெட்டி வீழ்த்தவேண்டும்.

"எவ்வளவு கற்கினும் சில குழந்தைகளுக்குப் பொருள் விளங்குதலும், மனத்திற் பதிதலும் கடினமாக உள்ளதே, அதற்கென் செய்வது?" எனச் சிலர் கேட்கலாம் பள்ளியிறுதி வகுப்பு வரையும் கற்பவருள், சிற்சிலரே இக்கூட்டத்தைச் சார்ந்திருப்பர். மற்றவர் யாவரும் சோம்பலென்னும் பேய்க்கு அடிமைப்பட்டவரே. இப்பேயைத் தொலைத்தற்குச் சிலவழிகள் உண்டு. அவை:

1. நான்கைந்து மாணவிகளுக்கு ஒவ்வொரு பெரிய வகுப்பு மாணவியைத் தலைவியாக்கி, படிப்பதற்கெனக் குறித்துள்ள நேரத்தை எக்காரணத்தினாலும் அவர்கள் வீண்போக்காதவாறு பார்த்துக்கொள்ளச் செய்தல்.

2. படிக்கும் இடத்தில் சிறு ஓசையும் இல்லாமலிருக்கச் செய்தல்.

3. அவர்கள் ஒவ்வொரு நாள் பாடத்தையும் சரிவரப் படிக்கிறார்களா என்பதை அந்தந்தக் கூட்டத்தின் தலைமைமாணவி கவனித்துக்கொள்ளுமாறு செய்தல்.

4. சனி, ஞாயிறுகளில் பெரிய வகுப்புப் பெண்கள் சிறிய வகுப்புப் பெண்களுக்குத் தெரியாத பாடங்களைப் போதிக்க ஏற்பாடு செய்தல்.

5. எந்தெந்தப் பெண் எந்தெந்தப் பாடத்தில் குறைவாக இருக்கின்றாள் என்பதை அறிந்து அதை நிறைவு படுத்தல்.

6. திங்களுக்கொருமுறை ஒவ்வொரு பாடத்திலும் அவர்கள் பெற்ற எண்களைக் கேட்டறிந்து, அதிக எண்களை வாங்கியவர்களைப் புகழ்தலும், குறைந்த எண்களைப் பெற்றவர்களைக் கண்டித்தலும் செய்தல்.

7. எப்போதும் விளையாட்டிலேயே கவனஞ் செலுத்திக் கல்வியை அசட்டை செய்பவர்களையும், கல்வியின் சீர்மை தெரியாத சிறுமிகளையும் தனியே வைத்து, அவர்கள் ஒவ்வொருவரையும் கவனித்துக் கொள்வதற்கு வன்மை வாய்ந்த ஒன்றிரண்டு பெரிய மாணவிகளை அவர்கட்குத் தலைவியர்களாக அமைத்தல்.

8. கல்வியின் சிறப்பையும், மன ஊக்கங்கொண்டு கற்றவர் அடையும் வெற்றியையும், அவ்வெற்றி அவர்களுக்கு அறம் பொருள் இன்பங்களைத் தரும் சீர்மையையும் அப்போதைக்கப்போது அவர்களுக்கு எடுத்துக் கூறல்.

இவைகளைக் கைகொள்ளின், பெரும்பான்மையும் மாணவிகள் தங்கள் தேர்வில் வெற்றி பெறுவார்கள். அப்போதும் இரண்டொரு பிள்ளைகள் தவறிவிடுதல் உண்டு. அதற்கு முக்கால் பங்கு, பிள்ளைகளின் கவலையின்மையே காரணமாகும். அப்போதும் தேர்வில் தோல்வியுற்ற குழந்தைகளை வைதலிலும் தாம் மனம் நோதலிலும் பயனில்லை. முடியுமானால், மறு ஆண்டும் அப்பிள்ளை அங்ஙனம் ஆகாமைக்குத் தக்க செயல்கள் சிலவற்றை மேற்கொள்ளலாம்.

நிலைய மாணவிகளுள் சிலர், எப்போதும் பாடப் புத்தகங்களும் கையுமாக நூலறிவிலேயே நுழைந்து நிற்பர். அவர்தம் மனம் வேறொன்றைப் படிப்பதற்கோ ஆராய்தற்கோ செல்வதே இல்லை. சிலர், பொது அறிவைப் பெறுதற் பொருட்டுப் பல பொதுப் புத்தகங்களையும், செய்தித் தாள்களையுமே படிப்பர். ஆயினும், அப்பருவத்தில் தனி நூலறிவும், தனிப் பொது அறிவும் அவர்கட்குச் சிறந்த பயனைத் தருதல் இல்லை. ஆதலால், ஒவ்வொரு சாராரையும் இரண்டிலும் தேர்ச்சியடைய ஊக்குதல் வேண்டும்.

குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒன்றிரண்டு பாடங்களில் தனிப்பட்ட விருப்பம் இருக்கும். அவர்களுக்கு அவை விரைவிலும் வரும். அந்நேரத்தின் மிகுதியைக் கடின பாடங்களுக்குச் செலவிடுமாறு அவர்

களைத் தூண்டுதல் நலம். அப்போதுதான் அவர்களுக்குக் கடினமான பாடங்களும் எளிமையான பாடங்களும் கூடியவரை ஒருபடித்தாகும்.

மாணவிகள் இளையவர்கள் ஆதலின், தங்களுக்குள்ள வன்மையையும் எளிமையையும் தாங்களே அறிதல் இல்லை. அவர்களுள் சிலர், தம் நண்பரின் நிலையே தம் நிலை எனக் கருதுவர். தம் நண்பருக்குக் கணக்கோ, சரித்திரமோ, பூகோளமோ வரவில்லை யெனின், அப்பாடம் தமக்கும் வாராது எனக் கூறுவதே ஒரு பெருமை யெனக் கருதி அதைப் பொருட்படுத்தாமலும் படியாமலும் விட்டு விடுவர். இறுதியில் அதில் குறைந்த அறிவுடையவராகவே ஆகிவிடுதல் நிலையத்தில் காணப்படும் ஒரு தீய வழக்கம். அவர்களே, தங்களுக்குச் சிறிது அறிவு வளர்ந்த பின்பு, கீழ் வகுப்புகளில், தாங்கள் தங்கள் நட்பினரைப் பார்த்துக் கெட்டதையும், அதனால், தாங்கள் அடைந்த கெடுதியையும் நினைத்து வருந்துவார்கள். எதையும் எளிதில் மனத்தில் இருத்தும் இயல்பு வாய்ந்த இளமைப் பருவத்தில், ஆரும்படிவம்வரை பாடங்களைச் சிறிது வருந்திப் படித்து மனத்தில் இருத்துதல் அரிய காரியமன்று. அஃதொழித்து, "இப்பாடம் எங்களுக்கு வரவேவாராது," எனச் செப்புதல் சோம்பலின் பாற்பட்டதேயாகும். அச்சோம்பலுக்கு வழிவிடுதல் கூடாது. ஆனால், அவர்களுக்கு மிக்க விருப்பமானபாடத்தையே முதன்மையான பாடமாகக் கொள்ளுமாறு செய்தல்வேண்டும். இத்தன்மை பெற்றோரைவிட நிலையத் தலைவியாருக்கே நன்கு தெரியும். அவரே மாணவிகளோடு கலந்து ஆராய்ந்து முடிவு செய்தல் நலம். இவைகள்யாவும் ஒரு புறமிருக்க, தேர்வுக் காலத்தில் மாணவிகளுக்கு ஊக்கத்தையும், மகிழ்வையும் ஊட்டி அவர்

களை நன்ருகப் படிக்கச்செய்வதே தலைவியாரின் இன்றியமையாத பொறுப்பு.

கல்வி, இவ்வுடலிற்கும் இம்மைக்கும் மட்டும் பயனளிக்கும் ஒன்றன்றே! சிற்றுயிர்க்கும் உற்ற துணையன்ருே! மக்களின் இயற்கைஅறிவைக் கூர்மைப் படுத்திச் சான்ருேராக்குவது எது? துன்பமுற்ற காலத்தில் துணைபுரிவது கல்வியைக்காட்டிலும் வேருென்றுண்டோ? மனத்திருளை அகல ஓட்டி ஞான விளக்கைத் துலங்கச்செய்யும் வன்மை கல்விக்கன்ருே உள்ளது! இத்தகைய கல்வி ஆண்பாலார்க்கு எங்ஙனமோ, அங்ஙனமே பெண்பாலார்க்கும் இன்றியமையாதென்பதை மறுப்பவர் இக்காலத்தில் மிக்க சிலரே எனக் கூறலாம். இல்லறம் மாண்புறுதற்கும், ஈன்ற மக்கள் ஒழுங்குமுறையில் நடத்தற்கும் இல்லக்கிழத்தியின் அறிவுடைமையும், அவ்வறிவுடைமைக்குக் கல்வியுமே அல்லவா காரணங்கள்? ஆதலின், மாணவிகள் கல்வியில் கடைத்தேறுதற்கேற்ற வழிகளைத் தேடல் தலைவியாருக்கு இன்றியாத கடமையாயுள்ளது.

8. கலைமகள் கழகம்

மாணவிகளின் கல்வி முன்னேற்றத்தைக் கருதி இந்து நிலையத்தில் "கலைமகள் கழகம்" என்னும் பெயர் பூண்ட ஒரு கழகம் 1920 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் ஏற்படுத்தப்பட்டது. அதற்குத் தலைவியர், உதவித் தலைவியர் தவிர, செயலாளர், நிதிக்காப்பாளர், செயற்கூட்ட உறுப்பினர் யாவரும் அம்மாணவிகளாகவே அமைந்தார்கள். வெளிச் சகோதரியர் சிலர் மற்ற உறுப்பினராய் இருந்தனர். ஒவ்வொரு திங்களின் நான்காவது சனிக்கிழமைதோறும் கழகம் நடைபெறும். வெளி உறுப்பினருக்கு அழைப்புக் கடிதம் அனுப்புதல், முறைப்படி சில மாணவிகளைச் சொற்பொழிவாற்றத் தூண்டுதல், உறுப்பினரிடமிருந்து பணம் பெறுதல், வரவு செலவுகளைத் தக்க முறையில் குறித்து வைத்தல், நடைபெறும் ஆண்டுக்கொண்டாட்டத்தில் ஆண்டறிக்கையை எழுதிப் படித்தல் யாவும் நிலைய மாணவிகளே செய்தல் வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் படித்தவர்களைத் தலைமை ஏற்குமாறு செய்து, நிலையத்தைவிட்டுச் சென்ற பழைய மாணவிகளும் புதிய மாணவிகளும் சொற்பொழிவாற்றுவார்கள். அவ்வமயம் நூற்றுக்கணக்கான பெண்கள் வந்து குழந்தைகளுக்கு இன்பத்தை அளிப்பார்கள். அதனால், அவர்களுக்குப் பேசும்தன்மை, பேசப்போகும் பொருளைப் பல நூல்களிலிருந்தும் திரட்டி எடுக்கும் திறமை, ஒருகழகத்தை நிறுவி நடத்தும் வன்மை, கணக்கைப் பிழையின்றிக் குறித்துவைக்கும் முறைமை, கழகத்துக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்கும் பழக்கம் முதலியன கைவந்திருந்தன.

இப்பழக்கத்தினால் நிலையத்தைவிட்டுச் சென்ற சில மாணவிகள் தாங்களே கழகங்களை ஏற்படுத்திச் சிறப்பாக நடத்துகின்றார்கள் எனவும், அஞ்சாமல் அழகாகச் சொற்பொழிவாற்றுகின்றார்கள் எனவும் யான் அப்போதைக்கப்போது கேள்வியுறுகின்றேன். அங்கத்தினர் கொடுத்த பணத்தைக்கொண்டு, ஆங்கிலம் தமிழ் தெலுங்குப் புத்தகங்கள் வாங்கி; பெரிய நூல்நிலையம் ஒன்று நிறுவப்பட்டது; அந்த நூல்நிலையம் அவர்கள் கல்லூரிப் பாடங்களுக்கும் சொற்பொழிவிற்கும் உதவி புரிந்தது.

பொது அறிவு: தமிழ் ஆங்கில இதழ்கள் (பத்திரிகைகள்) சில நிலையத்திற்கு இலவசமாய் வருதல் உண்டு. அவ்விதழ்களை ஒவ்வொரு நாளும் இரவு ஒன்பது மணிக்குமேல் ஒரு மாணவி படிக்க மற்றவர் கேட்பர். அன்றியும், அப்போதைக்கப்போது பொதுச் சங்கங்களுக்கும் அவர்களை அழைத்துப்போதல் உண்டு.

அஃது அவர்களுக்குக் கற்பவர் பலர் பேசும் பல திறப்பட்ட பொருள்களைக் கேட்டுப் பொது அறிவைப் பெறுதற்கும், பலரைத் தெரிந்துகொள்வதற்கும் இடந் தந்தது. சில சிறுமியர், அங்குக் கேட்டவற்றைத் தாங்கள் கழகத்தில் பேசுங்கால் எடுத்தாண்டு கொள்வர்.

உல்லாசப் பிரயாணம்: 'உல்லாசப் பிரயாணம்' மாணவருக்கு எத்துணை வியப்பையும், பொது அறிவையும் அளிக்கின்றதென்பதை ஆசிரியர் ஒவ்வொருவரும் அறிவர். ஓரிடத்திற்குச் செல்வதாகத் திட்டம் வகுப்பதிலிருந்து, திரும்பி வரும்வரையில் அது சிறுமிகளுக்கு இன்பந் தருவதேயாகும். குறித்த இடத்தைச் சேர்ந்து செயல்கள் ஆற்றுங்கால், அவர்களுடைய

களிப்பு கரைபுரண்டோடும். அவண் உண்டல், உறங்கல், சில இடங்களைச் சுற்றிப் பார்த்தல் முதலிய யாவும் அவர்கட்கு மகிழ்வளிப்பனவே. இல்லந் திரும்பிய பின்பும் அதைப்பற்றிய இன்பப் பேச்சுகள் அவர்களிடையே ஒரு வாரத்திற்குக் குறையாமல் நடைபெறும்.

இந்து நிலையப் பெண்களை விடுமுறை நாட்களில் சென்னையில் உள்ள கண்காட்சிச்சாலைகள், அடையாறு, அச்சகம், எழுதுகோல் செய்யும் இடம் முதலியவற்றிற்கும், வெளியிடங்களில் உள்ள திருவொற்றியூர், மகாபலிபுரம், பூவிருந்தவல்லி, பல்லாவரம், பாண்டிச்சேரி ஆகிய பல ஊர்களுக்கும் அழைத்துச் செல்லுதல் உண்டு. அவண் சின்னாட்கள் தங்கும்போது அங்கு உணவிற்காகவும், மற்றவற்றிற்காகவும் செலவிடும் பணக் கணக்கைக் குறித்துவைக்கும் செயலை அம் மாணவிகளின் பொறுப்பிலேயே விட்டுவிடுதல் வழக்கம். காய்கறிகள் சிற்றுண்டிகள் யாவும் அவர்கள் விருப்பத்தின்படி செய்யப்படும். இவை அவர்கட்கு ஊக்கத்தையும் பேரின்பத்தையும் ஊட்டுவனவாகும். செல்லும் வழியில் காணப்படும் இயற்கை செயற்கை அழகுகள், புகைவண்டியின் கட்டணம், செல்லும் வழி, அந்தந்த இடத்தின் இயல்புகள், அங்குக் காணும் சிறப்புகள் முதலியன அவர்கள் மனத்தில் நன்கு பதிந்துவிடுகின்றன. அவற்றை அவர்கள் திரும்பிவந்த பின்பு மற்றவருக்கும் சொல்லி அவர்களுடைய பொது அறிவையும் பெருக்குவதைக் காணலாம்.

நிலையத்தில் ஒவ்வொரு நாள் மாலையும் யான் இறைவழிபாடு முடிந்தவுடன், ஒழுக்கம், நீதி, வாழ்க்கையை

நடத்தும் முறை, பத்தி முதலியவற்றையும், பொது அறிவை ஊட்டும் உலகச் செய்திகளையும் பதினைந்து நிமிடங்களுக்குச் சொல்வதுண்டு.

ஒவ்வொரு கொண்டாட்டநாளிலும், விரதநாளிலும் அதைப்பற்றிய உண்மையும், அதைப் பொதுமக்கள் மனத்தில் ஊன்றவைத்தற்கு ஏற்பட்ட புராணக் கதையும், அதனிடமிருந்து நாம் பற்றவேண்டிய நீதியும் போதிக்கப்படும்.

இலக்கிய அறிவு: கிழமைதோறும் சனி ஞாயிறுகளில் 4, 5, 6-ஆம் படிவப்பெண்களுக்குத் திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம் முதலியனவும், 1, 2, 3-ஆம் படிவப்பிள்ளைகளுக்கு, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலியனவும் பாடஞ் சொல்லப்பட்டன. அவர்கள் வீட்டிற்குச் செல்லும் விடுமுறை நாட்களில் மேற்குறித்த நூல்களில் சில பிரிவுகளை உரையுடன் கற்றுவரச் செய்து, அவற்றுள் தேர்வு வைத்து முதல் இரண்டாவதாய்த் தேறியவர்களுக்குப் பரிசு கொடுப்பது வழக்கம். வழிபாட்டறையில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், தாயுமானவர் பாடல், நாலாயிரப் பிரபந்தம் முதலியவற்றிலுள்ள சில பாடல்களைப் பாடுவர். நாளடைவில் அப்பாசுரங்கள் யாவும் அவர்கட்கு மனப்பாடமாய் வந்துவிடும். அவற்றுள் சில பண்ணிசையோடு கற்பிக்கப்பட்டன. "ஸ்ரீ பைசானி மாதவச் செட்டி தர்ம நிதியில்" ஆண்டுதோறும் நடைபெறும் "பிரபந்த பண்ணிசை"ப் போட்டியில் ஓராண்டு ஒரு மாணவி தங்கப் பதக்கமும், மற்ற ஆண்டுகளில் பல மாணவிகள் வெள்ளிப் பாத்திரங்களும், புத்தகங்களும் பரிசாய்ப் பெற்றார்கள்.

9. நட்பு

மக்கள் பிறர் கூட்டுறவு இன்றி வாழுதற்கியலாது. அஃதே உயிர்களுக்கு இன்பந் தருவது! மனிதரின் போக்குவரவற்ற காட்டிலிருந்து தவம் புரியும் துறவியும், தன்னைத்தான் மறந்து இறைவனோடு கூட்டுறவு கொள்ளுதற்குக் காரணமாயுள்ள மனம் ஒன்றுபட்டு அமருங் காலந்தவிர, மற்றையபோது அவனுள்ள இயற்கைப் பொருள்களோடு கூட்டுறவு கொண்டு, பறவைகளின் இனிய பாடல்களையும், மலரில் தேன் எடுக்கும் வண்டுகளின் இனிய ஓசையையும், மனத்தைக் கவரும் மலரின் நிறங்களின் வனப்பினையும், நீரோடைகளின் தெளிவையும், மெல்லிய காற்றின் அசைவையும் பார்த்துப் பார்த்து இன்பமடைகிறான். இவ்வியற்கையின் கூட்டுறவு இன்றேல், உலகப் பற்றுகளை முற்றும் துறந்த துறவியும் இன்புடன் வாழ இயலாது. இதனால், மக்கள் வாழ்க்கைக்குக் கூட்டுறவு இன்றியமையாததென்பது உணர்ந்தாம்.

இக்கூட்டுறவு மக்களுக்குப் பலவாறாக அமையும். சிலர் வேடிக்கை விநோதங்களோடும், சிலர் நூல்களோடும், சிலர் தம்மொத்த மக்களோடும் உறவாடுவர். தம்மொத்த மக்களோடு உறவாடுபவர்களுள் முதலணியில் நிற்பவர் சிறுவரே. இளைஞர், விளையாடுதல், உண்ணல், உறங்கல், படித்தல் ஆகிய எச்சமயத்திலும் பிறரோடு சேர்ந்திருக்கவே விரும்புவர். அதினும் தன்னொத்த சிறுவரைக் காணுங்கால் அவர்கட்கு உண்டாகும் களிப்பிற்கு அளவு கூற இயலாது அவர்களோடு சேர்ந்து விளையாடுங்கால், அவர்கள், உணவையும் உறக்கத்தையுங்கூட விரும்புதல் இல்லை.

ஆயினும், வயதேற ஏற இவ்வியல்பு சிறிது குறையினும், மற்றக் காரியங்களைக்காட்டிலும், பிறரிடம் நட்புப் பூண்டொழுகும் செயலே அவர்களுக்குத் தலை தூக்கி நிற்கும். ஆதலின், அவர்கள் அண்டை அயலிலுள்ள சிறுவரோடு நட்புக்கொண்டொழுகுவர். பெரும்பான்மையும் ஒருவர் கொள்ளும் நட்பே அவர் உயர்விற்கும். தாழ்விற்கும் காரணமாகு மென்றும், நட்பினரைக் கொண்டே ஒருவர் குணத்தன்மையை அறிந்து கொள்ளலாமென்றும், நிலத்தின் இயல்பிற்கேற்ப நீர் திரிதல் போன்று, நட்பினர் பான்மைக்குத்தக மக்களுடைய குணங்கள் மாறுமென்றும் நூல்கள் அறைகின்றன. நம் பழக்கத்திலும் இம்மாறுபாட்டைக் காண்கின்றோம். ஆதலின், பெற்றோர் தம் மக்கள் நட்புக் கொள்ளும் இடத்தை அப்போதைக்கப்போது ஊன்றி நோக்கி, நல்லவர்களுடன் அவர்களை உறவாட விடவேண்டும். தம்மக்கள் தீ நட்போடு சேருங்கால் அதை அப்போதே ஒழித்துவிட வழிதேடல் நலம். ஏனெனில்,

> " ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
> தான்சாந் துயரந் தரும் "

என்பதைச் சிறுவர் அறிந்தவரல்லரே !

இந்நட்பின் திறத்தை நிலையத்தில் நுழைந்து காண்பாம் : நிலையப் பிள்ளைகள் யாவரும் கல்வித் துறையில் இருப்பவராயும், எல்லாம் ஒரு முறையிலேயே பழகுகின்றவராயும் இருப்பினும், அங்கும் சிற்சில துன்பங்கள் உண்டு.

ஒரு மாணவிக்கு, வீட்டிலிருந்து வரும் மிகுந்த சிற்றுண்டிகளைக் கருதியோ, அவளிடமிருக்கும் நல்ல ஆடைகளைப் பார்த்தோ சில மகளிர் அப்பெண்ணிடம் நட்புக்

கொள்வர். சின்னாட்கள் சிற்றுண்டிகளைப் பகிர்ந்துண்ணல், சேலைகளை மாற்றி உடுத்தல் முதலிய திருவிளையாடல்கள் நடைபெறும். அவர்களுடைய நட்பு ஊற்றத்தில், இங்ஙனம் செய்தல் கூடாதென்னும் நிலையக் கோட்பாடுகளும் அவர்கள் மனதிற்குத் தோன்றுதல் இல்லை. சின்னாட்களுக்கு மறைந்து கிடக்கும் இச்செயல்கள் பின்பு வெளிப்பட்டுவிடும். பலர் உறையுமிடத்தில் நடைபெறுவன எத்துணை நாட்களுக்கு மறைந்திருக்கக் கூடும்! வேறு சிலருக்கு இதில் பொருமையும் ஏற்படுவதுண்டு. அப்பொருமை, "ஏன் நாமும் அவளோடு கூட்டுறவுகொண்டு அவற்றில் பங்கு பெறக் கூடாது," என்னும் தீய எண்ணம், பழைய நண்பர்களின்பேரில் பல குறைகளைக் கூறி அவர்களைப் பிரிக்க வழிதேடும். ஊன்றி நோக்கும் உயர் அறிவைப் பெருத மாணவி, புதிய நண்பர் வார்த்தையை நம்பிப் பழைய நட்பினரைக் கைவிடுவாள். அதிலிருந்து உண்டாவன, சண்டை சச்சரவும், கோளும் குறைகளும்தாம். இவை சிறிது சிறிதாக முற்றித் தலைவியாரிடம் வந்து சேரும். இச்செய்கையைத் தலைவியார் மேற்போக்காகக் கேட்டுவிட்டுவிடின், குழந்தைகளுக்கு மனநிறைவு உண்டாகாமற்போவது மட்டுமேயன்றி திரும்பவும் அச்செயல் கிளைத்துக்கொண்டே இருக்கும். ஆதலின், தலைவியார் அச்செயலில் உட்சென்றே போகவேண்டும். அங்ஙனம் போகுங்கால், அச்செய்தி ஒருவர் இருவரோடு போதவில்லை. பார்த்தவர் ஒருவர், கேட்டவர் ஒருவர், மறுத்தவர் ஒருவர், புத்தி புகட்டியவர் ஒருவர் இங்ஙனம் பலபேர் சங்கிலி கோத்ததுபோன்று ஒருவருக்குப்பின் ஒருவர் தொடர்ந்துகொண்டே வருவர். அதைக் கேட்டறிந்து ஒரு முடிவிற்கு வருவதற்குள் தலைவி

யாருக்கு ஏற்படும் தொல்லே இத்துணைத்தென அளவிட முடியாது. ஆனல், இத்துன்பத்திற்குக் கூடியமட்டும் பயன் கிடைக்கும். சில திங்கள்வரையும் இதைப்போன்ற நட்பு நிலையத்தில் முளையாமலொழியும். பின்பு சிறிது முளைத்தாலும் உடனே வெளிப்பட்டு மாயும்.

1. "நட்புப்பாராட்டுந் தன்மை, மக்களுக்கு இயல்பும், பெற்றேர் மற்றேரைவிட்டு நிலையத்தில் தனியே வாழும் சிறுமியருக்கு இன்பமூட்டுவதுமன்றே! இதைத் தடுத்தல் ஏன்? அங்ஙனமே விட்டுவிடுவதால் உண்டாகும் குறை யாது?" எனச் சிலர் வினவலாம்! அங்ஙனமே விடின், இச்செயல் ஓர் அளவில் நிற்றல் இல்லை. இது காசைக் கடன் வாங்கல், நகையை மாற்றிக்கொள்ளல் முதலிய பெரிய நிலைக்கும் செல்லும். காசைத் திருப்பித் தராதபோது அவர்களுக்குள்ளே சண்டை ஏற்படும். அணியை ஒடித்தல், காணுதுபோடல் முதலிய குற்றங்கள் நேருங்கால், இது பெற்றேர்வரை சென்று பெரிய தொல்லையாக முடியும். பெற்றேருள் சிலர் தம் மக்களின் அறிவற்ற தன்மையையும், கோட்பாட்டிற்குக் கீழ்ப்படியாமையையும் பெரிதாகக் கருதுவதில்லை; அவ்வணி பாடசாலையிலோ, வரும் வழியிலோ தொலைந்திருப்பினும், நிலையத்தில் போயிற்று என்பதுதான் அவர்கள் எண்ணம். ஆதலின், அவர்கள், "நிலையத்திலுள்ள வேலையாட்களும், சில பிள்ளைகளும் திருட்டுத்தொழிலைச் செய்கிருர்கள் என்றும், தலைவியார் முதலிலேயே அவர்களைக் கண்டித்திருந்தால், இப்போக்குக்கு வழி உண்டாயிராதென்றும்," சொல்லுவார்கள். இப்பெயர் எப்போதும் நிலைபெற்று நிலையத்திற்கும், தலைவியாருக்கும் இழிவைத் தருமன்றே! ஆதலின், தலைவியார் இச்செயலில் மிக்க பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

2. இரண்டு பேர் ஒருவருக்கொருவர் நட்புப் பாராட்டுவர். இந்நட்புச் சிறிது சிறிதாக வளரும். ஒருத்திக்கு இருக்கும் புடவை சட்டைகள் போலவே இன்னொருத்தியும் வாங்குவாள். படக்காட்சி முதலிய இடங்கட்குச் செல்லுங்கால் ஒருத்தி போனால், மற்றொருத்தியும் ஏகுவாள். ஒருவருக்குக் காசின்றேல் மற்றொருவர் கொடுப்பர். படுத்தல், படித்தல் செல்லல் யாவும் ஒன்றாகவே நடைபெறும். ஒருவரைவிட்டு ஒருவர் எப்போதும் பிரிதல் இல்லை. ஒருத்தி விரும்பும் பாடத்தையும் ஆசிரியரையுமே மற்றொருத்தியும் விரும்புவாள். இஃது ஒருத்திக்கு உண்மையாகவும், மற்றொருத்திக்குத் தன் தோழியின் பொருட்டுப் போலியாகவும் நிகழும். ஒருத்தி எந்தெந்தப் பாடத்தைத் தனக்கு வாராதெனத் தள்ளிவைக்கின்றனளோ, அதை மற்றொருத்தியும் கைவிடுவாள்; அவ்விருவரும் உணவு கொள்வதிலும் அவ்வண்ணமே நடந்துகொள்வர். படிப்பதாகப் பாவனை செய்து கையில் புத்தகம் தூக்கி ஒரு மூலைக்குச் செல்வர். ஆனால், அவண் நடைபெறுவது பேச்சே அன்றிப் படிப்பன்று. இப்பேச்சு பல மணி நேரத்தையும் விழுங்கிவிடும். பத்து மணிக்கு மேல் சிறு ஒலியையும் உண்டாக்குதல் கூடாது என்னும் கோட்பாடிருப்பினும், யாவரும் தூங்கும்வரை அவரும் உறங்குவது போன்று நடிப்பர். பின்பு பேச்சுத் தொடங்கும். அது முற்றுப்பெறுவது ஒரு மணிக்கோ, இரண்டு மணிக்கோ அறியோம். அப்பேச்சுகள் தங்கள் குடும்பத்தைப் பற்றியனவும், மற்ற மாணவிகள், ஆசிரியர்கள் முதலியவர்களைப் பற்றியனவுமாய் இருக்கும். இவற்றால், இருவருக்கும் உண்டாகும் பயன் யாதொன்றுமில்லை என்பது திண்ணம். எப்போதும் தம் நோக்கை மாணவி

களிடமே செலுத்தும் தலைவியார் இச்செயலை அறியாமலிருத்தல் இல்லை. அவரும் அப்போதைக்கப்போது பொதுவாகக் கண்டித்துக்கொண்டுதான் வருவார். கண்டிக்குங்கால், அச்செயல் சில நாட்களுக்குக் குறைவுபடும். திரும்பவும் பழையபடியே கிளைக்கும். ஆனால், முற்றும் ஒழிவதற்கும் ஒரு காலம் உண்டு: இவ்விருவருள் ஒருவருக்கு முற்கூறியபடி புதிய நட்பினள் ஒருத்தி கிடைத்துவிடவேண்டும். அவள் பழையவளிடம் பாராட்டிய நட்பைப் புதியவளிடம் பாராட்டவேண்டும். அப்போதே வந்தது வம்பு! பழைய நட்பினளுக்குப் பொறாமை உண்டாய்விடும். அவ்விருவருக்கும் அப்போதைக்கப்போது உள்ளுக்குள்ளே சிறு சிறு சண்டைகள் நிகழும். புதிய நட்பினள் மிகுதியாக ஒன்றும் பேசமாட்டாள். பழைய நட்பினள் செய்யும் செயல்களே யாவருக்கும் வியப்பைத் தருவதாகும். இவள் தம் இருவருக்குள் முன்பு நடந்த இரகசியங்கள் யாவற்றையும் மற்றவருக்குத் தெரிவிப்பாள்; சிலபோது, தான் நட்புப் பாராட்டியவள் அற்பகுணமுடையவள் என அவளைத் தூற்றுவாள்; சிலபோது அவளோடு நட்புச்செய்த புதியவள் மிகக் கெட்டவள், அவளால்தான் தன் நட்பினளின் மனம் கெட்டுவிட்டது எனப் பழிப்பாள். இவளுடைய பழைய நட்பினள் திரும்பவும் இவளிடம் நட்புப் பாராட்டியபோதோ, அன்றி இவளுக்கு வேறு நட்பினள் அகப்பட்டபோதோதான் இப்பூசல்கள் ஒருவாறு ஒழியும்.

3. சிலர், தமக்கு உண்கலம் அலம்பிவைத்தல், துணிகள் எடுத்துத்தரல், தம் இடத்தைத் தூய்மைப் படுத்தல் முதலிய குற்றேவல் புரிதற்பொருட்டே சிலரிடம் நட்புப் பாராட்டுவர்; அவர்கள் பெரும்பான்மையும்

தம்மைக் காட்டிலும், வயதிலும் வகுப்பினும் குறைந்தவர்களாய் இருக்குமாறே தேர்ந்தெடுத்துக்கொள்ளுவர். ஆனால், இப்பெரிய பெண்களோ, அச்சிறுமியரிடம் நயமாகப் பேசுதல் தவிர, அவர்களுக்கு வேறொரு உதவியும் செய்தல் இல்லை. சிறிய பெண்களோ, பெரியவர்களின் நட்பு தமக்குக் கிடைத்தால் போதுமெனக் கருதி பல வேலைகளையும் அவர்களுக்குச் செய்வார்கள். பெரிய பிள்ளைகளுள் இன்னும் சிலரும் மேற்கூறிய சிறுமிகளுக்கு வேலையிடுவர்; அவர் செய்ய இணங்கவில்லையேல், அதை மனத்திற்கொண்டு அவர்களை அடிக்கடி வைவது மட்டுமே அன்றி, அவர்கள்மேல் குற்றங் குறைகளைச் சாட்டி அவர்களுக்குத் தண்டனையையும் வாங்கித் தருவர். இவை இளைஞர் இயல்பு. இச்செயலை பெரிய குற்றத்தின் பாற்பட்டதாக நினைத்தல்கூடாது. அங்ஙனம் நினைப்பது அறிவுடைமையுமாகாது. ஆதலின், நிலையச் சிறுமிகளின் உணவு, கல்வி, உடல் நலம் முதலியவற்றைக் கண்காணித்தலே தலைவியாரின் முதற் கடமையாயிருப்பினும், சிறுமியரின் உயர்ச்சியில் கண்ணுங் கருத்துங் கொண்ட தலைவியார், அவற்றோடு தம் கடமை முற்றுப்பெற்றதெனக் கருதார்; சிறுமியரின் நல்லொழுக்கத்திலும் தம் மனத்தைச் செலுத்துவர். அதற்கேற்ற முறைகளைத் தேடுதலிலேயே அவர் எண்ணமும் செல்லும். ஒழுக்கம் உயிரைக்காட்டிலும் சிறந்ததன்றோ! ஒழுக்கமன்றோ மக்களை உயர்த்துவது! இம்மைக்கும் மறுமைக்கும் இன்னலமளிப்பது அஃதே என்பதை அறிவுடையவர் மறுப்பரோ! கல்வி எங்ஙனம் இளமையையும் முயற்சியையும் நாடிச் செல்கின்றதோ, அங்ஙனமே நல்லொழுக்கமும் இளமையையும் கூட்டுறவையும் பழக்கத்

தையுமே தேடியோடுகிறது. "தொட்டில் பழக்கம் சுடு காடு மட்டும்," "பழக்கம் கொடியது பாறையிலும் கோழி கீறும்" என்னும் பழமொழிகளை மறுப்பவர் யார்? இம்முறையில் குழந்தைகளிடம் தீயவை ஒன்றும் கலவாதவாறு பார்த்துக்கொள்ளலே தலைவியார் முக்கிய கடமையாகும்.

அவர்கள் போனபோக்கில் விட்டுவிடின் பொருளழிவு, கல்விக் கேடு, வீண் காலப்போக்கு, பயனற்ற சொற்களைப் பேசும் பழக்கம், கீழ்ப்படியாமை, உடல் நலக் குறைவு, பொறாமை, பகை, சோம்பல் முதலிய பல தீமைகள் விளையும். அன்றியும், மாணவிகள் நிலையத்தில் வதியும் நாலைந்து ஆண்டுகளில், இத்தீயபழக்கங்கள் அவர்கள் மனத்தில் நன்கு பதிந்து, பின்பு எவ்வகைமுயற்சியினாலும் அவை போக்கமுடியாதனவாகும். இது பெற்றோருக்குப் பெருந்துன்பம் அளித்தல்மட்டுமே அன்றி, அச்சிறுமியரும் பலரால் இகழப்படுவர். அவர்தம் வாழ்க்கை இன்பத்தையும் பெருமையையும் இழக்கும் இத்தீமைகளுக்கு நிலைய வாழ்க்கையே காரணம் எனப் பலர் தூற்றுவர். சிலர் தம் மக்களை நிலயத்திற்கு அனுப்புதற்கே அஞ்சக்கூடும். இத்தனை கெடுதிகளுக்கும் காரணமாயுள்ள இத்தீப்பழக்கங்களை ஒழிப்பதற்குத் தக்க முயற்சியை எடுத்துக்கொள்ளல் தலைவியாரின் முக்கிய பொறுப்பன்றோ!

ஆனால், இச்செயலில் பல துன்பங்கள் உள்ளன. சிறுமியரின் இயல்போ, ஒருவரிடமும் சேராது தனித்திருத்தற்கு இடந்தாராது. கல்வியில் உதவி பெறுவதற்கோ, அப்போதைக்கப்போது தம் மனத்தில் ஏற்படும் இன்ப துன்பங்களைச் சொல்லிக்கொள்வதற்கோ,

இன்றியமையாத காலங்களில் சிறு உதவிகளைப் பெறு தற்கோ சிறுமியர் சிலருடன் நட்புக்கொள்ளத்தான் வேண்டும்; ஆயினும், அத்தகைய நட்பினருள் ஒருவர் பால்தான் அவர்கள் உண்மை அன்பு செல்லும். நட்பினரை ஆய்ந்தாய்ந்து கொள்ளும் திறமோ அப்பருவத்தில் அவர்கட்கு ஏற்பட வழியில்லை. இம்முறையில் தலைவியார், "நீங்கள் ஒருவருக்கொருவர் நட்புப் பாராட்டல் கூடாது" எனக் கண்டித்தலும் தகுதியுடையதன்று. அக்கண்டிப்பு நாகரிகமற்றதாய் இருத்தல்மட்டுமே யன்றி, மக்கள் இயற்கைக்கும் மாறுபட்டதாகும். இக் கோட்பாடு செயலில் பயனளித்தலும் அருமை.

இங்ஙனம் தலைவியார் கண்டித்தலில் இன்னொரு குற்றமும் உள்ளது. அத்தகையவரைத் தலைவியார் என்று கண்டித்தனரோ, அன்றையிலிருந்துசிலர், "யாரிடம் யார் நட்புக்கொண்டுள்ளனர் என்பதைக் கண்டு பிடித்துத் தலைவியாரிடம் சொல்லிவிட வேண்டும்," என்னும் எண்ணத்தினால் அதிலேயே கருத்தைச் செலுத்துவர். இரண்டுபேர் சிறிது நேரம் ஓர் இடத்திலிருந்து பேசினாலும், ஒருவர் செல்லும் இடத்திற்கு மற்றொருவர் சென்றாலும், ஒருவருக்கொருவர் சிறிது உதவி செய்து கொண்டாலும், பரிந்து பேசினாலும், ஒருத்தி மற்றொருத்தியை நோக்கி இச்சேலை "உனக்கு நன்றாக இருக்கிறது," என்று சொன்னாலும் இவற்றிற்குப் பல காரணங்கள் இருப்பினும், அவை சிலர் மனத்தில் படுதல் இல்லை. "இவர்கள் இருவரும் நட்புக் கொண்டுள்ளனர்" என்னும் எண்ணந்தான் அவர்களுக்குத் தோன்றும். அதனால், சிலர் ஒற்றரைப் போன்று, அவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் மனத்தையும் கண்ணையும் செலுத்தி அவர்களைக் கண்டபோதெல்லாம், "இருவரும்

நட்பினர்,'' எனக் கூறி ஏளனஞ் செய்வர். இங்ஙனம் மற்றவர் கூறும் சொற்களே அவர்கட்கு ஊக்கத்தைத் தந்து, நட்பினர் பின்னே அலையுமாறும் நிலையக் கோட்பாடுகட்கு விலகி நடக்குமாறும், தங்கள் கடமைகளை நழுவவிடுமாறும் செய்யும். இந்நிலையில், அவ்விருவரிடமும் சிறு குற்றம் காணப்படினும், அது பன்மடங்காகத் தலைவியாரிடம் வந்துவிடும். தம் கல்வியையும், மற்றக் காரியங்களையும் விட்டு இதுவே தொழிலாகத் திரிபவரும் உண்டு.

அங்ஙனம் கோள் உரைப்பவர் வார்த்தைகளைக் கொண்டு பிறரை வினவுங்கால், அவற்றுள் சிலவே உண்மையாய் இருக்கும். சிலபோது அவையும் பெருங் குற்றங்களாய் இரா. ஆயினும், இதைக் கேளாமல் தலைவியார் விட்டுவிடிலோ, மற்றவரும் இத்தகைய செயலை மேற்கொண்டு வீண் காலப்போக்கிற்குத் தம்மையும் உட்படுத்திக் கொள்வர். இதனால், ஏற்படும் துன்பங்களோ அளவிறந்தன.

ஒருகால், நட்புத் தொகுதிகளுள் ஒரு சாராரை அழைத்து விசாரிக்கில், அவர் இன்னொரு தொகுதியைக் குறிப்பித்து, "நட்புமுறையில் அவர்கள் நடந்துகொள்வதுதான் மிக்க முறையற்றது! நாங்கள் அத்தகைய நட்பைப் பாராட்டுதலுமில்லை; எங்கள் பாடத்திற்கும், கோட்பாட்டிற்கும் குறைவு உண்டாகுமாறு நடத்தலுமில்லை. பாடத்திற்கு ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்ளவே நாங்கள் நட்புடையராய் இருக்கின்றோம்," என்று சொல்லுவர். அத்தொகுதியோ, வேறொரு தொகுதியைக் குறிப்பிக்கும். இங்ஙனம் அது முன்போலவே முடிவில்லாமற் போய்க்கொண்டே இருக்கும்.

இவர்கள் பேசுகிற பேச்சுகளோ முறையாகவும் அவ்வாறு செய்யமாட்டார்களெனவும்தான் தோன்றும். ஒவ்வொருவரும் அதனுடைய தீமையையும் அதன் பொருட்டுத் தலைவியார் அடையும் துன்பத்தையும் அறிந்தவர் போன்றே பேசுவார்.

இதை ஊன்றி நோக்கின், இவ்வியல்பினை, தலைவியார் அதிகம் தெரிந்துகொள்ளாதவர்போன்று நடிப்பதே நலம். ஆனால், தலைவியார் பொதுவாக இத்தகைய நட்பினால் ஏற்படும் கெடுதல்களையும், நிலையத்திற்கு உண்டாகும் துன்பங்களையும், முன் நடந்த சில சான்றுகளையும் இனிமையாக எடுத்தோதி அவர்கள் மனத்தைத் தக்க வழியில் திருப்ப முன்வரலாம். சிலபோது தமக்குத் தெரிந்ததாகவும் கூறிப் புத்தி புகட்டலாம். ஓரோவொருகால் கண்டிப்பையும் கைக்கொள்ள வேண்டிவரும். இங்ஙனம் அடிக்கடி செய்யுங்கால் கூடியமட்டும் இத்துன்பம் குறையும். இவ்வழிக்கே செல்லாத சில பிள்ளைகளும் உண்டு. அவர்கள் இக்காரியத்தில் தலைவியாருக்கு நன்மை செய்தவரேயாவர்.

இஃதன்றியும், தீக்குணமுடையவர் சிலர் நிலையத்தில் இருப்பின் அவர்களால் பல பிள்ளைகள் கெட நேரும். 'நிலையத்தில் வதிபவர் யாவரும் சிறுமியராகவும், நாள் முற்றும் கல்வி நிலையத்திலேயே வதிபவராயும், கல்லூரியில் பழகுவோர் கல்விகற்ற பெருந்தகையாளராகவும் இருக்க, இவர்கட்குத் தீக்குணம் எங்ஙனம் பதியும்,'' என்னும் ஐயப்பாடு தோன்றலாம். இயற்கையாலும், குழவிப் பருவப் பழக்கத்தினாலும், குடும்பப் போக்கினாலும், இன்னும் சிலவற்றாலும் மக்களுக்குக் குணங்கள் அமைகின்றன. அக்குணங்களை அறிவுரையால் முற்றும் மாற்றுவது மிக அருமை.

தீக்குணங்களை அறவுரையால், அறவே ஒழித்துவிடலா மெனக் கருதுபவர் முடிவில் ஏமாற்றமடைவர் என்பது திண்ணம். ஆனால், இதற்கு வேறு வழி ஒன்று உண்டு. அவர்கள் இயற்றுவது குற்றம் என்னும் உணர்ச்சி அவர்களுக்கே உண்டாக வேண்டும். அவ்வுணர்ச்சிதான் அவர்களை நல்வழிப்படுத்தற்குத் தக்க கருவி. அவ் வுணர்ச்சி வருதற்கேற்ற வழிகளைக் கையாளுதல் பெரியவரின் கடமையாகும். இதுவே நிலையத்தை நிறம்பெறச் செய்யும் திறவுகோல். நிலையத் தலைவி யாருக்குத் தொல்லை தரும் செயல்கள் சிலவற்றுள் இஃதும் ஒன்று.

குழந்தைகள் யாவரிடமும் சகோதர பான்மையுடன் ஒழுக அவர்களைப் பழக்குதல் நல்லது. ஆனால், அதை நீக்கக் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தல் ஆகாது. அஃது அவர்களுடைய தனி நட்பை அதிகப்படுத்திக் காலத்தை வீண்போக்கச் செய்யும். இதற்கு இன்சொற்களே தேவை. இக்கடமையைப் பெருந்தகைமையுடன் கையா ளில் நிலையமே தேவருலகம் போன்று மிளிரும். சின்னஞ் சிறுவர் களுக்கும் ஊன்றி நில்லாததும், பல தீமைகளை விளை விப்பதுமான போலி நட்பு நீங்கி, யாவரும் ஒற்றுமைப் பட்டு உடன்பிறப்புப் பான்மையை மேற்கொண்டு, அவரவர் காரியத்தைக் காலத்தில் செவ்வனே செய்து நிலையத்தில் தாம் வதிவதற்குத் தக்க பயனை அடைவர்.

10. செட்டு (சிக்கனம்)

நான் நிலயத்திற்குச் சென்ற 1920-ஆம் ஆண்டு மணமாகாத மாணவிகள் மூவருக்குமட்டும் திங்கள் ஒன்றுக்குப் பன்னிரண்டு ரூபாய் விழுக்காடு அரசினர் உதவித்தொகை கொடுத்து வந்தனர். இரண்டு குழந்தைகளுக்குப் புதுக்கோட்டை சமத்தானத்திலிருந்து உதவித்தொகை கிடைத்து வந்தது. மற்றையவர் பலரும் தம் சொந்தச் செலவிலேயெ கற்று வந்தனர்.

மேல்வகுப்பில் கற்போருக்கு அரசியலார் தரும் பன்னிரண்டு ரூபாய் போதுவதில்லை. ஆதலின். மாணவிகளின் செலவுத் திட்டங்களைப் பன்முறை அரசினர்க்கு அனுப்பிக் கேட்டுக்கொண்டதின்மேல், கீழ் வகுப்பிலிருந்து இரண்டாம் பாரம்வரை திங்கள் ஒன்றுக்குப் பன்னிரண்டு ரூபாயும், மூன்றும் பாரத்திலிருந்து ஆறும் பாரம்வரை பதினைந்து ரூபாயுமாய்க் கொடுக்கத் தொடங்கினர். இது மேல்வகுப்புச் சிறுமிகளுக்கு மிக்க பயனளித்தது. குழந்தைகள் கோடை விடுமுறை கழித்து நிலயம் வந்ததும், மே, சூன், சூலைத் திங்களின் உதவித்தொகை சேர்ந்து வரும். அதில் புத்தகங்கள் முதலியன வாங்கிய மிகுதியைப் பெற்றவரிடம் சேர்த்து விடுதல் வழக்கம்.

ஆனால், திங்கள்தோறும் கிடைக்கும் பணத்தில் உணவிற்குக் கொடுத்ததுபோக, மிகுதியை அவரவர் பெயரெழுதப்பட்ட சிறு பெட்டிகளிலிட்டு என் அறையிலிருந்த நிலைப்பேழையில் வைத்துவிட வேண்டும். செலவு நேர்ந்தபோது என்னிடம் தெரிவித்து அதை அவர்கள் எடுத்துக்கொள்ளலாம். மாணவிகள் கலாசாலையிலும், நிலயத்தில் கண்ட இடங்களிலும்

பணத்தை வைத்துத் தொலைத்துவிடுகின்றமையின் இவ் வேற்பாடு செய்யப்பட்டது.

சின்னுட்களுக்குப் பின்பு பெற்றோருள் சிலர், "இக் குழந்தைகள் உதவித்தொகை பெற்றும், பணத்தின் பொருட்டு அடிக்கடி எங்களுக்குத் தொல்லை கொடுக் கிறார்கள்," எனவும், சிறுமியரோ, "அடிக்கடி நாங் கள் பெற்றோரைப் பணம் கேட்பதில்லை. ஓரோ ஒரு போதுதான் கேட்கின்றோம்," எனவும் ஒன்றோடொன்று பொருந்தாத உரைகளைப் பகரலாயினர். இம்மாறுபட்ட சொற்களின் உண்மையை அறிதற்பொருட்டே, "மாணவிகள் செலவுகளுக்குக் கணக்கு வைத்தல் வேண்டும்," என்னும் ஏற்பாடு செய்யப்பட்டது. குழந் தைகள் கணக்கு வைக்கும் முறையைக் கற்றுக்கொள்ளு தற்கும், கூடியமட்டும் காசைச் செட்டாய்ச் செலவழித் தற்கும் இஃது ஒரு வழியாய் இருந்தது. உதவித்தொகை வாங்குகின்றவர்கள்மட்டுமே அல்லாமல் மற்றவரும் கணக்கு வைக்கும் முறையை மேற்கொண்டனர்.

1926-ஆம் ஆண்டிற்குள் உதவித்தொகை பெறு கின்றவர் மூன்றுபெயரிலிருந்து இருபத்தேழு பெயராயி னர். பின்பு சிறுமியர் விடுமுறைப் பணத்தைப் பெற் றோரிடம் கொடுத்தல் இல்லை. அஃது பெருந்தொகை யாயிருந்தமையின் பொருள்நிதியில் அதைக் கட்டி வந்தார்கள். இஃது அவர்களுக்கு நிதியில் பணம் கட்டு தல் வாங்குதல் எப்படி என்பதைத் தெரிந்துகொள்ளு தற்குப் பயனளித்தது. ஆனால், அரசினர், நாட்டில் ஏற்படும் செலவுகளின் சுருக்கு முறையை மேற்கொண்ட போது, மாணவிகளின் விடுமுறைத் திங்கள்களின் உத வித்தொகையையும் நிறுத்திவிட்டு, ஒன்பது திங்களுக்கே கொடுத்து வந்தனர். அப்பணத்திலும் அவர்கட்குச்

சிறிது மீதப்பட்டு வந்தது. உதவித்தொகை பெறும் மாணவிகள், ஒவ்வோர் ஆண்டும் மிகுதிப்பட்ட பணத்தில் ஏதேனும் ஒரு வெள்ளிப்பாத்திரம் வாங்குவது வழக்கம். முதல் பாரத்திலிருந்து ஆறும் பாரம் வரையும் படித்து வீடு செல்லும் மாணவிக்கு நாலைந்து வெள்ளிப் பாத்திரங்களுடன், ஏறக்குறைய அறுபது ரூபாய்க்குக் குறையாமலும், எண்பது ரூபாய்க்கு மேற்படாமலும் மிகுதிப்படும். அஃது அவர்களுடைய மேல்படிப்பிற்குப் பெரிதும் பயனளித்து வந்தது. அவர்கள் அடிக்கடி படக்காட்சிக்குப் போதற்கோ, பயனற்ற செலவுகளைச் செய்வதற்கோ, வீணான பல பொருள்களை வாங்குதற்கோ, அளவிற்கு விஞ்சிய துணிகளை எடுத்தற்கோ விடப்படுதல் இல்லை. பணத்திற்குப் பெற்றோரையும் துன்பஞ் செய்தல் கூடாது; எதிலும் தம் வரவிற்கேற்ப செட்டாகத்தானிருக்க வேண்டும். இச்செட்டு அவர்கள் வாழ்க்கையில் அவர்களுக்கு மிக்க பயனளிக்கக் கூடுமெனக் கருதியே அவர்கள் அங்ஙனம் பழக்கப்பட்டார்கள்.

ஆண்டுத் தொடக்கத்தில் வீட்டிலிருந்து கொண்டு வரும் துணிகளையும், மற்றப் பொருள்களையும் இரண்டு தாள்களில் குறிப்பித்து ஒன்றை என்னிடம் தந்து, மற்றொன்றை அவர்கள் வைத்துக்கொள்ள வேண்டும். விடுமுறைக்கு வீடு செல்லுங்கால் அவற்றைக் கணக்குப் பார்த்தல் வழக்கம். ஏதேனும் குறைவுபடின் அதற்குக் காரணம் சொல்லவேண்டும். எழுதுகோல், நோட்புக்கு, இரப்பர் முதலியவற்றிற்கும் கணக்கிருத்தல் வேண்டும். இதனால் பொருள்களிடம் கவலையற்றிருக்கும் நிலை ஒழிந்து ஒவ்வொரு சிறு பொருளையும் கருத்துடன் ஆளும் செட்டுத்தன்மை அவர்களிடம் குடிபுகுந்தது.

11. அறம்

அறம் என்பதற்குப் பொதுப்பொருள் கடமை என்பது. அவரவர்கட்கு ஏற்பட்ட கடமைகளைத் திருத்தமாகச் செய்வதே அறச்செயலாகும். இதை விளக்குதற் பொருட்டே திருவள்ளுவர் தம் நூலின் முதற்பகுதிக்கு அறத்துப்பால் எனப் பெயரிட்டு அதில் பல பொருள்களையும் விரித்துள்ளார். இதனால், தனக்கும் பிறருக்கும் நன்மை அளிக்கும் செயல்கள் எவையோ, அவையே அறம் எனப்படுகின்றதென அறிந்தோம். ஆனால், பலர், அறம் என்பதற்குத் தருமம் என்னும் பொருளையே சிறப்பாகச் சொல்லுவர். இஃது அறத்தின் ஒரு பகுதியேயன்றி இஃதே அறத்திற்கு உண்மைப் பொருளன்று. திருவள்ளுவர் அறத்துப்பாலில் ஈகை என்னும் ஓர் அதிகாரத்தைத் தனியே வகுத்துள்ளதை நோக்குக. இதனால், தருமம் என்பது அறத்திற்குள் அடங்கியதென்பது பெறப்பட்டது.

இன்னும், நம்மவருள் சிலர், பொருளாற் செய்வது மட்டுமே தருமம் எனக் கருதுகின்றனர். அது தவறு. மனம் வாக்குக் காயங்களால் பிறருக்குச் செய்யும் உதவிகளும் தருமத்தின் பாற்பட்டனவே! நாம் செய்யும் தரும காரியங்கள் தவிர வேறொன்றும் நம் ஆன்மாவைப்பற்றிக்கொண்டு வாராதென அறிவுநூல்கள் புகல்கின்றன. அறிவு நூல்களே வேண்டாம். அச்செயலில் நம் மனமே நமக்குச் சான்று பகருமன்றோ! குற்றங் கலவாத தருமகாரியத்தைச் செய்யுங்கால், நம் நெஞ்சம் எத்துணை மகிழ்வை அடைகின்றது! இதுமட்டுமா? நம் ஆயுட் காலத்தில் ஏதோ ஒரு சிறந்த செயலைச் செய்துவிட்டதாக நம் மனம் பேரமைதியை அடைய

வில்லையா! தருமம் சிறந்தது என்பதற்கு இதுவே போதியதன்ரு! தருமத்தின் சிறப்பையும், இது மக்களுக்குக் கடமையாயிருக்கும் தன்மையையும் நாம் குழந்தைகட்கு விளக்கிக் காட்டலாம். பலவகைத் தருமங்களைச் செய்தற்கும் வசதிவாய்ந்த இடம் நிலையமேயாகும். ஆதலின், நிலையத்தில் மாணவிகள் எவ்வெவ்வகையில் தருமம் செய்யலாம் என்பதை நோக்குவோம் :

ஒரு சிறுமி நோயுற்ற காலத்தில், தன் காரியங்களைத் தானே செய்துகொள்ள இயலாதன்ரு! அவ்வமயம் அம்மாணவி தன் பெற்ருேரையும் சுற்றத்தாரையும் நினைந்து வருந்துவாள்! நம்காரியத்தையும்நாமே செய்து கொள்ள இயலவில்லையே எனத் துன்புறுவாள்! அத் துன்பத்திஞல் அவள் பிணியும் மிகுதிப்படக் கூடும்! ஆதலின், அக்காலத்தில்தான் மற்றவர் அவளுக்கு அன்புடன் உதவிசெய்ய வேண்டும். அவ்வுதவி சிறிதாயிருப்பினும், அவ்வமயம் அந்நோயாளிக்கு அது பெரிதாய்த் தோன்றி மிக்க மனநிறைவைத் தரும்.

சிலர், ஏதாவது ஒன்றைப்பற்றி வருந்துங்கால், மற்றவர் தம்மால் இயன்றவரை நல்வார்த்தைகள் இயம்பி, அவரைத் தேற்றுதல் நலம். அதஞல், அவர் கவலை நீங்குகிறதன்ரு! கவலையன்ரு மக்கள் வன்மையை வற்றச் செய்வது!

ஒரு சிறுமி ஒரு பாடத்தின் பொருள் தெரியாமல் துன்புறும்போது, அதைத் தெரிந்தவர் அவளுக்கு விளக்கிவிடுதல் எத்துணைத் தருமம்! அச்செயலால் அவள் மனம் மகிழ்வது மட்டுமேயன்றி, அவள் அறிவும் பெருகுமன்ரு!

சிலர், மறந்தோ கவனக்குறைவாலோ ஒரு பொருளை வெளியிடங்களில் வைத்துவிடில், அதைப் பார்ப்பவர், "அதைப்பற்றி நமக்கென்ன! வைத்தவரே வந்தெடுத்துக் கொள்ளட்டும்!" என்றிராமல், அதை எடுத்து உரியவரிடம் தருதலும் ஒருவிதத் தருமச் செயலேயாகும். இன்றேல், அப்பொருள் தொலைந்து உரியவர் துன்பம் அடைவர். இதுவும் பிறருக்கு நலமளிப்பதே!

கூடியமட்டும் ஒருவருக்கொருவர் இனிமையாகவே பேசிக்கொள்ளப் பழகுதல் நல்லது. பிறர் மனத்தைத் துன்புறுத்துவதும், பகையை விளைவிப்பதுமான கடுஞ் சொற்கள் எங்கும், என்றும் நலமுடையன அல்ல. இனிய சொற்கள் பலரை நட்புப்படுத்தி நன்மை அளிப்பதாகும்.

வேலைக்காரரை அன்புடன் நடத்துதலும் தருமச் செய்கையே. அவர்களை மிகத் தாழ்வாகவும், கொடுமையாகவும் நடத்தல் ஒருகாலும் தகுதியுடையதன்று. அவரும் நம்மைப்போன்று மனிதர்தாமே! நல்லன்புடன் நடத்தப்படும் வேலைக்காரன், தலைவரிடம் உண்மையும் பணிவும் உடையவனாய் இருப்பான் என்பது திண்ணம். அன்பைக் கொடுத்தே அன்பைப் பெற வேண்டும்! இஃது இரு பகுதியினருக்கும் இன்பமளிப்பதாகும்.

சிறுமியர் எத்தனையோ புத்தகங்களையும், தாள்களையும், துணிகளையும், விளையாட்டுப் பொருள்களையும் வீணே எறிந்துவிடுகின்றனர். அவற்றை ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுக்குங்கால் அவர்கள் பொன்னே போலப் போற்றுவர்களல்லரோ! அவற்றை ஏழைகளுக்குக் கொடுக்குமாறு குழந்தைகளைப் பழக்கினால் அப்

பழக்கம், அவர்களுக்கு ஒரு சிறு பொருளையும் நல்வழியில் பயன்படுத்தவேண்டுமென்னும் சீர்மையை உண்டாக்கும். பெறுபவர்க்கும் மிக்க பயனைத் தரும்.

மாணவிகள் வதியும் இடம் பெரிதாயும், பலபேர் நிறைந்துள்ளதாயும் இருக்கும். ஆதலின், சிலபோது ஒருவர் வைத்த பொருளோ, அன்றிப் புத்தகமோ அவர் சென்று எடுக்குமட்டும் அந்த இடத்திலேயே இருக்கும் எனக் கூறுதற்கில்லை. இதை இன்னொருவர் எடுத்துப் பயன்படுத்திக்கொண்டு வேறொரு இடத்தில் வைக்கவும் கூடும்! அன்றி, அப்பொருளுக்கு உரியவளே ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தான் வைக்காத இடங்களில் தேடிக் காணவில்லையெனக் கருதவுங் கூடும். அப்புத்தகத்திலுள்ள பாடத்தையோ, அன்று அவள் கட்டாயமாகப் படிக்கவேண்டும்! புத்தகமோ, அகப்படவில்லை. பாடசாலைக்குப் போக நேரமோ, ஆகிவிட்டது! இம்முறையில், அம்மாணவி இங்கும் அங்கும் ஓடித்திரிந்து மிக வருந்துவாள். அவ்வமயம் அவளுக்கு மற்றொரு சிறுமி தன் புத்தகத்தை உதவிப் படிக்குமாறு கூறின், அஃது அவளைப் பெருமகிழ்விலாழ்த்தும். இக்காரியம் அருளிரக்கம் பூண்ட நெஞ்சம் உடையவர்க்கே முடியும்! இஃதொரு சிறந்த தருமமன்றோ!

சிலபோது நிலைய வேலையாட்கள் நோயுற்று வேலை செய்ய இயலாத நிலையில் இருப்பார்கள். அதைக் கண்ட குழந்தைகள் சிறிது இரக்கம் பாராட்ட வேண்டும். உடல்நிலை யாவருக்கும் ஒரு தன்மைத்தே. ஆதலின், அவர்களை இரண்டொரு நாட்கள் இளைப்பாற விட்டு, அவ்வேலைகளைக் குழந்தைகள் செய்ய முயலல் சிறந்த அறமாகும். இதனால், அவ்வேலையாட்களுக்கு

மகிழ்வுண்டாகி, அவர்கள் நம்மிடம் அன்புடையவர்களாக இருப்பர்.

சிலர், பிணிக்கோ வன்மைக் குறைவிற்கோ மருந்துண்ண நேரிடும். அம்மருந்து பெற்றோரால் வாங்கித் தரப்படும். ஆனால், சிறுமியர் சோம்பலினாலோ, விருப்பமின்மையினாலோ, மறதியினாலோ அதை உண்ணாது கைவிடுவர். அதனால், பொருட்செலவும், உடல் நலக் குறைவும் ஏற்படுகின்றன. சுறுசுறுப்புள்ள சில பிள்ளைகள், இதற்கு முன்னின்று உதவி புரியின் சிறப்புடையதாகும்

மிக்க அறிவுடையோராயும் கோட்பாட்டின்படி ஒழுகுபவராயும் உள்ள சில பெரிய பிள்ளைகள், மற்றோருக்கு அறிவு புகட்டி அவரையும் நல்வழிப்படுத்தல் நலம். மற்றோரைத் திருத்தச் செல்பவருக்கு, இகழ்ச்சி பழிப்பு முதலிய சில துன்பங்களும் ஏற்படலாம். ஆயினும், அவற்றிற்குத் தளராது காரியஞ் செய்தலே அறிவுடைமை. நன்மைக்குப் பல தடைகள் விளைதல் இயல்புதானே! ஆதலின், இதை அறச்செயல் எனக் கருதியே செய்தல் வேண்டும்.

இவைகள் மட்டுமேயல்லாமல், பொருளாலும் பிறருக்கு உதவி செய்தற்குக் குழந்தைகளைப் பழக்க வேண்டும். சிறுமியர், ஒரு திங்களில் இரண்டணாவேனும் ஏழைகளுக்குக் கொடுத்தல் நலம். கோவிலுக்குச் செல்லுங்கால், எத்தனையோ நோயாளிகளையும், அகவை முதிர்ந்தவர்களையும், உறுப்புக் குறைந்தவர்களையும் நாம் காணுகின்றோம். அவர்கள் வயிற்றிற்கும் உணவின்றி வருந்துகின்றார்கள். நம்மைப் போன்றார் கொடுத்தாலன்றி, அவர்கள் பிழைத்தல் யாங்ஙனம்? இதை ஒவ்வொருவ

ரும் தம் கடமையாகவே கருதிச் செய்யவேண்டும். நம் நாட்டிலோ, சில நாகரிக நாட்டில் இருத்தல் போன்று, எளியவர் துன்பமின்றிக் காலங் கழித்தற்கு ஏற்ற இடமில்லை. இப்போதுதான் இதற்கு ஓரிடம் அமைக்கப்போவதாகக் கேள்வியுறுகின்றேன். இது மிக்க மகிழ்வைத் தரக்கூடியதே!

இங்ஙனம் நிலைய மாணவிகள் இயற்றவேண்டிய அறங்கள் பல உண்டு. அவற்றுள் அவர்களை ஊக்கி அவர்கள் வாழ்க்கையைப் பண்படுத்த இந்து நிலையம் பெரிதும் முயன்றது.

நிலையம் ஒரு சிறு உலகமன்றோ? அதில் இருப்பவர் ஒருவருக்கொருவர் உறவினரல்லரே! ஊர், குலம், மொழி, பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் வேறுபட்டவர்தாமே! இம்முறையில் ஒருவருக்கு மற்றொருவர் மேல் அன்பும் இரக்கமும் உண்டாதலும், உதவி செய்தலும் உயர்ந்த குணங்களல்லவா? இதையே சில மக்களின் தொண்டு எனக் கூறலாம்.

இப்பழக்கம் நிலையத்தோடு நின்றுவிடுதல் இல்லை. அவண் செய்யும் இச்செயல்கள் அவர்கள் மனத்தில் நன்றாக ஊன்றி அவர்களை அறச் சிந்தையுடையராகவும், இரக்க குணமுடையவராகவும் செய்துவிடுகின்றன. இவை அவர்கள் பெரியவராகி வாழ்க்கையை நடத்துங் கால், தங்கள் குடும்பத்தினருக்கு நலமளிப்பது மட்டுமேயல்லாமல், அவர்கள் வாழும் நாடு நகரம் மக்கள் வரையும் சென்று பல பயன்களையும் தாரா நிற்கும். இதைத்தான் மக்களுக்குப் புரியும் தொண்டு எனக் கூறுகின்றோம்.

12. உணவு

மக்களுடைய உடலும் அறிவும் வளர்தற்குத் தக்க பருவம் இளமையே. அக்காலத்தில் அவர்களுக்கு ஊக்கத்தையும் இன்பத்தையும் உண்டாக்குவன சில உண்டு. இயன்றமட்டும் அவற்றிற்கேற்ற வழிகளைக் கோலுதலே பெரியவர் கடமை. அவையே சிறுவருக்குப் பெருநிதியெனத் திகழ்வன. நிற்க. ஒரு நாளில் முக்கால் பங்கு பாடப்புத்தகத்திலேயே பொதிந்து களைப்படைந்திருக்கும் அவர்களுடைய மனத்திற்கு, வேடிக்கை விளையாட்டுகள் நேரிய கிளர்ச்சியையும், புதிய ஊக்கத்தையும் தருதற்குத் திண்ணிய திறவுகோல்கள் எனல் மிகையாகாது. ஆயினும், இச்செல்வம் குழந்தைகட்கு ஒரோ ஒருகால்தான் வாய்க்கும்.

இளைஞருக்கும், இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதாயிருப்பினும், இச்சிறுவர் பெரியவரைப் போன்று துன்பத்தை மனத்தில் ஊன்றி வைத்தல் இல்லை. அப்போதைக்கப்போது மறந்துவிடுவர். ஆனால், சிறு இன்பத்தையும் பெரிதாகக் கருதுவது மட்டுமேயல்லாமல், அடிக்கடி அதை நினைத்து நினைத்துக் களிப்பர். அவ்வமயங்களில் அவர்கள் நெஞ்சம் மகிழ்வினால் மலரும். அம்மலர்ச்சி அவர்கள் முகத்தில் பொங்கித் ததும்பும். அவையே அவர்கள் உடல் வளர்ச்சிக்கும் உயரிய நிலைக்கும் காரணமாகும். மேற்குறிப்பித்த இன்பத்திற்குக் காரணங்கள் பல இருப்பினும், அவற்றுள் சிறந்ததும், முதன்மையுற்றதும் உணவெனக் கொள்க. இளைஞர் எல்லா உணவிலும் விருப்பங் கொள்ளலே இயல்பு. ஐந்தாறு வகைக் காய்கறிகளோடு கூடிய உணவும் அவருக்கு மகிழ்வையூட்டும்; இன்னும்

சிற்றுண்டிகள் சேர்ந்த உணவைப்பற்றிக் கூறவே வேண்டாம். இங்ஙனம் உணவு அவர்களுக்கு இன்பந் தருவதாயிருப்பினும், ஒன்றையே திருப்பித் திருப்பிச் செய்யுங்கால், அவர்களுக்கு வெறுப்பைத் தரும். விருப்புடன் உண்ணுத பண்டங்கள் உடலுக்கு வன்மையைத் தாராதல்லவா? ஆதலின், சிறுவர் உறையும் நிலையங்களில் உணவைப்பற்றிச் சிறிது கவலை எடுத்துக் கொள்ளல், தலைவியாருக்கு இன்றியமையாத தாகும். இளமையில் நல்ல உணவு கொடுக்கப்படா விடின், உடல் உரம் குன்றும் என்பதையும், அஃது அவர் பிற்கால முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யாகும் என்பதையும் அறியாதார் யார்?

சில குழந்தைகள், சிற்றுண்டிகள் தவிர சோற்றை உண்ண விரும்புவதில்லை. சிலருக்கு, இரண்டொரு காய்கறிகளே பிடிக்கும். சிலர், சிறிதளவு சோறும் மிகுந்த காய்கறிகளும் உண்பர். சிலருக்கு, தயிர், பால், நெய் பிடியாது. ஒவ்வொருவருக்கும் சுவைகளிலும், சமைக்கும் முறைகளிலும் தனித்தனி பக்குவங்கள் இருக்கும். ஆயினும், வீட்டைப்போன்று, ஒவ்வொரு குழந்தையின் விருப்பத்தையும் மேற்கொள்ளல் பலர் உள்ள நிலையங்களில் முடியக்கூடியன அல்ல என்பது யாவரும் அறிந்தனவே. ஆனல், தலைவியார் மேற் கொள்ளும் சிற்சில முறைகளினுல் அக்குறையைச் சிறிது நீக்கலாம்.

அப்போதைக்கப்போது காய்கறிகளை வெவ்வேறு வகையில் பக்குவப்படுத்தல், அந்தந்தக் காலங்களில் கிடைப்பவைகளைப் பயன்படுத்தல், சமையற்காரர் அவற்றின் சுவையையும் சத்தையும் கெடுக்காதவாறு

நோக்கிக்கொள்ளுதல், அப்போதைக்கப்போது அந்தந் தத் தேசத்தினர் விரும்பும் பாகங்களையும் கைக்கொள்ளு தல் முதலியவற்றைச் செய்யலாம்.

குறைந்தது மூன்று மாதங்கட்கு ஒருமுறையேனும் சிறுமிகளை ஒருங்கே கூட்டி அப்போது நடைபெறும் உணவில் அவரவர்க்குள்ள கருத்துகளையும், மாற்ற வேண்டிய பகுதிகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ளல் நலம். அங்ஙனம் கேட்கும் போதுதான், சிறுமிகளுக்கு உணவினிடத்தில் உள்ள வேறுபட்ட சுவை உணர்ச்சி யும், வேட்கையும், அதனிடத்தில் அவர்கள் கொள்ளும் களிப்பும் தலைவியாருக்கு நன்கு புலனுகும். அங்ஙனம் வினவுதலும், அதற்கேற்ப உணவுகளை மாற்றுதலும் செய்யுங்கால், ஒருபோது சிலரும், மற்ருெருபோது சிலரு மாக மன அமைதி அடைய நேரிடும். இம்முறையி ஞல் கூடியமட்டும் யாவரும் இன்பந் துய்ப்பர். இது தலைவியாருக்குச் சிறிது தொல்லையைத் தரினும், குழந் தைகளின் நலத்தையே நோக்கிநிற்கும் தலைவியார் இதைத் துன்பமெனக் கொள்ளார். ஆனல், கல்வி கற் கும் பிள்ளைகள் உணவினிடம் மிக்க விருப்பம் செலுத் தல் தகுதியுடையதன்றென்றும், அங்ஙனமாயின் அவர் கட்குக் கல்வி கற்பதில் ஊக்கம் செல்லாதென்றும் பெரி யவர் சொல்வர். அதில் சிறிது உண்மை இருப்பினும், அந்நெறியிலேயே அவர்களை நிறுத்த முயலல் கூடாத தாகும்.

இவ்வுணவுநிலையில் தலைவியாருக்கு இன்னும், சில பொறுப்புகளும் உண்டு. வெப்ப தட்ப நிலைகளுக் கேற்ப உணவுப் பொருள்களும் மாற்றம் அடைதலே தகுதி. இன்றேல், குழந்தைகளின் உடல்நலத்திற்குக்

குறைவு உண்டாகும். இன்னும், குழந்தைகளுக்கு உடல் வன்மை அளிக்கக்கூடிய காய்கறிகளை அவற்றின் சத்து நீங்காத வகையில் பாகப்படுத்த ஏற்பாடு செய்தல் இன்றியமையாதது. பெருஞ்சமையல் நடைபெறும் பல இடங்களில் உணவுப் பொருள்களின் சத்தும் சுவையும் குறைந்திருப்பதைக் காண்கின்றோம். பழங்களையும், வன்மை தரும் சிற்றுண்டிகளையும் பெற்றோர் வாயிலாகப் பெற்று உண்ணும் செல்வமக்கள் வதியும் பொதுநிலையங்களில், சுவையும் வன்மையும் அற்ற உணவும் அவர்கட்கு அத்துணைத் தீமையைத் தருதல் இல்லை. நிலையஉணவையே எதிர்நோக்கி நிற்கும் ஏழைமக்களுக்கு இக்கவனிப்பு அவசியமாகும். இன்றேல், அவர்களுக்குச் சில கொடிய நோய்களும் ஏற்படலாம். அவை அவர்கள் கல்வியையும் கெடுத்து, வாழ்க்கையையும் பயனற்றதாகச் செய்து விடுமல்லவா? ஒரோவொருகால், ஆயுளையும் குலைத்துவிடக் கூடும். இம்முறையில் குழந்தைகளின் உணவு நிலையில் தாம் எத்துணைக் கவனம் செலுத்த வேண்டுமென்பது சொல்லுதலும் வேண்டுமோ?

நிலையங்களில் பெரும்பான்மையும் காய்கறி உணவு தான் கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால், அங்குப் புலால் உணவை உண்ணும் சிறுவரும் பலர் இருக்கலாம். அவர்களுக்கு அதைத் தனியாகச் செய்து கொடுத்தல் கூடாததாகும். நலன் தருவன எவை என்பதைப் பற்றி யான் இங்குக் கூற முன்வரவில்லை. பருப்பு, தயிர், பால், நெய், கோதுமை முதலியவற்றிலும் மிக்க வன்மைதரும் குணமுண்டு. ஆதலின், இவற்றை அதிகமாகப் பயன்படுத்துவதேயன்றி, விடுமுறை நாட்களில் வன்மை தரும் பண்டங்களை மிகுதியா

கவும், அரிசி உணவைக் குறைவாகவும் தரின், அவர் கட்கு உடல்வன்மையை உண்டாக்குவதோடல்லாமல், இன்பத்தையும் அளிக்கும்.

உடல்நலத்தைக் கெடுப்பதும், சிற்றுண்டிகள் பழகின் அஃதில்லாமல் ஒரு போதுகூட இருக்க இயலாதென்னும் நிலையைப் பிறப்பிக்கக் கூடியதுமான காப்பி, தேநீர் முதலிய பொருள்களைச் சிறிது சிறிதாகக் குறைக்கலாம். வன்மைதரும் காய்கறிகளையே மிகுதியும் பயன்படுத்த வேண்டும். சில குழந்தைகள் சில காய்கறிகளை உண்ண மறுப்பர். காய்கறிகள் பலவற்றையும் கலந்துண்பதே சிறுவர் உடலுக்கு நன்மையாதலால், அவர்களை ஊக்கப்படுத்தி யாவற்றையும் உண்ணுமாறு செய்தல் நல்லது. சிற்றுண்டிகள் பழகிவிடின் யாவும் ஒழுங்குபட்டுவிடும். சிலர் மோரும் பாலும் உண்பதே இல்லை. அவர்களுக்கு நெய் சிறிது அதிகம் விடலாம்.

சிறிது பருமனுக் உள்ள குழந்தைகளுள் சிலர், உணவைக் குறைத்துக் கொண்டால், உடல் மெலிந்து விடுமென்றும், சிலர், "மற்றவர் சிறு அளவில் உண்ணும் போது நாம் மட்டும் பெரு அளவில் உண்ணின், 'இவள் நாட்டுப்புறத்தாள்,' என மற்றவர் ஏளனஞ் செய்வர்" என்றும், சிலர், "கொஞ்சமாக உண்பதுதான் நாகரிகம் என்றும்." சிலர், "சிறிது உணவானால் விரைவாக உண்டுவிட்டு அந்த நேரத்தைப் படிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்," என்றும் தம் உணவைக் குறைத்துக்கொள்வர். நிலையத்திற்கு வந்தவுடனும், கீழ்வகுப்புகளில் உள்ள போதும் நன்றாய்ச் சாப்பிட்ட சிலர், சிற்றுண்டிகள் கழிந்த பின்னும், மேல்வகுப்புகளுக்குச் சென்றபோதும், தம்

உணவைக் குறைப்பதுண்டு. இவை புதிய நாகரிக முறை. இவற்ருல் உண்டாகும் தீமைகள் இளைஞரா கிய அவர்களுக்கு யாங்ஙனம் புலனுகும்? இதனுல், வன்மை குறைந்து பல நோய்களுக்கும் ஆட்படுதல் உண்டு. இந்தக் கெட்ட வழக்கத்தை ஒழிக்கத் தலைவி யார், அவர்கள் உணவில் கண்ணும் கருத்துமாயிருக்க நேரிடும். நாடோறும் அவர்கள் உணவு உண்ணுங்கால் தலைவியார் அவண் இருந்தாலொழிய அக்குழந்தைகள் நேர்மையாக உண்ணுதல் கடினம். அப்போதைக்கப் போது அவர்கள் விரும்பும் சிற்றுண்டிகளையும் செய்து தரல் சிறந்தது. ஆனுல், சிற்றுண்டிச் சாலையில் வாங்கி யுண்ண அவர்களுக்கு இடந்தருதல் கூடாது. அது பல நோய்களையும் உண்டாக்கும். எந்தக் காரணத்தினுலும் உணவு நிலைமையில் மட்டும் அவர்கட்குக் குறைவு ஏற் படுதல் நலமன்று.

சிக்கனத்தைக் கையாள வேண்டிய இடங்கள் பல உண்டு. அவற்றுள் உணவும் ஒன்ருகும். அறிவுடை யவர் உணவுநிலைமையிலும் செட்டாகவே இருப்பர். அதற்கு உணவைக் குறைத்துக்கொண்டு, உடல்வன்மை யைப் போக்கிக்கொள்ளுதல் எனப் பொருள்படுத்தல் கூடாது. பல இடங்களிலும் விலையைத் தீர விசாரித் துப் பண்டங்களை வாங்கலும், அவைகள் எலி முதலியவற் றிற்கு இரையாகாவண்ணம் காத்தலும், சமையற்கார ரிடம் அளவோடு கொடுத்தலும், அவர்களும் குழந்தை களும் பண்டங்களைத் தெருவில் வீணே எறியாதவாறு பார்த்துக்கொள்ளலும் இன்றியமையாதன. இவையே செட்டாகும். தலைவியார் எவ்வளவுக்கெவ்வளவு கண் ணுங் கருத்துமாக இருக்கின்றனரோ, அவ்வளவுக்கவ்வ ளவு பணமிகுதியும் நல்லுணவும் கிடைக்கும்.

கொண்டாட்டநாளிலும், விரத நாளிலும் அவை யவைகட்கு ஏற்ற சிற்றுண்டிகளையும் பழங்களையும் நிரம்பத் தந்து அவர்களை மகிழ்வித்தல் முதன்மையா கும். சிற்சிலபோது அவர்கட்கு விருப்பமான பண் டங்களை அவர்களையே செய்து உண்ணுமாறும் விட லாம்.

எங்ஙனம் செய்யினும், நிலையத்திற்குப் புதிதாக வரும் குழந்தைகளுக்கு முதலில் உணவுநிலை சிறிது துன்பமாகத்தானிருக்கும். அவர்களைச் சின்னாட்கள் தன்விருப்பாய் விட்டு விடுதல்தான் நலம். பின்பு சிறிது சிறிதாக அவர்களை நிலைய உணவிற்குக் கொணர வேண் டும். அவ்வமயம் சிலபோது இனிமையையும், சில போது கடுமையையும் கையாளல் சிறந்தது. புதிய பிள்ளைகள் வந்து சேர்ந்த ஒன்றிரண்டு மாதங்கள் வரை யும் தலைவியாருக்கு மிக்க துன்பந்தான். அதன் பொருட்டுத் தலைவியார் சலிப்படைந்து அவர்கள் உணவுநிலையைக் கண்காணியாது விட்டுவிடவும் முடி யாது. ஏழை பணக்காரர் ஆகிய இரு திறத்தினருக்கும் ஒரே தன்மையான உணவே கொடுக்கப்படும்.

13. உணவு முறைகள்

காலை—	6-30	மணிக்கு—	காபி
,,	8-30	,,	இரண்டு காய்கறிகள், சாம்பார், மோர், நெய்
நடுப்பகல்	1	மணிக்கு—	பலவகையான சோறு, துவையல்
மாலை—	5	மணிக்கு	ஏதாதாவதொரு சிற்றுண்டி,
இரவு—	7	,,	ஒரு காய், வற்றல்குழம்பு, அப்பளம், மோர், நெய்

சனி ஞாயிறுகளில் சிறிது உயர்ந்த சிற்றுண்டியும், காய் கறிகளும் இருக்கும். கொண்டாட்ட நாட்களில் வீடுகளைப்போன்றே யாவும் சிறப்புடையதாய் இருக்கும். ஒவ்வொரு குழந்தைக்கும் உணவுக் கட்டணம் ஆறு ரூபாயிலிருந்து ஏழு ரூபாய் வரையும் ஆகும். வீட்டு வாடகைக்கு மட்டும் அரசாங்கத்தார் தருவர், வேலைக்காரர் விளக்கு முதலிய மற்றச் செலவுகள் யாவும் குழந்தைகளைச் சார்ந்தனவே.

14. நாகரிகம்

ஆடை அணிகளால் தம்மைத் தற்கால முறையின் படி அணிசெய்து கொள்வதுதான் நாகரிகம் என்பது பலர் கருத்து. இது வெறும் மயக்கே. தூய உடை உடுத்து, தாமிருக்கும் இடங்களையும் தூயதாக வைத் திருத்தல் ஒருவகை நாகரிகமே. ஆயினும், சான்றோ ரும் நூல்களும் கூறும் நாகரிகத்தின் கருத்து, இச்சிறு பகுதியுடன் நின்றுவிடவில்லை. எண்ணம், சொல், செயல் முதலிய ஒவ்வொன்றிலும் நாகரிகம் அமைந்திருக்க வேண்டும். இதுவே சான்றோரின் எண்ணமும் நூல்களின் கருத்தும் ஆகும். ஒருவரை உயர் பதவியிலிருத்துதற் கும் சான்றோராக்குதற்கும் இதுவே கருவி. நாகரிகம் என்பது தனிச்செயலைப் பற்றிய தன்று. பொய், களவு பொறாமை, கடுஞ்சொற்கள், வெகுளி முதலியவற்றை ஒழித்தல், கடமையை ஒழுங்குபடச் செய்தல், நயம்படப் பேசுதல் முதலிய பல நற்குணங்களை மேற் கொள்ளுதலே நாகரிகம் எனப்படும். இதையே அறிஞர் விரும்புவர்.

இத்தகைய நாகரிகம் சிறுமிகளுக்கு இளமையி லேயே அமையும்படி செய்வது சிறப்புடைமையாகும். ஆனால், மக்களுக்கு இது நடைமுறையில் அமைவது மிக்க அருமை. அதினும், பலவகையிலும் மாறுபட்ட இயல்புகள் வாய்ந்த நிலையக் குழந்தைகளிடம் இந்நாக ரிகத் தன்மையை நுழைத்தல் பெரிதும் துன்பமே. ஒருவர் ஒன்று சொல்லி முடிப்பதற்கு முன்பே மற்றொரு வருக்குச் சினம் மூளும். அச்சினத்தினால் பல வார்த்தை களை வெளியிடுவர். பயனற்றவைகளுக்கும் பல வழக் காடல்கள் நிகழும். தமக்குத் தொடர்பற்ற காரியங்க

ளில், வேண்டுமென்றே சிலரும், தெரியாமையினுற் சிலரும் நுழைவர். ஒருவர் வார்த்தையை மற்ருெருவரிடம் சொல்லுதலும், காணுதவற்றைக் கட்டியுரைத்தலும், கோள் கூறுதலும் சிலர் இயல்பாகும். சிலரிடம் எதற்கும் கடுஞ்சொற்களல்லாமல், இன்சொற்கள் வெளிப்படுதலே இல்லை. இவற்ருல் அவர்களுக்குப் பலரிடம் பகை ஏற்படும். தம் கடமைகளைச் சரிவரச் செய்யாமையினுல் உண்டாகும் துன்பங்கள் பற்பல என்பது சிலருக்குத் தெரிவதில்லை. சிலர் பிறர்பொருளை அவரைக் கேளாமலே எடுத்துப் பயன்படுத்திக்கொள்வது மட்டுமேயன்றி, அதை முன்னிருந்த இடத்திலும் வைத்தலில்லை. அதனுல், அப்பொருளுக்குரியார் மிக வருந்த நேரிடும். சிலர், குறித்த காலங்களில் காரியஞ் செய்தலில்லை. அதனுல், உண்டாகும் துன்பங்கள் பல என்பதை அவர் அறியார். சிலர், தம்மிலும் மூத்தவரிடமும், சிறியவரிடமும், தம்மொத்தவரிடமும், மற்றையோரிடமும் எங்ஙெந்த முறையில் நடந்துகொள்வது எனத் தெரியாமையின் பல இன்னல்களுக்கு இலக்காவர். சிலர், தாமே பிறருக்குத் துன்பமிழைக்காவிடினும், தமக்குத் தீங்கிழைத்தவருக்குத் தாம் தீங்கிழைத்தே ஆகவேண்டுமெனக் கருதுவர். சிலர், "நாம் யாவரிடமும் கீழ்ப்படிதலுடன் நடந்துகொள்ளின் நம்மைத் தாழ்மையாக நினைப்பர். ஆதலின், சிலரிடம் பெருமிதமாகவே நடந்துகொள்ளல் நலம்," என எண்ணுவர். இஃது உலகநடைக்குச் சிறிது ஏற்றதாக இருப்பினும், அதையும் நற்குணம் கெடாத முறையில் மேற்கொள்ள வேண்டுமேயன்றி, அதனுல், நம் சால்பைக் கெடுத்துக்கொள்ளுதல் கூடாது என்பதை அறியார். இங்ஙனம் நிலையங்களில் நிகழும் நாகரிகக்

குறைவான செயல்கள் பல உண்டு. இயல்பில் பல திறப்பட்டவர் வதியும் நிலையங்களில் இவையும் பலவாக இருத்தல் வியப்பன்றே.

மேற்குறிப்பித்த செயல்களைத் திருத்தும் முறையில் அவர்கட்கு நாகரிக நிலை ஏற்படும். நாகரிகத்திற்கும், செல்வம் கல்விகளுக்கும் தொடர்பில்லை என்றே கூறி விடலாம். கல்விச் செல்வம் பொருட் செல்வம் வாய்ந்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளுள் சிலர், பிறர் இகழத்தக்க பயனற்ற வார்த்தைகளையும், பிறர்பொருளைக் களவாடல் முதலிய பயனற்ற செயல்களையும் கையாளக் காணலாம். இவற்றிற்கு அவரவர் இயல்பையும் பழக்கத்தையுமல்லாமல் வேறெதனைக் காரணமாகக் கூறக் கூடும்? இக்கொடிய பழக்கம் எத்துணைப் பெரிய நிலைக்குச் சென்றபோதும் அவரை விட்டு நீங்குவதே இல்லை. இதனால், மதிப்பிழப்பவர் பலர். ஆதலின், நிலையத்திலுள்ள சிறுமிகளை நாகரிகமாக வளர்த்தல் தலைவியார் கடமை. கல்வியைக்காட்டிலும் இது சிறந்தது. தலைவியார் குழந்தைகளுக்குச் செய்யும் உதவிகள் பலவற்றுள் இது தலைசிறந்ததாகும்.

15. உடற் பிணிகள்

உலகில் ஓரறிவு முதல் ஐயறிவீருக உள்ள உயிர்கள் ஒவ்வொன்றிற்கும், நலம் நலமின்மை என இரண்டு நிலைகள் உண்டு. முந்தியதை நலம் என்றும், பிந்தியதைப் பிணி என்றும் கூறுகின்ருேம். ஆயினும், இயற்கைப் பொருள்களை உண்டு இயற்கையிலேயே இயங்கி வாழும் அஃறிணைப் பொருள்களை, பிணி பெரிதும் வருத்துதலில்லை. அவைகட்கு ஒரோவொருகால் நோயுண்டாயினும், அவைகள் செயற்கைச் சிகிச்சையில் நுழைய இடமுமில்லை. இயற்கையே அவைகளுக்கு இந்நலத்தை உண்டாக்குகின்றது. செயற்கை உணவை உண்டு செயற்கையிலேயே உழலும் மக்களிடையேதான் நோய்கள் பெரிதும் உறவுகொண்டாடுகின்றன.

ஆனல், மக்களுக்குப் பழவினையினுலும், காரணத்தினுலும் நோய் உண்டாகுமென்றும், காரணத்தினுல் வருவதை மருந்தினுல் போக்கிக்கொள்ளலாமென்றும், பிணிக்கு முதன்மையான காரணம் உணவே என்றும் அறிஞர் கூறுவர். உண்ணும் உணவு என்றும் ஒரே தன்மையுடையதாகவிருப்பினும், மக்களின் உடல் நிலை, தொழில், வெப்ப தட்பங்கள் முதலியன மாறுபடும் இயல்புடையனவாயிருத்தலின், வழக்கமாக உண்ணும் உணவும் சிலபோது மக்களுக்கு நோயுண்டாக்குதல் உண்டு. ஆதலின், அவரவர்கள் உடல்நிலையை அவரவர்களே நோக்கிக்கொள்வது மட்டுமேயன்றி, அதற்கேற்ப, உணவு செயல் முதலியவற்றையும் மாற்றிக்கொள்ளல் வேண்டும். நன்ருகப் பசித்தபின் உண்ணலும், தத்தமக்கேற்ற உடல் உழைப்பை மேற்கொள்ளலும், தூய காற்றை உட்கொள்ளலும், தூய

நீரைப் பருகலும் பிணியின்றி வாழ்வதற்கு இன்றியமை யாதனவாகும். இம்முறைகளைப் பெரியோரல்லாமல் இளைஞர் பின்பற்றுர். சிறுவர்க்கு இவ்வழியைப் பின் பற்றும் முறையே தெரிதலில்லை. தங்களுக்குப் பசியா விடினும், இனிய பொருள்களைக் காணுங்கால், உண்ணு மலிருக்க அவர்தம் இயல்பு இடந்தாராது. தம்மைச் சார்ந்தோர் எவ்விடத்திற்குச் செல்லுகின்றனரோ, எந் நீரைப் பருகுகின்றனரோ அவையே அவர்களுக்கும் விருப்பமுடையனவாகும். சிலபோது சிறு நோய்கள் இருப்பினும், அவற்றைப் பொருட்படுத்தாது காரியஞ் செய்வர். இவைகள் யாவும் நோய்க்குக் காரணங்களல் லவா? இக்குறிப்புகளினுல், பெரியவரைக் காட்டி லும், சிறியவரே அடிக்கடி நோயினுல் துன்புற நேரிடும் என அறிந்தாம்.

இத்தகைய இளைஞர் வாழும் நிலையத்தை நோக்கு வோம்; நிலையத்தில் வாழும் சிறுமியர் ஒரு குடும்பத்தி னரும், ஒரு நாட்டினரும், ஓரே வித உடலியல்பு வாய்ந்த வரும் அல்லர். அங்கு உண்டி முதலியவற்றைத் தனித் தனியே செய்யவும் இயலாது. ஐந்தாறு குழந்தைகள் வதியும் ஒரு சிறு குடும்பத்திலும் இம்முறையைப் பின் பற்றுதல் கடினமன்றோ? அங்ஙனமாயின், பல பிள்ளை கள் வாழும் நிலையத்தைப்பற்றி என் கூறுவது! ஓரோ வொரு போது இரண்டொருவருக்குத் தலைவலி, வயிற்றுவலி, சிறு காய்ச்சல், நீர்க்கோவை (சலதோஷம்) முதலியன வரத்தான் செய்யும். இந்நோய்கள் பெரும் பான்மையும், மலச்சிக்கலினுலும் செரியாமையினுலும் உண்டாகுவனவே. ஆயினும், தகுந்த சிறு சிறு மருத் துவத்தினுல் இவை இரண்டொரு நாட்களில் குணப்படு மாறு செய்யலாம்.

நிலையம் காற்றோட்டமுள்ள பெரிய இடமாகவும், உணவு உறக்கம் முதலியன காலந் தவறாது நிகழக்கூடிய தாகவும் இருத்தலின், குழந்தைகட்கு அடிக்கடி நோய் வருதலும், வரினும் மிகுந்த துன்பப்படுத்தலும் இல்லை.

நிலையச் சிறுமியர் தங்களுக்கு ஏதேனும் சிறு பிணி வரினும், உடனே தலைவியாரிடம் வந்து கூறுதலும், ஒவ் வொருவரும் இரண்டுதிங்களுக் கொருமுறையேனும் மலக்கழிவு மருந்து உண்ணுதலும் செய்வர். அவர்கள் மழையில் நனையாமலும், சிறிது உடல்வன்மை குறைந் திருக்குங்கால், அடிக்கடி மேல்மாடிக்குச் செல்லாமலும் பார்த்துக்கொள்ளல் நலம். நீர்க்கோவை உள்ளவர் குளிர்ந்த நீரில் குளிப்பதையும், குளிர்ச்சிப் பண்டங்களை உண்பதையும் தடுத்தல் வேண்டும். நனைந்தனவும் அழுக் கானவையுமான உடைகளை உடுத்தல் கூடாது. அழுக்குத் துணிகளை ஒவ்வொருவரும் தனித்தனிப் பையிலிட்டு வைத்தலும், துவைக்கும் துணிகளையும் ஒன்றோ டொன்று கலவாமல் இருக்குமாறு செய்தலும் நல்லது. நாடோறும் குளித்துத் தூய ஆடைகளையே உடுத்த லும், உறங்கும்போதும் ஒருவருக்கொருவர் குறைந்தது ஓரடியேனும் இடை வெளிவிட்டுப் படுத்தலும் சிறந் தது. மழைக்காலத்தில் குழந்தைகள் சிறிது நனையி னும், சாம்பிராணிப் புகையிட்டு அவர்கட்கு நீர்ப் புணர்ப்பு உண்டாகாமல் பார்த்துக் கொள்ளலும், வெப்ப தட்பங்களுக்கேற்ற உணவுப் பொருள்களை மாற் றலும் இன்றியமையாதன. மழைகாலத்தில்தான் சிறு மிகளை நோயணுகாமல் பார்த்துக்கொள்ளல் முதன்மை யாகும்.

எத்துணைக் கவலையுடன் நோக்கினும், சிலபோது சிறுமியருக்குத் திடீரெனச் சில நோய்கள் உண்டாகக்

கூடும். இரவு ஏழுமணி வரையும், நூறு டிகிரியில் இருந்த காய்ச்சல், பத்துமணிக்கு நூற்றைந்து டிகிரி ஆய்விடினும் ஆகலாம். இரவு பன்னிரண்டுமணிக்கு மேல், ஒரு சிறுமிக்குப் பலமுறை வயிற்ருல் போதலும் வாயாலெடுத்தலும் ஏற்படலாம். சிலருக்கு நடு இரவில் மூர்ச்சை தேள்கொட்டுதல் முதலியன உண்டாகலாம். அந்த இரவில் மருத்துவரை அழைக்கவும் முடியாது. அவற்றிற்குத் தக்க நலமுறை செய்வதும் கடினம். அவ்வமயம் தலைவியார் செய்வதின்னதெனத் தெரியாது தியங்க நேரிடும். அவ்விரவு முழுதும் அவருக்கு ஏகாதசி அல்லது சிவராத்திரியாய் இருத்தல் மட்டுமேயன்றி, அவர் மனத்திலிருக்கும் கவலையை அளந்து கூற ஒருவராலும் இயலாது. அதினும், இளநெஞ்சுடைய தலைவியாரைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அச்சிறு இரவு அவருக்கு ஒரு ஊழியாய்த் தோன்றும். "இச்சிறுமியின் பிணிநீக்கத்திற்கு என் செயலாம்! யாரைக் கேட்கலாம்! நாமே சென்று மருத்துவரை அழைத்து வரலாமா! நாம் அங்குச் செல்வதற்குள் இப்பெண்ணின் நிலை என்னுகுமோ! நாம் கண் காணிக்கவில்லை எனப் பெற்ருேர் கூறுவரோ! ஏன் மருத்துவச்சாலைக்கு அனுப்பவில்லையென மேல் அலுவலாளர் சினங்கொள்வார்களோ? இவ்விரவில் மருத்துவச்சாலையிலும் எடுத்துக்கொள்ளாரே! அவர்களிடம் சென்று வசைகேட்பது யாங்ஙனம்! விடியுமட்டும் இக்குழந்தைக்கு யாதொரு தீங்கும் இல்லாதிருத்தல் வேண்டுமே! எப்போது விடியுமோ தெரியவில்லையே! கடவுள்தான் காக்க வேண்டும்! அம்ம அம்ம! இவ்வேலையிலிருந்து இத்துன்பங்களைத் தாங்க நம்மால் இயலாது! இதை விட்டுவிடலே நலம்!" என்னும் பல

எண்ணங்கள் அவர் மனத்தில் மாறி மாறித் தோன்றிக் கொண்டே இருக்கும். இக்கவலையினால் அவர் உடல் நிலை கெடும்! மறுநாள் அவருக்கு ஒரு தொழில் செய்வதற்கும் வன்மை இராது. பழைய வன்மை அவருக்குண்டாகச் சில நாட்கள் செல்லும். இங்ஙனம் ஏற்படுங் காலங்களிலெல்லாம் அவருக்குண்டாகும் கவலையினால், அவர் உடல்வன்மை குறையின் இறுதியில் அவர் உடல்நிலை என்னாகும்! கவலைதானே மக்களின் செந்நீரை உண்ணும் யமன். மேற்குறித்த நோய்களினால் நிலையக் குழந்தைகளுக்குப் பெருங்கேடு ஒன்றும் உண்டானதில்லை எனினும், தலைவியாரின் இள நெஞ்சம் உறுதியுடன் இருக்க இடந்தருதல் இல்லை. இங்ஙனம் திடீரென உண்டாகும் நோய்களே, நிலையத்தின் பொறுப்பை ஏற்று நடத்தும் தலைவியாருக்கு மற்றவற்றைக்காட்டிலும், மிக்க வருத்தத்தையும் அச்சத்தையும் தருவன. இவற்றைப் போன்று கவலையைத் தருவது வேறொன்றுமில்லை என, உறுதியாகக் கூறலாம். இஃது உயிரைப் பற்றியதன்றோ?

விளையாட்டு நேரத்திலோ, விரைவுடன் செல்லும் போதோ குழந்தைகள் தவறிவிழுந்து அவர்கள் கை கால்களில் அடிபடல், எங்கேனும் பிடித்துக்கொள்ளல் உண்டு. இதற்குத் தலைவியாரே மருத்துவ முறையைச் செய்துவிடலாம். ஆனால், பெரிய காயத்திற்கும், காய்ச்சல், வயிற்றுப்போக்கு, இருமல் முதலியவற்றிற்கும் சிறுமிகளை மருத்துவச்சாலைக்கு அனுப்பி மருந்துண்ணுமாறு செய்தலே நன்மை. காய்ச்சல் நூற்றிரண்டிற்குமேல் (102°) ஏறின், பனிக்கட்டிப் பையை வைத்தலே நலமாதலாலும், அக்காரியம் நிலையத்தில் செய்தற்குத் தக்க கருவிகள் இராதாதலாலும்

மருத்துவச்சாலையிலேயே அவர்களை விட்டுவைத்தல் தான் சிறந்தது. அவ்வமயம் நிலையத்துப் பிள்ளைகளும் தலைவியாரும் அடிக்கடி மருத்துவச்சாலைக்குச் சென்று சிறுமிகளைப் பார்த்து வருதலும், அவர்களுக்கு வேண்டிய வற்றை நிலையத்திலிருந்தே அனுப்புதலும் அவர்களுக்கு மகிழ்வை அளிக்கும்; இவையே அவர்கள் பிணியை விரைவில் போக்கும் மருந்துமாகும். நோயுற்ற சிறுமி யரின் வீடுகள் அருகிலிருப்பின், வீடுகளுக்கே அனுப்பி விடுதல் சாலச் சிறந்தது.

மற்றக் குழந்தைகளோடு சேர்ந்திருக்கக் கூடாத அம்மை போன்ற சில நோய்கள் நேரிடுங்கால், தலைவி யார் மிக்க கவனமாக இருத்தல் வேண்டும்; உடனே பெற்றோருக்குத் தெரிவித்து அவர்கள் விருப்பப்படி செய்யலாம். இன்றேல், மருத்துவச்சாலைக்கு அனுப்பு தலே நல்லது. ஏனெனில், பலர் சேர்ந்திருக்கும் அவ் விடத்தில் அந்நோய் ஒருவர் இருவரோடு நில்லாது. ஊரில் அந்நோய்கள் பரவியிருக்கும் காலத்தில், குழந் தைகளின் உணவுப்பொருள்கள், இடம், துணிகள் இவற்றைக் கண்காணிப்பாகப் பார்த்துக்கொள்ளல் தலைவியாரின் கடமையாகும். இவை அந்நோய்கள் வாராமல் தடுத்தற்குச் சிறந்த காரணங்களாகும். வந்த பின், முற்கூறியவற்றைப் பின்பற்றியே ஆகவேண்டும்.

சிறுவரை அடிக்கடி துன்புறுத்தும் சிரங்கு என் னும் தொல்லையான ஒரு நோய் உண்டு. மேற்குறிப் பித்தபடி நாடோறும் குளித்து, அழுக்கற்ற உடையை உடுத்து, இருக்கும் இடத்தையும் தூய்மையாக வைக் கின், பெரும்பாலும் குழந்தைகளுக்குச் சிரங்கு வரக் காரணம் ஏற்படாது. ஆனால், சிறுமியர் வீடுசென்று

வந்தவுடனும், உடம்பை நன்கு தேய்த்துக் குளியாத போதும், அதிக வெம்மை ஏற்பட்டபோதும் சிலருக்குச் சிரங்கு வருவதுண்டு. சுத்தம் என்னும் தலைப்பில் கூறிய வாறு அக்குழந்தைகளின் படுக்கை துணிகள் முதலிய வற்றைத் தனியாகவே வைத்து அவர்களையும் தனித் திருக்கச் செய்தல்வேண்டும். அப்போதுதான் அது பலருக்கும் தொற்றாமல் இருக்கும். நாடோறும் நன் றாகத் தேய்த்துக்கழுவி மருந்திடில் அது விரைவில் காய்ந்துவிடும்.

காய்ச்சல் முதலிய சில நோய்கள் வந்து நீங்கிய வுடன், அவர்கட்கு மிக்க வன்மை குறைவாகவும், ஒன் றும் உண்ணப்பிடியாமலும் இருக்கும். அவ்வமயம் வன்மை தரக்கூடிய பண்டங்களை அவர்களுக்குக் கொடுத்தல் மட்டுமேயல்லாமல், அவர்கட்கு விருப்பமான பொருள்களையே சமைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்தல் நன்மை. இன்றேல், குழந்தைகளுக்கு வன்மை குறை யும். அவர்கள் நோயுற்றிருக்குங்கால், தலைவியார் பன் முறை அவர்களைக் கண்காணித்து மருந்தையும், உணவு களையும் ஊட்டுதல்வேண்டும். சிலர், மருந்து கஞ்சி இவைகளை உண்ணப் பெருந்தொல்லை தருவர். அவ் வமயம் இன்சொற்கள் நலனளித்தல்போன்று, வன் சொற்கள் பயனளித்தல் இல்லை. தலைவியார், நிலையக் குழந்தைகளுக்குத் தாயார் இடத்தில் இருக்கவேண்டிய காலங்கள் பல இருப்பினும், அவற்றுள் இதுவே முதன்மையுற்றது. அப்போதுதான் நோயுற்ற சிறுமி தன் வீட்டையும், பெற்றோரையும் நினைந்து வருந்தாம லிருப்பாள். இது நோய் அகலுதற்கும் ஒரு மருந்தாகும்.

ஒரு சிறுமிக்கு, உபகாரச் சம்பளத்தின்பொருட்டுச் செய்யவேண்டுவன யாவும்செய்து, அது கிடைத்தபின்பு

அச்சிறுமிக்கு நெஞ்சுவலி, செந்நீர்க் குறைவு, இழுப்பு, இருமல் முதலிய சில நோய்கள் இருப்பனவாகத் தெரியும். அதன்பொருட்டு, "தம் மகளை எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிடுதல் கூடாது," எனப் பெற்றோர் மன்றுடுவர். கருணைவாய்ந்த தலைவியாருக்கும் அங்ஙனம் செய்ய மனமெழாது. ஆனால், அப்பெண்ணினால் தலைவியாருக்குச் சிறிது துன்பமே. அவள், அடிக்கடி மாடி ஏருமலும், குளிர்ச்சியை உண்டாக்கும் பண்டங்களைச் சாப்பிடாமலும், அதிகம் ஓடி ஆடாமலும், கடினவேலைகளைச் செய்யாமலும் இருக்கப் பார்த்துக்கொள்ளல் வேண்டும். அவளுக்கு வன்மை தரும் உணவுகளைத் தரல் மிகவும் நல்லது.

பொதுவாக நோக்கின், சிறுமிகளின் உடலின் நலமே அவர்கள் கல்விப் பெருக்கத்திற்கும், பிற்கால வாழ்க்கைக்கும் இன்றியமையாததாதலின், அதில் தலைவியார், பெற்றோர்நிலையிலிருந்து அவர்களைப் பராமரித்தல் சிறப்புடையதாகும். தம்மை அப்போதைக்கப்போது பெற்றோர் நிலையில்வைத்து நிலையத்தொழில் புரிபவரும், தன்னலம் பாராட்டாது பிறர் நன்மைக்கே தம் வாழ்நாட்களைப் பயன்படுத்தும் பெருந்தன்மை வாய்ந்தவருமான தலைவியாருக்கு இஃது அரிய காரியமன்று. இந்நீர்மை அவருக்கு இயல்பாகவே அமைந்திருக்கும்.

16. மனநோய்

இங்ஙனம் உண்டாகும் உடல்நோய்கள் மட்டுமே அல்லாமல். மாணவிகளுக்குச் சிலபோது மனநோய்களும் உண்டாதல் உண்டு. ஒரு குடும்பத்தில், தாயார் தந்தையார், உடன்பிறந்தார் இவர்களுள் யாரேனும் ஒருவர் இறத்தலோ, அன்றிப் பொருள் இழப்போ ஏற்படக்கூடும்! அத்துன்பம் சிறுமியைத் தாக்கி அவளைப் பெரிதும் வருத்தும்.

சில குழந்தைகளுக்குத் தாயாரோ, தந்தையாரோ இல்லாமல் இருப்பர்; இருப்பினும், நோயுற்றவராக இருப்பர். தந்தையார் யாதொரு ஊதியமுமின்றிப் பிறர் பொருளை எதிர்பார்ப்பவராக வாழ்வார். இத்தகையவருள் பெரும்பான்மையோருக்கு வீட்டிற்குச் செல்லவே விருப்பம் இராது. ஆயினும், சுருங்கிய விடுமுறைகளிலும் களிப்புடன் வீடு செல்லும் சிறுமிகளைப் பார்க்குங்கால், அவர்கட்கு ஆற்றொணுத் துயரம் உண்டாகும்.

சிலருடைய பெற்றோர் இரங்கூன் சிலோன் முதலிய தூரதேசங்களில் வதிவர். அத்தகையவரும் அடிக்கடி தம் இல்லஞ்சென்று பெற்றவருடன் மகிழ்ந்திருக்க முடியாது. அவர்களுடைய செலவிற்குப் போதிய பணம் கிடைப்பினும், வீட்டிற்குச் செல்ல இயலாமலிருத்தல் அவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும்.

செல்வர் வீட்டுச் சிறுமியர், வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம் புதிய உடைகள், தின்பண்டங்கள், அழகிய பொருள்கள் முதலியவற்றைக் கொண்டுவருவர். அப்போது, அவற்றிற்கு வாய்ப்பு அற்ற சில ஏழைக் குழந்தைகளுக்குச் சிறிது மனத்துயர் உண்டாகும்.

சிறுமிகளின் படிப்பு அவர்தம் சுற்றத்தினருள் சிலருக்குப் பொறுமையை உண்டாக்கும். அதனால், அவர்கள் அக்குழந்தைகளுக்குப் பலவாற்றாலும் இடையூறுகளை விளைவிப்பார்கள். அவை சிலபோது அவர்களுடைய படிப்பிற்கே கெடுதியை விளைக்கினும் விளைக்கும். அஃது அவர்கள் மனத்தைப் பெரிதும் கலக்கும்.

இங்ஙனம் நிலையத்திலிருக்கும் குழந்தைகளுக்கு மனக்கவலையை உண்டாக்கும் நிகழ்ச்சிகள் பல நிகழ்தல் உண்டு. இஃது உலகியற்கை. அவ்வக்காலங்களில் அவரவர்களுக்கு ஏற்ற ஆறுதல்களைக் கூறி, அவர்கள் மனத்துயரைப் போக்குதல், தம் கடமையெனத் தலைவியார் கொள்வார். தலைவியாரின் இனிய சொற்களும், தேறுதல் வார்த்தைகளும் அவர்கள் மனப்புண்ணை ஆற்றி அவர்களுக்குத் தேறுதலை அளிக்கும்.

———

17. பண்டிகைகளும் நோன்புகளும்

மக்கள், உண்டல் உறங்கல் முதலிய செயல்களில் நாடோறும் ஒரே படியாகத் தம் காலத்தைக் கழிக்க விரும்புவதில்லை. இஃது அவர்கள் மன ஊக்கத்தைக் குறைத்துத் தளர்ச்சியை உண்டாக்குகிறது. மானிடர் யந்திரங்கள் அல்லர். ஆதலின், அவர்களுக்கு அப்போதைக்கப்போது சில வேறுபாடுகள் இருந்தே ஆக வேண்டும். அம்மாறுதல்களைத் தருவன பலவற்றுள் சில பண்டிகைகளும் விரதங்களும் ஆகும். இவை, கேவலம் உடலின்பத்திற்கும் போதுபோக்கிற்கும் மட்டும் ஏற்பட்டனவல்ல. உயிருக்கு உணர்வளிக்கும் உயர் உண்மைகளும் இவற்றுள் அடங்கியுள்ளன. பலர், இவற்றின் கருத்துணராதியற்றினும், அவை பயனைத் தந்தே நிற்கும்.

இத்தகைய பண்டிகை நோன்பு முதலியன ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. ஆனால், அவை ஒவ்வொரு மதத்தினருக்கும் வெவ்வேறு வகைப்பட்டிருக்கும். அந்தந்த மதத்தினர் தத்தமக்குரியவற்றையே மேற்கொள்வர். நிலையத்தில் பெரும்பான்மையும் சைவ வைணவ மதத்தினர் கலந்தே வதிவர். ஆகலின், அவண் இரு மதத்தினர் கொண்டாட்டம், பண்டிகை, நோன்பு முதலியவைகளையும் கைக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். தீபாவளி பொங்கல் முதலியன கொண்டாட்டங்களையும், ஏகாதசி கார்த்திகை முதலியன நோன்புகளையும் சேர்ந்தன.

சிறுமியர், கொண்டாட்ட நாட்களில் பலவகைச் சிற்றுண்டிகளை உண்டு, அவரவர் வீடுகளிலிருந்து வந்த புது ஆடைகளை அணிந்து மகிழ்வர். அவ்வமயம் தலைவி

யார் அவர்களுக்கு வளையல் மலர் முதலியன வாங்கிக் கொடுத்தலும் உண்டு.

ஏகாதசி, கார்த்திகை, சிவராத்திரி முதலிய விரத நாட்களில் அவரவர் வீட்டின் வழக்கத்திற்கும் வன்மைக்கும் ஏற்ப விரதத்தை மேற்கொள்வர். சில குழந்தைகள் இரவில் கண்விழிக்க விரும்புவார்கள். அங்ஙனம் விரும்பிய பத்துப்பேரில் இரவுமுற்றும் தூங்காமலிருப்பவர் ஒன்றிரண்டு பேருக்கு மேலிரார். மற்றையோரைத் தூக்க தேவதை அடிமை கொள்ளும்.

நோன்பு நாட்களில் குறைந்தது மூன்று முறையேனும் கடவுள் வழிபாடு நடைபெறும். நோன்புகளும் கொண்டாட்டங்களும் ஏற்பட்ட காரணங்களையும், அவற்றின் உண்மைகளையும், அவற்றை நிலைநிறுத்த வந்த புராணக் கதைகளையும், அவற்றை மேற்கொள்வதால் உண்டாகும் நன்மைகளையும் மாணவிகளுக்கு விளங்கச் சொல்லுதல் தலைவியாரின் கடமை. அப்போதுதான் அவர்களுக்கு அவற்றின் கருத்தும் பெருமையும் மனத்திற்பட்டு, அவர்கள் பொருளும் பயனுமற்ற சடங்குகளைத் தள்ளி, சிறந்தவைகளை உள்ளன்புடனும் முறையுடனும் கடைப்பிடித்துப் பேறு பெறுவார்கள். இன்றேல், மாணவிகளும் படியாதவர்கள் போன்று, வழக்கத்தையே பெரிதெனக் கொண்டு நன்மை தீமைகளை உணராது காரியம் செய்யநேரிடும். இங்ஙனம் வழக்கத்தைப் பின்பற்றுவதில் படியாதவர்கள் நிலையைக்காட்டிலும், சிறிது படித்தவர்கள் நிலையே தாழ்வானதெனக் கொள்க. படியாதவர்கள் பெரியவர் வழக்கம் என்னும் ஒரே எண்ணத்தினால், எவ்வாராய்ச்சியிலும் நுழையாமல் அவற்றை நம்பிக்கை

யோடு செயவார்கள். படித்தவர்களோ, அவற்றிலுள்ள சில பயனற்றவைகளை நோக்கி, 'இவை சத்தற்றவை' எனக் கருதிக் கைவிடுவர். இன்றேல், கடமைக்காகச் செய்வரே யல்லாமல், அதனிடத்துச் சிறிதும் பத்தி உண்டாகாது. ஆதலின், அவற்றின் பொருளை அவர்கள் அறிந்திருத்தல் நல்லது.

வரலட்சுமி கௌரிதேவி நோன்புகளில், அததற்கு வேண்டிய சிற்றுண்டிகள் செய்து, முழு நாளும் விரத மிருந்து, அந்திவேளையில் வழிபாடு நிகழும். அன்று வீட்டைப் போன்றே நோன்புக்கயிறு கட்டிக்கொள்ளல் முதலியன நடைபெறும்.

அக்காலங்களில் குழந்தைகளைப் படிக்குமாறு கட்டாயப்படுத்தல் ஆகாது. தங்கள் போக்கில் விட்டுவிடில், உண்டு, உடுத்து, ஆடிப்பாடி, களித்துச் சிறிது நேரம் படிக்கவும் செய்வார்கள். அதனால், அவர்கள் மனம் களிப்படையும். இளமாணவிகளின் மனத்திற்கு எவ்வெவ்வகையில் மகிழ்வூட்ட முடியுமோ, அவ்வவ்வகைகளைக் கைக்கொள்ளுதல் சிறந்தது. அவர்கள் களிப்பு அவர்களுடைய உடல்வன்மைக்கும், அறிவுவன்மைக்கும் உரனளிப்பதன்றோ? களிப்புற்ற மனம், ஒன்றையும் செய்ய முடியாதென்பதை அறியாதார் யார்?

---

18. வேடிக்கை விளையாட்டுகள்

உலகில் இன்ப துன்பங்கள் மாறி மாறி வருவன வாயிருப்பினும், ஓரறிவுயிர்களான புற்பூண்டுகளும் இன்பத்தையே விரும்புகின்றன என்றும், அவ்வின்பம் அவற்றை ஒளிபெறச் செய்கிறதென்றும் அறிவியல் நூலார் கூறுகின்றனர். அங்ஙனமாயின், அவ்வின்ப நிலைமையில் பகுத்தறிவு வாய்ந்த மக்கள் கொண்டிருக்கும் எண்ணத்தையும், அதனால் அவர்கள் அடையும் உயர்நிலையையும் இயம்பலும் வேண்டுமா? இஃது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ! இழவுவீட்டையும் மணவீட்டையும் நோக்கின், துன்ப இன்ப நிலைகளை நன்கு உணரலாம். முந்தியதால் மக்கள் ஊக்கங் குறைந்து, உணர்வொடுங்கி, உயிர்வாடிக்கிடப்பார்கள்: பிந்தியதால் உணர்வு கிளர்ந்து, ஒருயிர் பல்லுயிராய் ஊக்கத்துடன் நிற்பர். இதனால், மக்களைக் கீழிறக்குவது துன்பம் என்றும், மேலேற்றுவது இன்பம் என்றும் அறிந்தாம். இங்ஙனம் இன்பமூட்டும் செயல்கள் பல உண்டு. அவற்றுள் வேடிக்கை விளையாட்டுகளும் சேர்ந்தனவாகும்.

பொதுவாக இவ்வேடிக்கை விளையாட்டுகளைக் காண விரும்பாதார் ஒருவருமிலர். அதன் பொருட்டுச் செலவழியும் பணத்திற்கும் அளவின்று. நாளுக்கு நாள் புத்தம்புதிய வேடிக்கைகள் எத்தனையோ வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் மனத்தைச் செலுத்தாதவர் நூற்றுக்கு ஒருவரேனும் இருப்பரோ எனக் கருதுதற்கும் இயலவில்லை. இந்நிலையில் இளம் மாணவிகளைப்பற்றி என் கூறுவது? அவர்கள் மனம் மலர்ந்து விரிதற்குச் சிறந்த காரணம் வேடிக்கை விளையாட்டு

களே என்பது மிகையாகாது. "வெளிச்சென்று சில வேடிக்கைகளைக் காணப் போகிறோம்," என்றறிந்த மாத்திரத்தில் அவர்கள் நெஞ்சமும் மனமும் களிப்பினால் திளைக்கும். அவற்றைப் பார்ப்பதற்கு இரண்டு மூன்று மணி நேரத்திற்கு முன்பே அவர்கள் முகம் முழுமதி எனத் துலங்கும். வரவிரும்பாத சில நட்பினரையும் வற்புறுத்தி வரச்செய்வார்கள். 'இஃது ஒரு பெரும் பேறு,' என்பதே அவர்கள் எண்ணம். இஃது இளைஞர் இயல்பு.

பத்து அகவைக்குட்பட்ட குழந்தைகளைச் சனி ஞாயிறுகளின் மாலையில் ஒரு மணி நேரம் செப்புகளும் தின்பண்டங்களும் வைத்து விளையாட விடுவது வழக்கம். அவர்கள் பெரிய பெண்களையும் தலைவியையும் விருந்திற் கழைத்து அத்தின்பண்டங்களுள் சிலவற்றை தலைவி யார்க்குத் தந்து உபசரிப்பார்கள். தலைவியார் அவற்றை மிக்க அன்புடன் உண்டு மகிழ்வார். அக்குழந்தைகள் தனித்தனிக் குடும்பமாகப் பிரிந்து விடுவார்கள். ஒரு குடும்பம் தங்களுக்குக் கொடுத்த சிற்றுண்டி முழுவதை யும் செலவழித்துவிடும். வேறொரு குடும்பம் மிகுதி வைத்துக் கொண்டிருக்கும். மற்றொன்று வேறொரு வரிடம் சிறிது கடன் வாங்கிக்கொள்ளும். இவற்றைக் கொண்டு அவர்களுக்குச் சில அறிவுரைகளைக் கூறிச் செட்டுடன் செலவழித்து மிகுதி வைத்த குடும்பத்தைப் புகழ்தல் உண்டு. இஃதும் அவர்களுக்கு ஓர் அறிவை ஊட்டுவதாகும்.

மாலை விளையாட்டு நேரத்தில் ஒருவரும் படித்தல் கூடாது. அவ்வமயம், கும்மி, கோலாட்டம், வாய்ப் பாட்டு, நடனம், கோலமிடுதல் முதலியவற்றைக்

கற்றுக் கொள்வர். விளையாட்டு நேரத்தில் கேவலம் ஓடுவதும் குதிப்பதுமாகவே இராமல், உடலிற்கு வன்மை தரத்தக்கனவும் பயனளிக்கத் தக்கனவுமான மேற் குறித்த ஏதாவதொன்றில் சேர்ந்து பழகுவர். அவை, குழந்தைகளுக்குக் களிப்பையூட்டுவது மட்டுமேயல்லா மல், அப்போதைக்கப்போது நிலையத்தைக் காணவரும் பெற்ரேர், மற்றவர், மேலதிகாரிகள் இவர்களை மகிழ் வித்தற்கும், நிலையத்தில் ஏற்படும் சிறப்புநாட்களில் மற்றவருக்கு இன்பமூட்டுதற்கும் பயன்பட்டன.

அப்போதைக்கப்போது செம்மண்கோடு கோலங் கள் இட்டு நிலையத்தை அழகு படுத்துவது மாணவி களின் வேலையேயாகும்.

இவ்வேடிக்கை விளையாட்டுகள் பலவகை: உல் லாசப் பிரயாணம், படக்காட்சி, பொம்மைக்கொலுவு, மாயவித்தை, கழைக்கூத்து, ஞாயிற்றின் தோற்றம், திங் களின் தோற்றம், மலர் வனம், பதுமை மணம், கடற்கரை விளையாட்டு, குரங்காட்டம், மகம்மதியர் கொண்டாட் டங்களில் தெருவில் செல்லும் பலவகைக் களியாட்டங் கள் முதலியன.

இவற்றுள் சில வீட்டிலிருந்தே காணத் தக்கவை சில வெளிச்சென்று காணத்தக்கவை. வீட்டிலிருந்து காணுவதைவிட வெளிச்சென்று காணுவதிலேயே அவர்களுக்குக் களிப்பு மிகுதி. ஆதலின், தலைவியார் குழந்தைகளை அப்போதைக்கப்போது வேடிக்கை விளை யாட்டுகளுக்கு அழைத்துச் செல்லல் நலம். வெளிச் செல்லுங்கால் சில தின்பண்டங்களையும் உணவுகளையும் உடன்கொண்டு போதல் வேண்டும். அதே பண்டங் களை வீட்டில் உண்பதைக்காட்டிலும், வெளி இடங்

களில் உண்ணுங்கால் அவர்களுக்கு மிக்க இன்பம் தோன்றும்.

அவ்வமயம் மாணவிகளுக்குச் சிறிது உரிமையைத் தருதல் நல்லது. அங்கு மிக்க கட்டுதிட்டங்கள் பயன்படா. அக்கட்டுப்பாடுகள் அவர்கள் உல்லாசப் போக்கின் உவகையைக் குறைத்து வெறுப்பை உண்டாக்கும். ஆனால், அவர்கள் நீர்நிலைகளில் குளிக்குங்கால் உடனிருத்தலும், துன்பந்தரக் கூடிய விளையாட்டில் நுழையா வண்ணம் பார்த்துக் கொள்ளலும் தலைவியாரின் கடமை. இன்றேல், விளையாட்டே வினையாய் முடியினும் முடியலாம். சென்ற இடங்களில் சிலர் நீர் வேட்கை கொள்ளலும், ஒன்றுக்கும் இரண்டுக்கும் வெளிச்செல்ல விரும்பலும், வழிநடந்த களைப்பால் இளைப்பாறக் கருதலும், மனவன்மைக் குறைவால் மயக்கமடைதலும் உண்டு. இவர்களுள் சிலர் செய்வன வெறும் போலிகளாகவும் இருக்கலாம். தலைவியார் உண்மையை உணர்ந்து அவற்றிற்கேற்ப உதவி புரிதலோ, கண்டித்தலோ செய்தல் வேண்டும்.

சில இடங்களில் உள்ள நீர்நிலைகளில், படகுகளில் ஏறிச்சென்று உலவி வருவதுண்டு. அவ்வமயம் குழந்தைகள் அந்நீரோடு களிப்புடன் விளையாடும் விளையாட்டு மிக்க மனக்கிளர்ச்சியை ஊட்டும்.

இங்ஙனம் வெளியிடங்களுக்குச் செல்லுங்கால், மாணவிகளுக்கு மகிழ்ச்சி தவிர வேறொன்றும் தோன்றுதல் இல்லை. ஆனால், ஒரு துன்பமுமின்றி அவர்களைக் கொணர்ந்து வீடு சேர்க்கும் மட்டும் தலைவியாருக்குள்ள பொறுப்பும் மனக்கவலையும் இயம்புந் தரமுடையனவல்ல. அவற்றை அவர் வெளிக்காட்டாமலே

அவர்களோடு கூடிக்குலாவி மகிழவேண்டும். துன்பமின்றி வீடு சேர்ந்த பின்பே அவருக்கு உண்மை இன்பம் உண்டாகும். அப்போதுதான் அவர் தலையிலிருந்த பெருஞ்சுமை கீழிறங்கியதாய் அவருக்கு ஓர் உணர்ச்சி தோன்றும்.

"இத்துணைத் துன்பமுள்ள செயலை ஏன் தலைவியார் மேற்கொள்ள வேண்டும்?" எனச் சிலர் கேட்பர். அங்ஙனம் வெளியிற் கொண்டு போகாதிருப்பது குழந்தைகளுக்குப் பெருங் குறையாகக் காணப்படும். எப்போதும் வீட்டிலேயே அடைந்திருக்கச் சிறுமியர் விரும்பார். அவர்களை வெளிக்கொண்டு போதலால், தலைவியாருக்கு ஏற்படும் தொல்லைகளைக் கூறினும், அஃது அவர்களுக்குப் பொருளாகாது. அங்ஙனம் கூறுவதும் தகுதியுடையதன்று. ஆதலால், தலைவியார் குழந்தைகளை வெளி இடங்கட்கு அழைத்துக்கொண்டு போகாமலிருத்தற்கும் இயலாது. வீடு திரும்பும் மட்டும் கவலைகொள்ளாமல் இருக்கவும் முடியாது. இது நிற்க. இந்நூலின் ஓரிடத்தில் உல்லாசப் பிரயாணத்தைப்பற்றி விரிவாய்ப் பகர்ந்திருத்தலினாலும், இங்குக் காட்டியுள்ள ஒவ்வொரு வேடிக்கை விளையாட்டுகளைக் குறித்தும் விரிக்கின் நூல் விரியுமாதலினாலும் இவற்றைச் சுருக்கிக் கூறினோம்.

19. கொண்டாட்டங்கள்

மாணவிகள் ஓராண்டில் பெரும் பகுதியை நிலையத்திலேயே கழிக்கவேண்டி இருத்தலின், வீடுகளைப் போன்றே இங்கும் சில கொண்டாட்டங்களை மேற்கொள்ளுதல் சிறந்ததாகும்.

இவை பல திறத்தன: குழந்தைகள் பிறந்த நாட்களைக் கொண்டாடுதல்; ஆண்டிற் கொருமுறை பழைய பிள்ளைகளை வரவழைத்து விருந்திட்டு அவர்களோடு அளவளாவி இருத்தல்; நிலையத்தில் படித்துச் சென்ற ஒருத்திக்கு மணம் நிகழுமாயின், அம்மணப் பெண்ணை அழைத்து அவளுக்கு நலங்கிடல் பூச்சூட்டல் முதலிய மங்கல காரியங்களைப் புரிதல்; நிலையத்தில் மங்கைப் பருவமடைந்த பெண்களுக்குச் சில சிறப்புகளை ஆற்றல்; ஆண்டுதோறும் பெற்றோர் நாளென்று ஒன்றைக் குறித்து, அன்று அவர்தம் முன்னிலையில் சிறுமியர் கற்ற ஆடல், பாடல், கல்வி முதலியவற்றைக் காட்டி அவர்களை மகிழ்வித்தல்; தங்கள் கல்வியை முடித்து, நிலையத்தைவிட்டுப் போகும் சில மாணவிகளுக்கு, நிலையத்தில் இருக்கும் மாணவிகள் விருந்தளித்து விளையாட்டுகளினால் அவர்களை இன்பமுறச் செய்தல்; ஒரு நாளைக்குத் தங்கள் ஆசிரியர்களையும், கல்லூரித் தலைவியாரையும் வரவேற்று அவர்கட்குச் சிறந்த விருந்தளித்தல் முதலியன.

இவைகள் யாவும் கொண்டாட்டங்களே. ஆயினும், இக்கொண்டாட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இயல்பு பெற்றிருக்கும். சில வெறும் ஆடல் பாடல்களோடு நிற்கும். சில சிற்றுண்டிகளோடு முடியும். சில உணவு சிற்றுண்டிகளோடு சேர்ந்திருக்கும். எங்ஙன

மேனும், இவை ஒவ்வொன்றும் குழந்தைகளுக்கு மிக்க மனக்கிளர்ச்சியையும் களிப்பையும் ஊட்டக்கூடியதே!

அந்தக் காலங்களில் அவர்கள் மற்றெல்லாத் தொல்லைகளையும் மறந்து, அக்காரியஞ் செய்வதிலேயே மனக்கிளர்ச்சியுடன் நிற்பார்கள். நிலையத்திலுள்ள மாணவிகளுக்கு, சலியாமல் உழைக்கக்கூடிய இளமையும், "நமக்குத் தரப்பட்ட காரியத்தை நாம் சீர்மை பெற இயற்றி நல்லபேர் வாங்கவேண்டும்" என்ற எண்ணமும், வேண்டிய பொருள்களும், பல வேலையாட்களும், போதிய காலமும், வேறு தொல்லையற்ற நிலையும் வாய்ந் திருத்தலின், எடுத்த காரியம் யாதொரு குறையுமின்றி நடைபெறும். அன்று அவர்களுக்குள்ள மகிழ்ச்சியை அளந்துகூற ஒருவராலும் இயலாது. நிலையமே களிப் புடன் குதிப்பது போன்று தோன்றும். மாணவிகள், நிலையத்தைத் தூய்மைப் படுத்தல், அழகு செய்தல், உணவு பரிமாறுதல், வந்தவரை உபசரித்தல் முதலிய யாவற்றையும் அவரவர்கள் முறையின்படி மிக்க சிறப் பாகச் செய்வார்கள். ஆனால், தலைவியார் உடனிருந்து அந்தந்தப் பகுதியினரை ஊக்கிக்கொண்டே இருத்தல் வேண்டும். நம் வீடுகளில் எத்தனை பேரிருப்பினும், இக்கட்டுப்பாட்டுடன் காரியங்கள் நடைபெறுதல் அருமையே. அந்தக் காலங்களில், இன்னின்னவற்றை இவ்வளவு செலவில் செய்யவேண்டுமெனச் சொல்லுதல் தலைவியார் கடமையாகவும், அதற்கேற்பப் பணத்தை வைத்துச் செலவிட்டுக் கணக்குக் காட்டல் மாணவி களின் கடமையாகவும் இருத்தல்வேண்டும்.

இவை, மாணவிகளுக்கு வந்தவரை இனிய முகத் துடன் வரவேற்று உபசரித்தல், பெரிய விருந்திற்கு

உணவு சமைத்தல், பரிமாறுதல், வீட்டை அழகுபடுத்தல், இன்னின்ன காரியங்களுக்கு இன்னின்ன சிற்றுண்டிகளையும், இன்னின்ன காய்கறிகளையும் சமைத்தல், இத்தனை பேருக்கு இவ்வளவு பண்டங்கள் என அளவு படுத்தல், ஒன்றின் பின்னொன்ருக முறையோடு இயற்றல் முதலியவற்றைக் கற்பிக்கின்றன; இவை அவர்கள் பிற்கால வாழ்க்கைக்கு மிக்க பயனளிக்குமல்லவா?

ஆனல், தலைவியார் ஒரு முறை ஒரு பிரிவிற்குக் கொடுத்த வேலையையே மறு முறையும் அப்பிரிவிற்குக் கொடாமல், மாற்றி மாற்றித் தருதல் நல்லது. அப்போதுதான் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு காரியத்திலும் பழக்கம் உண்டாகும். அச்சமயத்தில் குழந்தைகள் சிறிது பிழைபடினும் தலைவியார் கடுகடுத்தல் கூடாது. அச்செயல் காரியத்தை முற்றும் கெடுத்துவிடும். தலைவியார் அன்றெல்லாம் அவர்களுடன் மகிழ்வுடனும், அவர்களை ஊக்கிக்கொண்டும்தான் இருத்தல்வேண்டும்.

சிறுமியர் மறுநாள் மிக்க இளைப்படைந்திருப்பர்; சிலர் உணவிற்கும் எழுந்திராமல் உறக்கம் கொள்வர். அவர்களைச் சிறிது இளைப்பாற விடுதலே நலம். பின்பு தலைவியார். அவர்கள் செய்த காரியங்களைப் புகழ்ந்து கூறி, அவற்றிலுள்ள சில குறைகளையும் இனிமையுடன் தெரிவிக்கின், அவர்கள் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார்கள். ஆனல், நிறைவுகளையே உயர்த்திச் சொல்லி அவர்களை மகிழ்விக்கவேண்டும்.

இன்னும், நிலையத்தில் படித்துச்சென்ற மாணவிகள் மணமுடிந்து நிலையம் வருவரேல், முற்கூறியவாறு அவர்கட்கு நலங்கிட்டு மலர் சூட்டி நிலையத்தின் நினைவின் பொருட்டு ஏதேனும் ஒரு சிறு வெள்ளிப்பாத்திரம்

கொடுத்து அவர்களை மகிழ்விப்பது வழக்கம். அம்மக ளிரும் நிலையக் குழந்தைகட்கு நிலையத்திலேயே ஒரு விருந்திடுவர். இவை யாவும் குழந்தைகளின் களிப்பிற் கும் மனக்கிளர்ச்சிக்கும் வீட்டைப்போன்று இன்புற் றிருத்தற்கும் கருவிகளாய் இருந்தன.

பெற்றோர் நாள் : முற்கூறியவாறு ஆண்டிற்கொரு முறை பெற்றோர் நாளென்று ஒரு நாள் கொண்டாடப் படும். அன்று மாணவிகளின் தாயார், தமக்கை, தங்கை கள், நட்பினர் முதலியவர் அழைக்கப்படுவர். நிலையத் தில் இடம் போதாமையின், அது பெரும்பான்மையும் கல்லூரிலேயே நடைபெறும். அவ்வமயம் பெரிய நாடக அரங்கை அமைத்து, கும்மி, கோலாட்டம், நட னம், சிறுநாடகம், இசை முதலியன மிக்க சிறப்பாய் நடத்திக் காட்டப்படும்.

நான் தலைவியாக நிலையத்தில் நுழைந்ததிலிருந்து அவர்கள் எனக்கு உரிய உறவினர் எனக் கருதும் கருத்தி லிருந்து வேறுபட்டதாய் எனக்கு நினைவில்லை. முதல் சில ஆண்டுகள் அவர்களைச் சகோதரிகள் எனவும், எனக்கு வயதேற ஏறக் குழந்தைகளெனவும் நினைத்திருந்தேன். எங்கள் வீட்டில் செய்யும் சிற்றுண்டிகளை உண்ணும் போதெல்லாம் 'இவற்றைக் குழந்தைகளுக்குச் செய்து கொடுத்தல்வேண்டும்,' என்னும் எண்ணம் என் மனத்தில் தோன்றும். ஆதலின், சில சமயங்களில் என் தாயாரை அச்சிற்றுண்டிகள் செய்தனுப்புமாறும், சிலபோது நிலைய வேலையாட்களுக்குச் செய்யக் கற்றுக்கொடுக்கு மாறும் கேட்டுக்கொள்வதுண்டு. யான் மாத்திரமே யன்றி என் தங்கை, தாயார், தகப்பனார், தம்பிகள் முத லிய என் குடும்பத்தினர் யாவரும் அக்குழந்தைகளிடம்

அன்பு காட்டிவந்தனர். அச்சிறுமிகளும் என் குடும்பத்தினரிடம் மிக்க அன்பு பாராட்டினர்கள். பெற்ரேர்நாள் கொண்டாடுதல் முதலிய நன்னாட்களில் மாணவிகட்கு ஆடல் பாடல்களைக் கற்றுக்கொடுக்கும் காரியம் முற்றும் என் தங்கையையே (T. பதுமாவதியம்மாள்) சார்ந்திருந்தது. அவர்கள் யாவரும் என்னுடன் ஒத்துழைத்திராவிட்டால், அத்தனை ஆண்டுகள் யான் நிலையப்பொறுப்பைத் தாங்கியிருத்தல் சிறிது கடினமாகவே இருந்திருக்கும்.

கொண்டித்தோப்பில் என் தகப்பனர் எனக்குக் கொடுத்திருந்த வீட்டிற்கு ஆண்டில் மும்முறையேனும் யான் நிலையப் பிள்ளைகளை அழைத்துச் செல்வேன். ஒவ்வொரு முறையும் ஒன்றிரண்டு நாட்கள் அங்கேயே இருப்போம். அச்சமயம் அவர்களுக்குப் பெரிய விருந்து நடைபெறும். எல்லாச் செலவுகளையும் என் தகப்பனரே மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார். அக்குழந்தைகளுக்கு இஃதொரு கொண்டாட்டம் போன்றே தோன்றும். அன்றியும், எங்கள் வீட்டில் நடக்கும் நன்னாட்களில் அவர்களுக்கு விருந்திடல், அன்றிச் சிற்றுண்டிகள் பழங்கள் அனுப்புதல் முதலியன நடைபெறும். ஒவ்வோர் ஆண்டும் படிப்பை முடித்து நிலையத்தைவிட்டுச் செல்லும் குழந்தைகளுக்கு என் தாயார், அன்புடன் ஒவ்வொரு வெள்ளிக் குங்குமப் பரணி கொடுத்தனுப்புவது வழக்கம்.

———

20. பணியாளர்

உலகில் பெருபான்மையவர் தொழில்புரிபவரா யிருப்பினும், சிலரை உத்தியோகத்தர் எனவும், சிலரை வேலைக்காரர் எனவும் கொள்ளல் உலகவழக்காக உள்ளது. இதற்குத் தொழிலினியல்பும் ஊதியமுமே காரணமாகும். பொதுக் கண்கொண்டு நோக்குங்கால், ஒருவருக்குக் கீழிருந்து தொழில் புரிபவர் யாவரும் வேலைக் காரரே. வேலைசெய்யும் ஒவ்வொருவரிடமும் அப் போதைக்கப்போது சில குற்றங்குறைகள் நேரிடத்தான் செய்யும். இது மக்கள் இயல்பு. இதைச் சிறிதும் நோக்காமல், சிலர், தம் வீடுகளில் சமையல் முதலிய வேலைகளைச் செய்யும் ஏழைமக்களைக் கேவலமாகப் பேசுதலும், வாயில் வந்தவாறு வைதலும் செய்கின் றனர். இஃது இரக்க நெஞ்சுடையவர்க் கழகாகாது.

இத்தீப் பழக்கம் நிலையக் குழந்தைகளிடம் உண் டாகாத வண்ணம் அவர்களைப் பழக்குதல் நல்லது. ஓரிடத்தின் செயல்கள் பல வெளியிடம் பரவுதற்குக் காரணம் வேலைக்காரரே. சமையல் முதலிய வேலை செய்பவர், கல்வியும், பரந்த அறிவும், சான்ருேர் கூட் டுறவும் அற்றவராதலின், அவர்கட்குப் பெருந்தகைமை யாங்ஙனம் உண்டாகக் கூடும்? அவர்களுக்குத் தங்கள் தலைவர்களிடம் அன்பிருப்பின், தீமையையும் நன்மை யாகவும், ஒரு நலனையே பத்தாகவும் பகருவார்கள். அன்பின்றேல், நன்மையே தீமையாகவும், ஒரு தீமையே பத்தாகவும் அவர்களிடை உருக்கொண் டெழுந்து விடும். சிலபோது இல்லாத இழிவுச்செய்தி களும் அவர்கள் மூலம் வெளிக்கிளம்புவதுண்டு. இவை சுற்றுப்புறமெங்கும் பரவும். இதனால், அக்குடும்பத்

திற்கே இழிவு ஏற்படும். இவற்றிற்கெல்லாம் வேலையாட்களே காரணராயிருப்பினும், அவர் அங்ஙனம் செய்திகளைப் பரப்புதற்கு முதற் காரணர் வீட்டுத் தலைவரே எனக் கூறுதல் மிகையாகாது.

முதலில் வேலையாட்களிடம் இரக்கங் கொள்ள வேண்டும். அஃதிருப்பின் சிறு பிழைகளுக்கும் அவர்களைக் கீழ்மைப்படுத்திப் பேசுதற்கு மனமெழாது. அவர்கள் ஏழைகளாதலின், நம் வீடுகளில் செய்யும் சிற்றுண்டி, சுவையுள்ள காய்கறிகள் முதலியவற்றில் அவர்களுக்கு விருப்பம் செல்லாமலிராது. அவற்றை அவர்களுக்கும் ஈந்து இன்புறுத்த வேண்டும். அவர்கள் செய்யும் குற்றங்குறைகளுள் பலவற்றைக் கண்டுங் காணுதும் விடுதலே நலம். சிறுசிறு பிழைகளையும் கேட்டுக் கொண்டிருப்பின், அவர்களுக்கு நம்மிடமிருக்கும் மதிப்புக் குறைந்துவிடும். நாம் சில காரியங்களுக்கு அவர்களை நம்பியே ஆக வேண்டும். இன்றேல், காரியம் காலத்தில் நடைபெருது. நாம் அவர்களிடம் கொண்டிருக்கும் நம்பிக்கையை அவர்கள் அறிந்துகொள்ளுமாறு நடந்து கொள்ளுதலே நல்லது. ஆனல், அவர்களிடம் தம் குடும்பச் செய்திகளையும் குறைகளையும் சொல்லிக் கொள்ளல், அவர்களை ஏதாவதொரு காரியத்திற்கு உண்மை கூற அழைத்தல், அவர்கள்முன் பொய் கூறல், பிறர்மேல் கோள்சொல்லுதல், தன்னைப் பெருமைப் படுத்திக் கொள்ளல் முதலியவற்றைச் செய்தல் கூடாது. இவை யாவும் பணியாளர்களுக்குத் தலைவியாரிடம் உள்ள நன்மதிப்பைக் குறைக்கும் வழிகளாகும். இவற்றை நன்கு அறிந்துகொள்ளுமாறு மாணவிகளைப் பழக்குதல் நல்லது.

மாணவிகளை இங்ஙனம் பழக்கினும், நிலையங்களில் சிற்சில துன்பங்கள் நேர்வதுண்டு. சில சிறுமியர், தம் குடும்பத்திலுள்ள குறைகளையும், சில சிறுமியர், தம் குடும்பத்திலுள்ள சிறப்புகளையும், சில சிறுமியர், பிறர் குடும்பத்தின் குற்றங்குறைகளையும் வேலைக்காரரிடம் கூறுவர். இவற்றைக் கொண்டு பணியாளர் சிலரை இழிவாகவும், சிலரைச் சிறப்பாகவும் நினைத்து இவ் வெண்ணத்தைப் பேச்சு செயல் முதலியவற்றிலும் காட்டுவர்.

சிலர், தம் வீடுகளிலிருந்து வரும் சிற்றுண்டிகளையும் பழங்களையும், சிலர் காசையும், பழைய துணிகளையும் பணியாளருக்குக் கொடுப்பர். இங்ஙனம் உதவி செய் கின்ற சிலரிடம் அப்பணியாளர், அன்பு பாராட்டுதல் போன்று நடிப்பது மட்டுமேயல்லாமல், அவர் வேலை களையும் உடனுக்குடனே செய்வர். அச்சிறுமியர் விரும்புவன யாவும் கிடைக்கும். அப்பணியாளர் அவர் செய்யும் குற்றங்களையும் பிறரிடம் சொல்லார்; அம் மாணவருக்கு வேண்டியபோது காசையும் கடன் கொடுப்பார்; அவர் எங்கு போகச் சொன்னாலும் மறுக்கார். மற்றக் குழந்தைகளுக்கு இது மிக்க பொறாமையை விளைவிக்கும். அப்பொறாமை கொண்ட குழந்தைகளின் வாயிலாய் இக்கூட்டுறவு வெளிப்படுத லும் உண்டு. இன்னும் பல பொருள்களைப் பணியாள ருக்குக் கொடுத்துக் கொண்டிருந்த சிறுமியர், அவற்றை ஈயாமல் நிறுத்தி விடுவதனாலோ, அவர்களிடம் வாங்கிய காசைத் திருப்பிக் கொடாததனாலோ இத்தொடர்பு நிலை வெளிப்படும். கொடுப்பவரையே மேன்மேலும் தருமாறு வேலையாட்கள் வற்புறுத்துவதனால், அங்ஙனம் தர மறுக்கும் சிறுமியராலும் இச்சேர்க்கைத் தன்மை

வெளிப்படும். மாணவிகளுக்குள் உண்டாகும் வேறு பாடுகளைத் தீர்த்து விடுவதைக்காட்டிலும் இது மிக்க துன்பமானது. சிலபோது குழந்தைகள் செய்த குற்றம் அதிகமாக இருப்பின், பணியாளர்முன்பு குழந்தை களைக் கண்டித்தல் இழிவன்றோ? பணியாளரையும் அதிகம் கண்டித்தல் தகுதியுடையதன்று. பணியாள ருக்குத் தெரியாமல் சிறுமியரைக் கண்டித்து, இனி அத்தகைய காரியம் நிகழாவண்ணமும், மாணவிகள் வேலைக்காரருடன் நெருங்கிய தொடர்புவைத்துக் கொள்ளா வண்ணமும் செய்தலே தகுதியுடையது.

சில பெற்றோர்களும் பணியாளரிடம் தொடர்பு கொண்டு அவர்களுக்கு ஏதேனும் கொடுத்துத் தம் மக்களைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்வதுண்டு. இதனாலும். சில தீமைகள் உண்டாகும். பொதுவாக, மாணவிகளோ பெற்றோரோ பணியாளருடன் தொடர்பு வைத்துக்கொள்வதனால் அஃதற்ற குழந்தைகளுக்கு உபசாரக் குறைவும், சில துன்பங்களும், பணியாளருக் குப் பொருளாசையும், அதைக் கண்டிக்குங்கால் அவர் களுக்கு மனத்தாங்கலும் உண்டாகுமாதலின், முளைக் கும்போதே இத்தொடர்பைக் கிள்ளியெறிய முயல வேண்டும்.

புதிய வேலைக்காரரை மாற்றுங்கால், அவர்கள் இயல்பு தெரியுமட்டும் எல்லாச் செயல்களிலும் தலைவி யார் அவர்களிடம் ஊன்றிய நோக்கத்தைச் செலுத்த வேண்டும். கடையிலிருந்து கொணரும் பண்டங்களின் நிறை விலை முதலியவற்றிலும், சமையலுக்குக் கொடுக் கும் பண்டங்களின் அளவிலும் எப்போதும் கவன மாகவே இருத்தல் நல்லது. வீடுகளில் உள்ள வேலைக்

காரரைக்காட்டிலும், நிலையங்களில் உள்ள பணியாளருக்கு மிக்க தன்னுரிமை உண்டு. பிள்ளைகளும் தலைவியாரும் காலை பத்துமணிக்குச் சென்றால், மாலை ஐந்து மணிக்குத்தான் வீடு திரும்புவார்கள் என்பது அவர்கட்கு நன்றாகத் தெரியும். இதுகாறும் அவர்களுடைய அரசுதானே! அவர்கள் எதை எங்ஙனம் செய்தால் யாருக்குத் தெரியும்! ஆதலின், கூடியமட்டும் நல்ல பணியாளரையே தேர்ந்தெடுத்தல் நலம். இன்றேல், பொருள் முதலிய பலவற்றிற்கும் கெடுதல் ஏற்படும். இஃதன்றியும், உணவின் சுவையும், உணவின் பக்குவமும் கெட்டு உடலுக்கும் நோயுண்டாகும். ஆதலின், இயன்ற மட்டும் பணியாளரிடம் அன்புடையராய், இன்சொற்களையே கையாள வேண்டும். இவற்றால் யாவும் ஒழுங்குடன் நடைபெறுவது மட்டுமேயல்லாமல், உணவு நிலையிலும் துன்பம் குறையும்.

21. குற்றங்கள்

குற்றம் என்பதற்குப் பிழை, தவறு எனப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. ஆனால், ஒருவருக்குக் குற்றமாகத் தோன்றும் ஒன்று, மற்றவருக்குக் குற்றமாகத் தோன்றுதல் இல்லை. இதற்கு அவரவர் பழக்கமும் மன இயல்புமே காரணமாகும். ஊன்றிநோக்கின், மக்களுடைய வாழ்க்கையைப் பண்படுத்தாது தீமையை விளைவிப்பன எவையோ, அவையே குற்றங்கள் எனவும், வாழ்க்கையைப் பண்படுத்தி நன்மையை உண்டாக்குவன எவையோ, அவையே நலங்கள் எனவும் ஒருவாறு கொள்ளலாம். இங்ஙனம் இருப்பினும், எத்தகையவரும் மறதியினாலோ, துன்பத்தினாலோ, தெரிந்தோ, தெரியாமலோ சில தவறுகள் இழைத்தல் இயல்பு. அதினும், கட்டுதிட்டங்களுக்குட்பட்ட சிறுமிகளைப்பற்றிக் கூறவே வேண்டாம். ஆதலின், அவர்களியற்றும் சிற்சில சிறு குற்றங்களைக் கண்டுங் காணாது விடலே நலம். அங்ஙனமின்றிச் சிறு குற்றங்களுக்கும் அடிக்கடி கண்டிக்கின், தலைவியார் கண்டிப்பிற்குச் சிறிதும் மதிப்பில்லாது ஒழியும். குற்றங்களும் குறைவுபடா. இதனால், தலைவியாருக்கும் குழந்தைகளுக்கும் யாதொரு பயனும் ஏற்படாததுமன்றி, இருபாலாருக்கும் மன ஒற்றுமையும் ஏற்படாது. இதற்குச் சில பரிகாரங்கள் உண்டு.

தலைவியார், மாணவர் யாவரையும் கூட்டிப் பொதுச்செய்திகள் சிலவற்றைப் பேசப் புகுங்கால், அவர்களுள் சிலர் புரிந்த தவறுகளையும், அவற்றால் உண்டாகும் தீமைகளையும் பொதுப்பட எடுத்தியம்பின், அவற்றைச் செய்தவர் யாரோ, அவர் உணர்ந்து "நம்

குற்றத்தைத்தான் இவர் கூறுகின்றனர். எங்ஙனமோ அஃது இவருக்குத் தெரிந்துவிட்டது,'' என உணர்ந்து கூடியமட்டும் திருந்துவர். அவர் அதை உணர்ந்தனரா என்பதை அவருடைய முக மாறுபாட்டிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

அவர்களை மறுபடியும் குற்றமிழைக்கில், அக் குழந்தைகளை மட்டும் அழைத்துக் குற்றங்களைப் பொதுப் படச் சொல்லி, "இவைகள் தவறுகளல்லவா? இங்ஙனம் பிழைகள் இழைத்துக்கொண்டே இருப்பின் நீங்கள் நல்ல குழந்தைகள் ஆதல் யாங்ஙனம்? இவற்றை விட்டொழிக்க முயலலே நன்மை,'' என அறிவு புகட்டி விடவமையும்.

மூன்றும் முறையும் பிழைசெய்தால், தனித்தனியாக அழைத்து அவரவர்செய்த பிழைகளை உணர்த்தி அதற்கேற்ற சிறு தண்டனையைத் தரலாம்.

பிழை இயற்றிய பெரிய பிள்ளைகளைச் சிறிய பிள்ளை களின் முன்னிலையில் கண்டித்தல், அத்துணைத் தகுதி யுடையதன்று. ஏனெனில், சிறு பிள்ளைகளுக்குப் பெரிய பிள்ளைகளிடம் இருக்கும் மதிப்புக் குறையும். ஆனால், அவர்கள் குற்றத்திற்குத் தண்டனை கொடுத்திருப்பது மட்டும் சிறுபிள்ளைகளுக்குத் தெரிதல் வேண்டும். இன் றேல், "பெரிய பிள்ளைகளுக்குத் தண்டனை கொடுத்தல் இல்லை. நமக்கே தண்டனை கொடுக்கின்றனர்,'' எனச் சிறுமியர் தவறான எண்ணத்தைக் கொள்வர்.

ஒருவருடைய பொருளை மற்றொருவர் எடுத்தல், இல்லாதனவற்றை இருப்பனவாகப் பொய்யுரைத்தல், வேண்டுமென்றே குற்றமிழைத்தல் முதலியவற்றைக் காணின், அப்போதைக்கப்போதே கண்டித்தல்வேண்டும்.

சிலபோது, சிலர் தவற்றை மற்றவர் முன்னிலையிலேயே கேட்கவேண்டியும் நேரிடும். இன்றியமையாதபோது அங்ஙனம் செய்தலே நன்மை. பிள்ளைகள் தவறிழைக்குங்கால், அவர்கள் செய்தவற்றிலுள்ள குற்றங்களை விளக்கிக் காட்டி, அவர்களையே தப்பிதமென்று உணருமாறு செய்து, தண்டனையையும் அவர்களையே குறிப்பிக்குமாறு விடுதல் ஒருவகையில் நன்மையே. இதனால், அவர்கள் தங்கள் பிழைகளை நன்குணர்வதுமட்டுமேயல்லாமல், அத்தகைய குற்றத்தை அவர்கள் திரும்பவும் செய்யாமலிருத்தற்கும் இடமுண்டாகும். எங்ஙனமாயினும், அவர்களைக் கண்டிக்கப் பெரும்பான்மையும் இன்சொற்களே தேவை. இன்சொற்களினால் உண்டாகும் வெற்றி வன்சொற்களினால் உண்டாதல் இல்லை. இனிமையையும் இன்பத்தையுமே இயல்பாகக் கொண்டவர்களல்லரா இளைஞர்கள்?

இளைஞர்கள் செய்த குற்றங்களைக் கேட்டறியுங்கால், அவர்கள் முன்செய்த பிழைகள் சிலவற்றையும் குறிப்பித்து, "அவற்றையும் தான் தெரிந்துகொண்டிருப்பதாகவும், அடிக்கடி கண்டித்தல் நலமன்று," என விட்டு விட்டதாகவும் அறிவித்தல்வேண்டும். அஃது அவர்களுக்கு, "தலைவியார் எப்போதும் தங்கள்மாட்டுக் கண் வைத்துள்ளார்," என்னும் அச்சத்தைத் தாராநிற்கும். தலைவியார் தரும் தண்டனை, குற்றத்திற்கு மிகுந்தோ குறைந்தோ இராமல், பெரும்பான்மையும் தக்கதாக இருத்தலே நலம். தண்டனை வார்த்தையையே ஐம்பது அல்லது நூறுமுறைகள் எழுதச்செய்தல் அத்துணை நல்லதன்று. தண்டனைகளும் அவர்கள் வாழ்க்கைக்குச் சில நன்மைகளை அளிக்கக்கூடியனவாக இருத்தல் மேன்மை. "கொடுக்க இயலாத சில தண்டனைகளைக்

கொடுப்பேன்,'' எனக்கூறி கொடாமலிருத்தலும், "உங்களை நிலையத்திலிருந்து அனுப்பிவிடுவேன், பாடசாலைத் தலைவியாரிடம் சொல்லித் தண்டனைக்குட் படுத்துவேன்,'' எனச் சிலவற்றைப் பகர்ந்து அங்ஙனம் செய்யாமலிருத்தலும் தகுதியுடையனவாகா. இவற்ருல், குழந்தைகட்குத் தலைவியார் சொற்களில் அசட்டை ஏற்படும்.

சில குழந்தைகளிடம், பிறர்மேல் கோட்சொல்லும் இயல்பு இருக்கும். அஃதற்றவர்கூடத் தம்மேல் ஒருவர் கோட்சொல்லில், அப்பழியைத் தீர்த்துக்கொள்ள இவரும் அவர்மேல் கோள் கூறுவதுண்டு. எங்ஙனமாயினும், ஒருவர்மேல் மற்ருெருவர் சொல்வனவற்றையெல்லாம் அறிவுடைய தலைவியார் நம்பிவிடமாட்டார். இம்முறையில் இரு சாராரையும் நேரில்வைத்துக் கேட்டறியின் அவற்றுள் காற்பங்குகூட உண்மை தேருது. சில போது யாவும் பொய்யாகவே இருத்தலும் உண்டு. ஆதலின், அவற்றின் உண்மை அறிய முயலலே தலைவியாரின் கடமை. அங்ஙனமின்றி, தாம் சொல்வன யாவையும் தலைவியார் எடுத்துக்கொள்கிருர் என்பதைச் சிறுமியர் அறிந்தால், இல்லாத பலவற்றையும் சொல்லிப் பலரையும் துன்பத்திற்குள்ளாக்குவர்.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு" (திருக்குறள்.)

ஒரு குழந்தை அறியாமையினுலோ, தீய பழக்கத்தினுலோ இரண்டொரு குற்றங்களை இயற்றி இருப்பின், பின்பு நிகழும் எக்குற்றமும் அவள்தான் செய்திருப்பாள் என்று மற்ற மாணவிகள் முடிவுசெய்தல் வழக்கம். அச்செயலில் தலைவியார் மிக்க கவனஞ் செலுத்தல்

வேண்டும். பல இயல்பு வாய்ந்த குழந்தைகள் வதியும் நிலையத்தில் ஒரே காலத்தில் சில பொருள்கள் காணுமற் போதலும் உண்டு. அதற்கு, காகம் எடுத்துப்போதல், வரும் வழிகளில் நழுவவிடல், குளிக்குங்கால் நீருடன் கலந்து கால்வாய்களில் அடித்துக்கொண்டு போதல், கல்லூரியில் கவலையீனமாய் வைத்துவிடல் முதலிய பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், குழந்தைகளோ, தங்கள் கவனக்குறைவைச் சொல்வதில்லை. தாங்கள் மிகக் கவனமாயிருந்ததாயும் தங்கள் பெட்டிகளில் வைத்ததாயுமே கூறுவார்கள். அன்றியும், இரண்டொரு பிள்ளைகளிடம் தமக்கு ஐயம் இருப்பதாயும் குறிப்பிடுவதுண்டு. இதை மிக்க கவலைகொண்டு ஆராயின், பெரும்பான்மையும் உண்மை வெளிப்படும். தலைவியார் சிறுவர் வார்த்தைகளை நம்பி ஒரு பிள்ளையை, "நீதான் எடுத்தனை," எனக் கூறல் சிறிதும் தகுதியுடையதன்று. தலைவியாரே அங்ஙனம் பகரின், அச்சிறுமி என்ன செய்ய முடியும்? தான் எடுக்கவில்லை எனச் செப்பிலோ, அதைத் தலைவியார் ஏற்றுக்கொள்ளுதல் இல்லை. உண்மையாகவே அச்சிறுமி எடாதிருப்பின் அவள் நெஞ்சம் எத்துணைத் துன்புறும். இங்ஙனம் வேறொருவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டதை அப்பொருளை எடுத்த சிறுமி அறியின், தான் எடுத்ததை அடியோடு மறைத்துவிடுவாள். பின்பு பொருள் கிடைப்பது அருமையினுமருமையே! எதற்கும் உண்மை காண உழைத்தல் வேண்டும். அத்தகைய பண்புடைய பிள்ளைகள் சிலரை நல்வழிக்குக் கொணரப் பல வழிகளைக் கையாள நேரும். இவற்ருல், பெரும்பான்மையோர் திருந்தி விடுவர். ஆனால், அப்போதும் சிலர் திருந்துதலே இல்லை. இவர்களால்தான்

தலைவிக்கு மிக்க தொல்லை ஏற்படும். இவர்கள் செயலை மற்றப் பிள்ளைகளுக்கு வெளியிடுதலும், இவர்களைக் கண்காணிக்காமல் விட்டுவிடுதலும் கூடாது. நன்முறையில் திருத்தக் கருதுதலே நலம்.

குழந்தைகள் செய்யும் சிறு குற்றங்களையும் பெற்றோரிடம் தெரிவித்தல் ஒருகாலும் தகுதியுடையதன்று. ஏனெனில், தலைவியார் நயமும் பயமுமாகக் கண்டித்தல் போன்று, பெற்றோரில் பெரும்பான்மையோர் கண்டித்தல் இல்லை. தம் குழந்தைகளிடம் உள்ள அன்பினால், அவைகள் பெரும்பிழைகளாகவும் அவர்கட்குப் புலப்படுதலில்லை. அதனால், அவர்கள் அவற்றை மேற்போக்காக விட்டுவிடுகின்றனர். இது பிள்ளைகளுக்கு அச்சமின்மையையும், மேன்மேலும் குற்றங்களைப் புரிய ஊக்கத்தையும் தாரா நிற்கும். இது தலைவியாருக்கு ஏமாற்றத்தை அளிப்பதொன்று. இவ்வாறு சிலமுறை பெற்றோரிடம் கூறுங்கால், அவர்களுக்கும் தலைவியாரிடம் வெறுப்பும் மதிப்பின்மையும் ஏற்படும். சில பெரிய பிழைகளுக்கு வேண்டுமானால், பெற்றோர் உதவியை நாடலாம்.

சிறு குற்றங்களையும் அடிக்கடி பாடசாலைத் தலைவியார் (Principal) இடம் தெரிவித்து, அவருக்குத் தொல்லையையும், குழந்தைகளின் மாட்டு வெறுப்பையும் உண்டாக்குதல் பிழையாகும். அக்குழந்தைகளுக்குப் பல நன்மைகளையும் புரியவேண்டிய பாடசாலைத் தலைவியாருக்கு மாணவிகளின் மாட்டுக் கெட்ட எண்ணத்தை ஊட்டிவிடில் அவர்கள் பெரிய இழப்பையடைய நேரிடும். இவையாவும் தலைவியாரின் வன்மை அறிவு இவற்றின் குறைவுகளை வெளிப்படுத்துவனவாகும்.

மாணவிகள் இயற்றும் சிறு குற்றங்களைத் தலைவியார் அப்போதைக் கப்போது மறந்துவிடுதலே பெருந் தகைமை. இன்றேல், அவர்கள் மாட்டு வெறுப்புத் தோன்றி நாளடைவில் பகையும் ஏற்படும். குழந்தைகளின் இயல்பை அறிந்து அதன்படி ஒழுகுபவராயின், அவர்கள் மாட்டு வெறுப்போ பகையோ கொள்ள யாங்ஙனம் இடந்தரும்? அவர் அகத்தில் இரக்கம் இருத்தல் வேண்டும்! இரக்கம் பிறருக்கு இன்பத்தை அன்றித் துன்பத்தை விளைவியாதன்றே? பெற்றவரையும் உற்றவரையும் விட்டுத் தன்னையே உறவாக அடைந்திருக்கும் குழந்தைகளிடம் கருணை பாராட்டவில்லையேல், அவர்கள் எங்ஙனம் மகிழ்வுடன் இருக்கமுடியும்? சிறு பிள்ளைகளின் உடல் வளர்ச்சிக்கும், அறிவுப் பெருக்கத்திற்கும் மகிழ்வன்றே காரணம்? ஆதலின், மாணவிகளின் முன்னேற்றத்தில் உண்மைக் கருத்துடைய தலைவியார், எடுத்தவற்றிற்கெல்லாம் கடுமையைக் கையாளுதலும், கண்டித்தல் தண்டித்தலுமே, நம்மிடம் குழந்தைகள் அச்சமாக நடந்துகொள்வதற்கும், அடங்கி இருத்தற்கும் கருவிகள் எனக் கருதார்; இன்றியமையாதபோது கண்டித்து, மற்றபோது அன்பு பாராட்டுதலே அம்மாணவிகளைத் திருத்துதற்குத் தக்க திறவுகோலென நினைப்பார்; அத்தகையவரே வெற்றி பெறுவார். அத்தகைய தலைவியாரிடம் மாணவிகளுக்கும் மதிப்பும் அன்பும் அச்சமும் குடிகொண்டிருக்கும். இம்முறை தலைவியார் மாணவர் ஆகிய இருபாலாருக்கும் இன்ப மூட்டுவதாகும்.

---

22. பழைய மாணவிகள்

முன்னர்க் கூறியவாறு ஒருகால் அவணிருந்து கல்விகற்றுச் சென்ற சிறுமியர் பழைய மாணவிகளாவர். அவர்களும் நிலையத்தைத் தம்மில்லம் என்றே சொல்லுவர். மக்கள்நிலையையும், உலகியல் அறிவையும் உய்த்துணரும் பருவத்தைப் பெருத இளமையில், தங்களைக் கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் உருப்படுத்திய நிலையத்தை நினைக்குந்தோறும் அப்பழைய மாணவிகளுக்கு மகிழ்ச்சி பெருகும். சிலபோது, தாங்கள் சிறு வகுப்புகளில் கல்வியின் மேன்மை அறியாது காலங் கழித்ததையும், வேடிக்கை விளையாட்டுகளையே பெரிதும் விரும்பியதையும், அங்ஙனம் செய்தல் தப்பிதம் எனப் புத்திபுகட்டிய பெரிய மாணவிகளிடம் தங்களுக்குண்டான வெறுப்பையும், சிலபோது இனிய சொற்களாலும், சிலபோது கடுஞ்சொற்களாலும் கண்டித்த தலைவியாரிடம் தங்கட்கு ஏற்பட்ட அச்சத்தையும் அவர்கள் சொல்லிச் சொல்லி நகையாடுவார்கள்; தங்களைப் பார்க்கவந்த பெற்ரோர் அன்றிச் சுற்றத்தார் திரும்பிச் செல்லுங்கால் தேம்பித் தேம்பிப் பெரும்பொழுது அழுத தங்கள் இளமையை நினைந்து நினைந்து இரங்குவர். தாங்கள் ஓடி விளையாடின இடங்களும், உண்டு உறங்கின கூடங்களும் தங்கள் கண்ணிற்படுங்கால் பழைய செய்திகள் பல அவர்கள் நினைவில் உதிக்கும். அவருள் பெரும்பாலார், "தங்கள் நிலைய வாழ்க்கையே இன்பவாழ்க்கை என்றும், அத்தகைய சிறந்த வாழ்க்கை இனித் தங்களுக்குண்டாதல் அரிதென்றும்," நினைப்பர். பல சமயங்களில் தங்கள் நினைப்பை வாய்விட்டுச் சொல்வதுமுண்டு.

அவர்கள் பெரிய வகுப்புகளில் படிக்கும்போது, கீழ் வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்த சிறுமியர், பின்னர்ப் பெரியவராய்ப் பல பொறுப்புகளை மேற்கொண்டு வேலைபுரிவதைக் காணுங்கால், அவர்களுக்கு வியப்பைத் தரும். அச்சிறுவருக்கும் தங்களுக்கும் இருந்த ஏற்றத்தாழ்வும், தொடர்பும், தாங்கள் அவர்களுக்கு நல்லறிவு புகட்டி அடக்கி ஆண்ட முறையும், இப்போது அவர்கள் அடைந்திருக்கும் முன்னேற்றமும், அவர்கள் நினைவிற்கு வரும். அப்பழைய மாணவிகளும், அச்சமயம் அவண் வதியும் சிறுமிகளும் தனித்திருந்து பழைய போக்குகளைப் பேசிப்பேசி மகிழ்வார்கள். இங்ஙனம் பழைய பிள்ளைகள் நிலையத்திற்கு வரும்போது இருபகுதியினருக்கும் அளவற்ற இன்பம் ஏற்படும்.

உள்ளூரிலிருப்பவருள் சிலர் திங்களுக்கொரு முறை நிலையத்திற்கு வருவர். படிப்பின் காரணமாகவோ, மணம் புரிந்துகொண்டோ வெளியூர் சென்றவர் நிலையத்திற்கு வர ஆண்டுக் கணக்குகளாகும். வெளியிடங்கட்குச் சென்று தம் உயர்ந்த படிப்பில் வெற்றி பெற்று வந்த மாணவிகள் நிலையத்திற்கு வருங்கால், தலைவியாருக்கும் அந்நிலையச் சிறுமிகளுக்குக்கும் உண்டாகும் களிப்பு அளவிடற்பாலதன்று. மணமங்கையர் மகவுடன் வரும்போதும் பெருமகிழ்வு தோன்றும். ஆயினும், பின்னதைவிட முன்னதே தலைதூக்கி நிற்கும். பொதுவாக அவர்கள் வரவு நிலையத்திற்கே ஓர் ஒளிபோன்று துலங்கும். முன்னையோர் தாங்கள் பிறந்த ஊருக்குச் செல்லுங்கால், நிலைய மாணவிகள் அவர்களுக்கு விருந்தளித்து, வழிக்கும் சில சிற்றுண்டிகளைச் செய்து கொடுப்பார்கள். பின்னையோர் குழந்தைகளுக்கு, முழுக்

காட்டல், மருந்தளித்தல், உணவு ஊட்டல் முதலிய வற்றை நிலையமாணவிகள் மிக்க மகிழ்வுடன் செய் வார்கள். வேண்டாமென மறுப்பினும், அவர்கள் விடுதல் இல்லை. அவர்களுக்கு இஃதொரு விளையாட்டாகவும் பொழுது போக்காகவும் இருக்கும். வேளைக்கு வேளை அவர்களையும் அன்புடனழைத்து உணவிடுவார்கள். இங்ஙனமே அவர்கள் இருக்கும் வரையும் நடைபெறும். அப்பழைய மகளிரோ, தாயார் வீட்டிற்கு வந்த புதல்வி களைப்போன்று, யாதொரு வேலையுமின்றி உல்லாசமாகத் திரிந்து வருவார்கள்.

பழைய பிள்ளைகளுள் சிலர், நிலையப்பிள்ளைகளுக் குத் தேர்வு நடைபெறுங் காலத்தில் நிலையம் போந்து, கல்வியில் அவர்களுக்கு உதவி செய்வதுண்டு. அதனால், பல பிள்ளைகள் பயனடைவார்கள். சில சமயங்களில் இரு சாராரும் சேர்ந்து உல்லாசப் பிரயாணம் செல்வர். அவ்வமயம் மூன்று பங்குச் செலவுகளையும் வேலைகளையும் பழைய பிள்ளைகளே ஏற்றுக்கொண்டு நிலைய மாணவி களை விருந்தினர் போன்று நடத்துவார்கள். அக்கால், நிலைய மாணவிகள், மருவு விருந்துண்ணும் மாப்பிள்ளை வீட்டாரைப் போன்று பழைய மாணவிகளை இது குறை இது குற்றம் எனக்கூறி ஏளனம் செய்வார்கள். இதை ஒரு பெரிய கொண்டாட்டநாள் எனக்கூறல் மிகை யாகாது. அவணிருந்து நிலையம் போதரும் வரையும் அவர்களுக்கு ஒரே களியாட்டந்தான்.

பழைய மாணவிகள், சிறிது உலகியல் அறிவையும் மற்ற இடங்களில் உள்ள நிலைகளையும், தங்கள் இளமை யில் நிலையத்தின் அருமை அறியாதிருந்த இயல்பையும் நன்கு உணர்ந்தவராதலால், அவற்றைப் புதிய சிறுமி

களுக்கு எடுத்தோதி அறிவு புகட்டுவார்கள். இதுவும் பயனைத் தரும். இங்ஙனம் அடிக்கடி உண்டாகும் கூட்டுறவினால் இரு சாராருக்கும் நன்மையே உண்டாகும்.

இன்னும், முன்னர்க் குறிப்பித்தவாறு பழைய பிள்ளைகளின் கொண்டாட்டத்தன்று, பல பழைய மாணவிகள் வந்திருந்து செயல்களைச் செவ்வனே முடிப்பார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் கூடிக்குலாவும் காட்சி காணத்தக்கதாயிருக்கும். அஃதன்றியும், தங்கள் பழைய ஆசிரியர், தலைவியார், மற்ற விருந்தினர்கள் ஆகியவர்களுடன் இருந்து மகிழ்வார்கள். அன்றிரவெல்லாம் அவர்கள் கண்கள் தூக்கங் கொள்வதில்லை. அருமையாகக் கிடைத்த அந்நாளைத் தூக்கத்தில் போக்க அவர்களுக்கு மனம் எழுமா? இரு சாராருக்கும் உண்டாகும் இத்தகைய தொடர்பு ஆண்டில் இரண்டொரு முறையேனும் உண்டாதல் நலமாகும்.

முன்னர்க் கூறியவாறு பழைய மாணவிகள் வருங்கால், நிலையச் சிறுமிகளுக்குண்டாகும் மகிழ்வு அளவிடற்பாலதன்று. மாமியார் வீட்டிற்குச் சென்று தாயார் இல்லத்திற்குப் போதரும் தம் உடன்பிறந்த சகோதரிகளிடம் பாராட்டும் அன்பையே அவர்களிடம் பாராட்டுவர். இரு சாராரும் பிரிந்திருந்த நாட்களில், ஈரிடங்களிலும் நிகழ்ந்த செய்திகள் யாவும் வெளிப்படும். அதனால், இரு பாலாரும் மிக்க மகிழ்ச்சி அடைவர். நிலையக் குழந்தைகள், தாங்கள் வாங்கியிருக்கும் புதிய பொருள்களை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவார்கள். சில சிறுமியர் தம் செலவிலேயே அவர்கட்குச் சிற்றுண்டிகளையும் வாங்கிக்கொடுத்தல் உண்டு. அவர்கட்குப் புதிய பிள்ளைகளை அறிமுகப்படுத்தல்,

பாட்டுப் பாடல் முதலியவற்றில் சிறிது காலம் கழியும். அவ்வமயம் கலாசாலை ஆசிரியரின் போதிப்பு, அவர்தம் செயல்கள் முதலியன அவர்களிடையே உருக்கொண்டெழும்.

பழைய மாணவிகள், வந்தவுடன் தலைவியாரைப் பார்த்துப் பேசியபின்பே, சிறுமிகளிடம் செல்வார்கள். அவ்வமயம் அவர்கள் கல்விப் போக்கையும், உடல் வன்மையையும், குடும்ப நிலையையும் அன்புடன் விசாரித்தறிதல் தலைவியாரின் கடமையாயிருக்கும். இஃது அக்குழந்தைகளுக்கு மனநிறைவை உண்டாக்கும். பழைய பிள்ளைகளுள் சிலர் பொருளை நாடியும், சிலர் வேறு உதவிகளை நாடியும், சிலர் அறிவுரைகளை விரும்பியும் தலைவியாரிடம் வருதல் உண்டு. அவர்கள் நிலையத்தில் இருந்தபோது தமக்குப் பல தொல்லைகளைக் கொடுத்தவர்களாய் இருப்பினும், பரந்த உள்ளம் வாய்ந்த தலைவியார், அவற்றை முற்றும் மறந்து தம்மாலியன்றவரை அவர்களுக்கு உதவி புரிவார்; அதைச் செய்துவிட்டுத் தாம் செய்ததை மிகப் பெருமையுடன் பலரிடமும் சொல்லிக்கொள்ளும் செயலையும் பெருந்தகைமையுடைய தலைவியார் மேற்கொள்ளார்.

23. மாணவிகளின் பிரிவு

உயரிய ஞானிகளுக்கும் பழகியவரை விட்டுப்பிரிதல் துன்பந்தருவதே! உயிர்களுக்கு இவ்வுலகில் இன்பந் தருவன சில உண்டு. அவற்றுள் கூட்டுறவும் ஒன்று. ஒருவருக்குப் பிறரோடு பழகப் பழக அவருடன் சேர்க்கை உண்டாகும். அச்சேர்க்கையே பின்பு ஊன்றிய உறவாக மாறும். இதைத்தான் கூட்டுறவு எனக் கூறுகின்றோம். இக்கூட்டுறவு மக்களுக்குப் பலவாறான நன்மைகளைத் தருவதாகும்; அப்போதைக்கப்போது தத்தமக்கு உண்டாகும் துன்ப நிலைகளைத் தெரிவித்துக் கொள்ளுதற்கும், மனத்தில் தோன்றும் வருத்தங்களை ஆற்றிக்கொள்ளுதற்கும், இன்பத்தைப் பெருக்கிக்கொள்ளுதற்கும் இது பயன்படும்; வயது, கல்வி, குணம், அறிவு முதலிய ஏதாவதொன்றில் ஒத்திருப்பவர்களிடமே இக்கூட்டுறவு நடமாடும். இத்தகைய கூட்டுறவை விட்டுப் பிரிய நேருங்கால், எத்தகையோருக்கும் துன்பந் தோன்றுதல் இயல்புதானே. இக்கூட்டுறவு நிலைய மாணவிகளிடம் மிகவும் ஊன்றிநிற்கும். எங்ஙனம் ஒவ்வோர் ஆண்டும் புதிய பிள்ளைகள் வருகின்றனரோ, அங்ஙனமே ஒவ்வோர் ஆண்டும் படிப்பை முடித்த பழைய பிள்ளைகளும் நிலையத்தை விட்டுப் போதல் வழக்கம். இவ்விரு பாலாருக்கும் வருத்தமே தோன்றும். முந்தியவருக்குப் பெற்றோர் சுற்றத்தினர் முதலியவரை விட்டுவந்த துன்பமும், பிந்தியவருக்கு நிலைய நட்பினரையும், அன்புடைத் தலைவியாரையும் நீங்கிச்செல்லும் துன்பமும் உறுத்துவவாகும். இத்துயரம் அவரவர் பற்றிற்கேற்றவாறு குறைந்தும் மிகுந்தும் காணப்படும்.

இங்ஙனம் பிரிந்து செல்பவர், கல்வியை முடிக்காமல் இடையில் நீங்குபவரும், கல்வியை முடித்து நீங்கு

பவரும் என இரு திறப்படுவர். முந்தியவர் செல்கை பிந்தியவர் செல்கையைப் போன்று அத்துணைத் துன்பத்தையும், சிறப்பையும் பெறுதல் இல்லை. பிந்தியவர் செல்கையில் பல சிறப்புகளுக்கிடையில் துன்பமும் நிலை கொள்ளும். கல்வியை முடித்துச் செல்பவர், தம் புகைப் படத்தை நிலயத்திற்குக் கொடுத்தலும், மற்றக் குழந்தைகளுக்கு விருந்தளித்தலும், அவர் தம் நினைவின்பொருட்டு நிலயத்திற்கு ஏதேனும் ஒரு பொருளைத் தரலும் உண்டு. நிலயத்தின் மற்றச் சிறுமியரோ, அன்றையதினம் நிலயத்தை அழகு படுத்துவர்; பிரிந்து செல்லும் மாணவிகளை, மணப்பெண் போன்று மலரினலும், ஆடை அணிகளாலும் அழகு படுத்துவர். இரண்டு வேளைகளிலும் பெரிய விருந்தும், இரவு சிறந்த நாடகம் முதலிய விளையாடல்களும் நடைபெறும். அஃதன்றியும். செல்பவர் தம் நினைவின்பொருட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறு பொருளை அன்புடன் கொடுப்பர். தலைவியார் செல்பவருக்குச் சில நூல்களைத் தருவதுண்டு. அவ்வமயம், அதற்கு முந்திய ஆண்டுகளில் நிலயத்தை விட்டுச் சென்ற பழைய மாணவிகளும் வந்திருப்பார்கள். இவை யாவும் பிரிந்து செல்லும் மாணவிகளிடம் இருக்கும் அன்பை வெளியிடுதற்பொருட்டே நடைபெறுவனவாகும். இறுதியில் இரு சாராரும் பிரிவாற்றுமையைத் தெரிவித்துக் கொள்வர். அது யாவருக்கும் மிக்க வருத்தத்தைத் தரும். இரு சாராரிலும். பிரிந்துசெல்லும் மாணவிகளின் துயரமே மிகுதிப்பட்டிருக்கும். பிரிந்துசெல்லும் அன்றைக்கு, செல்பவர் இருப்பவர் ஆகிய இரு சாராரும் ஓரே இரைச்சலாக அழத்தொடங்குவர். இக்காட்சி மிக்க வருத்தத்தைத் தரத்தக்கதே! நிலயத்தை விட்டுச்சென்றவர் தமக்கு உற்ற நட்பினர்

கிடைக்குமட்டும் வருத்தமாகவே இருப்பர். "கூடிப் பிரியேல்," என்பது ஔவையார் வாக்கன்றோ!

சில திங்கள்வரையும் இரு சாராருக்கும் கடிதப் போக்குவரவு நடைபெறும். அன்றியும், பிரிந்து சென்ற மாணவிகள் அடிக்கடி நிலையத்திற்கு வந்து இரண்டொருநாள் இருந்து செல்வார்கள். நாள் ஏற ஏறச் சிற்சில குறைந்துகொண்டே வரும். எதையும் மாற்றக் காலமே கருவி யன்றோ? ஆயினும், பழைய பிள்ளைகளுக்கு எப்போதும் நிலையத்தின்மீது பற்றிருக் கத்தான் செய்யும். மற்றப் பிள்ளைகளும் தலைவியாரும் அவர்களிடம் அன்பு பாராட்டல் இன்றியமையாத தாகும். அன்றியும், அவர்கள் சொந்த வீட்டைப் போன்றே இன்புற்றிருக்க இடந்தருதல் நல்லது.

24. வேறுபாடுண்டா?

நீதிபதி, பெருநிலக்கிழார், தாசில்தார் முதலிய செல்வக்குடியில் பிறந்த மாணவிகளுள் சிலரும் நிலையத்தில் இருந்தனர். அவர்களும் மற்றவரைப் போன்றே நடந்து கொள்ளுதல்வேண்டும். விலை உயர்ந்த அணிகளும், ஆடைகளும் நிலையத்திற்குக் கொணர யாருக்கும் இடந்தருதல் இல்லை. சிறப்புநாட்களில் பெற்றோர் ஆடை அணிகளைக் கொணர்ந்து, தம் குழந்தைகளுக்கு அணிவித்து அப்போதே அவற்றைக் கொண்டுபோய் விடவேண்டும்.

"நிலையத்தில் ஏழையர் செல்வர் ஆகிய இரு திறத்தினரையும் எத்தகைய வேறுபாடுமின்றி நடத்தவேண்டும்," என்னும் ஊன்றிய எண்ணத்தினால், சொல்லிலும் செயலிலும் சிறு ஏற்றத் தாழ்வையும் காட்டுதல் இல்லை. அவர்களுள் யார் உதவித் தொகையில் கற்பவர், யார் தமக்குரிய பணத்தில் படிப்பவர் என்பதும் பலருக்குத் தெரியாது. ஊன்றி நோக்குகின்ற சிலரே அதை அறிவர்.

பிணிவாய்ப்பட்டவர், வன்மை குறைந்திருப்பவர், மேல்வகுப்பில் படிப்பவருள் சிலர், இவர்களே தமக்கெனத் தனியாகப் பால் வாங்கிக்கொள்வர். இதுதவிர மற்ற எல்லா உணவும் ஒருவகைத்தே. நிலையத்தில் கல்வி கற்க வருபவர் சிறுமியராதலாலும் வறுமைநிலை செல்வ நிலை இவைகளைப்பற்றி மிகுதியும் தெரிந்துகொள்ளும் வயதற்றவர்களாதலாலும், இப்பிரிவினை, தளிர்போன்ற அவ்விளைஞர் நெஞ்சைப் பெரிதும் புண்படுத்தி அவர்தம் நலத்தையும் ஊக்கத்தையும் குறைத்து விடுமன்றோ? ஆதலின், இச்செயலில் மிக்க கண்ணும் கருத்தும் செலுத்தவேண்டியிருந்தது.

25. இல்லச் சீர்மை அல்லது குடும்பப் பயிற்சி

இறை வழிபாடு: காலை துயில்விட்டெழும்போதும், இரவு படுக்கைக்குச் செல்லும்போதும் அவரவர் தனித் தனியே இருந்து கடவுளைத் தொழுவர்; இருவேளை உணவு காலங்களிலும், யாவரும் ஒருங்கே கடவுளை வணங்கிவிட்டு உண்ணுவர்; காலை மாலைகளில் வழி பாட்டறையில் யாவரும் உட்கார்ந்து, காலை நாயன்மார் ஆழ்வார்கள் பாசுரங்களையும், மாலை கீர்த்தனைகளையும் பாடி இறையைத் தொழுவர். வெள்ளிக்கிழமைதோறும் வழிபாட்டறையில் ஒரு மணிநேரம் பஜனை நடைபெறும். நோன்புகளிலும், கொண்டாட்ட நாட்களிலும் சிறப்பு முறையில் வழிபாடு நடைபெறுதல் மட்டுமேயன்றி, அந்தந்த நாட்களின் உண்மைகளும், புராணக் கதை களும், மேற்கொள்ளவேண்டிய முறைகளும் மாணவி களுக்கு விளக்கிச் சொல்லப்படும்.

காலையில் பெரிய பெண்ணும், மாலையில் சிறிய பெண்ணுமாக வழிபாட்டை நடத்துவர். அம்மகளிர் இரு வேளைகளிலும் வழிபாட்டறையை நன்றுகப் பெருக்கி, சிறிது இடத்தை மெழுகிக் கோலமிட்டு, வழிபாட்டுக் குரிய பாத்திரங்களைத் தூய்மை செய்து, விளக்கேற்றி, தாங்களும் குளித்து வழிபாடு செய்வர். இக்காரியம் ஒவ் வொரு நாளைக்கு ஒவ்வொரு பெண்ணைச் சாரும். உடல் நலமற்றவர்தவிர மற்றயாவரும் வழிபாட்டிற்கு வருவர்; ஒரு கிழமைக்கு ஏறக்குறைய மூன்று பாட்டுகளையோ, ஒரு பதிகத்தையோ திருப்பித் திருப்பிப் பாடுவர். இங் ஙனம் செய்வதனுல் இரண்டு கிழமையில் அவைகள் மனப் பாடமாய்விடும். பழைய பாட்டுகளையும் அப் போதைக்கப்போது பாடுவர். இம்முறையில் பல பாடல் கள் குழந்தைகட்கு மனப்பாடமாயிருந்தன.

பண்ணிசையுடன் பாடத் தெரிந்தவரும், வீணை முதலிய கருவிகளை வாசிக்கக்கூடியவரும் வெள்ளி சனி களில் தங்கள் இன்னிசையினால் மற்றவரையும் இறைவனையும் மகிழ்விப்பர்.

தேர்வுக் காலங்களில் பள்ளிக்குச் செல்லும்போதும் கடவுளை வணங்கிவிட்டுச் செல்வது அவர்கள் வழக்கம்.

உடற்பயிற்சி: காலை ஐந்தரை மணிக்குத் துவங்கிப்பதினைந்து நிமிடங்கள் திறந்த இடத்தில் உடற்பயிற்சி செய்வர். மாலை ஏறக்குறைய ஐந்து மணியிலிருந்து ஆறு மணிவரையும், கிணற்றில் தண்ணீர் முகந்து அவரவர் துணிகளைத் துவைத்துக்கொள்ளல், கோலாட்டம் கும்மி கற்றல், நாட்டியம் பழகுதல், கைவேலை செய்தல், பூஞ் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றல் முதலியன நடைபெறும். சிலபோது ஓடி விளையாடல், பந்தடித்தல், மௌன விளையாட்டு முதலியவைகளும் நிகழும். விளையாட்டின்போது ஏற்படும் ஒலி, சிரிப்பு, கைகொட்டல், ஓடல் ஆகிய இவற்றை அடக்க ஒருவராலும் இயலாது. இவை தங்களைத் தாங்கள் அறியாவகையில் உண்டானவாகும்; இவை அவர்கள் உடல் நலத்திற்கு நன்மையளிப்பனவே. காலை உடற்பயிற்சிக்கு முன்பு ஊற வைத்த கடலை அல்லது பயறு அவர்கட்குக் கொடுக்கப்படும். சனி ஞாயிறுகளில் இச்செயல்கள் சிறிது மிகுதிப்படும். அக்குழந்தைகள் மாடியிலிருந்து இறங்குதல் ஏறுதல் ஆகிய காரியத்தைப் பன்முறை செய்யவேண்டியிருத்தலால், அஃதே ஓர் உடற் பயிற்சியாகும். உடல் நலமற்றவரையும், நெஞ்சுரமற்றவரையும் இக்காரியங்கள் ஒன்றையும் செய்தற்கு விடுதல் இல்லை. சிலர் எப்போதும் விளையாடிக் கொண்டிருக்கவே விரும்புவர்;

சிலர் சிறிதுநேரம் விளையாடுதற்கும் மனங்கொள்ளார். எங்ஙனமாயினும், அந்தந்த நேரத்தில் அவ்வக்காரியங்கள் நடந்தேயாகவேண்டும். தனியிடத்திற்கும் பொது இடத்திற்கும் இதுதானே வேறுபாடு.

ஒழுங்கு: காலையில் ஐந்து மணிக்கே எழுந்திருத்தலும், இரவு பத்து மணிக்குள் படுக்கைக்குப் போதலும், பத்துமணிக்குமேல் ஒரு சிறு ஒலியுமின்றித் தூங்குதலும் அவர்களிடம் நிகழும். உணவிற்காகிய பாத்திரங்களைத் தாமே அலம்பிக் கொள்ளுதல், செய்யவேண்டிய காரியங்களைக் குறித்த காலங்களில் செய்தல், துணிமணிகள் உணவுப்பாத்திரங்கள் முதலியவற்றை வைக்கவேண்டிய இடங்களில் ஒழுங்காக வைத்தல், ஓரிடத்திலிருந்து எடுத்த பொருளை அந்த இடத்திலேயே சேர்த்தல் முதலியவற்றைக் கடைப்பிடிக்கவேண்டுவது அவர்கள் கடமையாகும். வகுப்பறையில் ஒலி செய்யாமலிருந்தாலொழிய அவரவர் பாடத்தை நன்கு மனத்திருத்த முடியாதன்றோ? அன்று ஒரு பாடமும் இல்லாதவர் சிறிது ஒலியை எழுப்பினும், மற்றவர் பார்க்கும் பார்வையும், சொல்லும் இரண்டொரு இரக்கச்சொற்களும் அவர்களை அடக்கிவிடும். வீதியில் செல்லுங்கால் வீண் வார்த்தைகளைப் பேசிக்கொள்ளுதலும், சிரித்தலும், வழியில் காண்பவரிடம் நின்று பேசுதலும் தகுதியுடையன அல்ல என்பதைப் பெரிய பிள்ளைகள் அறிவார்களாதலால், சிறியவரும், புதியவருமான மற்றவரும் அவர்களையே பின்பற்றிச் செல்வர். ஒருவரைக் காண வருபவரிடம் மற்றவர் மிகுந்த நேரம் பேசுதல், அவர்களைப் பார்த்துச் சிரித்தல், அவர்களைக் குறித்துத் தெரிந்தனவும் தெரியாதனவுமான சிலவற்றைச் சொல்லுதல் முதலிய ஒழுங்கீனமான காரியங்களினால், சில துன்பங்

கள் ஏற்படுகின்றமையின், அவற்றை மேற்கொள்ளா திருக்குமாறு வற்புறுத்துதல் உண்டு.

நிலையத்தில் குழந்தைகள் வதியுங்கால் அவர் உறவி னரோ, நட்பினரோ, தெரிந்தவர்களோ அடிக்கடி பார்க்கவருதல் வழக்கம். யார் யார் அவர்களைப் பார்க்க வருவர், யார் வந்தால் அவர்களை வீட்டிற்கு அனுப்ப லாம் என்பதைத் தலைவியார் முதலிலேயே பெற்றோரிட மிருந்து அறிந்துகொள்ளுதல் நல்லது. அம்முறையைத் தலைவியார் கட்டாயம் கடைப்பிடித்தல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் காணவருபவர் இன்னார் என்பதைத் தலைவியார் அடிக்கடி கண்காணித்துக் கொள்ளுதல்வேண்டும். இன்றேல், காண விடுவதி லேயோ, அனுப்புவதிலேயோ சில குற்றங்கள் ஏற்பட லாம். பெற்றோர் தவிர மற்றவரிடம் மிகுதிநேரம் பேச விடுதல் அத்துணை நல்லதன்று. வீண் காலக்கழிவாவது மட்டுமேயன்றி, அதனால் சில துன்பங்களும் நேரலாம். இன்றியமையாமை நேர்ந்தபோதன்றி, மாலை ஆறு மணிக்குமேல் குழந்தைகளைப் பிறர் காணவருதற்கு இடந்தருதல் கூடாது. வந்தவர்கள், அவர்களுக்கெனக் குறித்துள்ள இடந்தவிர மற்ற இடங்களைச் சென்று பார்த்தற்குத் தலைவியாரின் உடன்பாடு பெறல் வேண்டும்.

பெரிய பெண்கள் சிறுவரிடம் அன்புடனும், சிறு பெண்கள் பெரியவரிடம் நன்மதிப்புடனும் நடந்து கொள்ளக் கற்பிக்கப்பட்டது. இயன்ற மட்டும், ஒருவ ரோடொருவர் சண்டை இடுதல்—கொடுமையாகப் பேசிக்கொள்ளல்—ஒருவர் பொருளை அவரைக் கேளா மலே மற்றொருவர் எடுத்தல்—தனக்குத் தொடர்பற்ற காரியங்களிலும் பேச்சிலும் நுழைதல்—பயனற்ற

வார்த்தைகளைப் பேசுதல்—காரணமின்றித் தத்தம் குடும்ப இயல்புகளை மற்றவருடன் சொல்லிக்கொள்ளல்—ஒருவர் குடும்பத்தைப்பற்றி மற்றொருவர் இழிவாகக் கூறுதல்—சிறிதையும் பெரிதாக வளர்த்து வாதமிடல்—ஒருவர்மேல் மற்றொருவர் அடிக்கடி கோள்சொல்லுதல்—ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றிப் புறங் கூறுதல்—வேலை ஆட்களை ஏளனமாகப் பேசுதல்—அவர்களிடம் மிக்க நட்புப்பாராட்டல்—சிறு சொற்களையும் தலைவியாரிடம் கொணர்ந்து அவருக்குத் தொல்லை கொடுத்தல் முதலிய ஒழுங்கற்ற தீய செயல்களில் மாணவிகள் நுழையாவண்ணம் அடிக்கடி அவர்களுக்கு அறிவு புகட்டப்பட்டது.

இம்முறையில், ஒழுங்கான காரியங்களைப் பின்பற்றவும், ஒழுங்கற்ற செயல்களைக் கைவிடவும் நிலையப் பிள்ளைகள் கற்றிருந்தார்கள். இப்பயிற்சி அவர்கள் வாழ்க்கையையே செம்மைப்படுத்துமன்றோ?

நிலையத்தில் ஏற்படும் ஒவ்வொரு நாளின் வரவு செலவுகள், அவண் நடைபெறும் சிறிதும் பெரிதுமான சிறப்பு நாட்கள், மாணவிகளின் பேர்கள், அவர்களுடைய கல்வியின் நிலைகள், அவர்களைக் காண வருபவரைப் பற்றிய அறிவிப்புகள், வீட்டிற்குச் செல்லுதல், திரும்பி வருதல், சிறுமிகளின் வரவு செலவுகள், அவர்கள் வந்து சேர்ந்ததிலிருந்து நிலையத்தைவிட்டுப் போகும்வரை நிகழ்ந்தவைகள் முதலிய பலவற்றிற்கும் ஒழுங்கான குறிப்புகள் நிறைந்த தனித்தனிப் புத்தகங்கள் உண்டு.

உதவி: மக்களாய்ப் பிறந்தவர் தம் காரியத்தை மட்டும் பார்த்துக்கொண்டு போதல் அத்துணைச் சிறப்புடைமை யாகாது. இங்ஙனம் தன்னையே பார்த்துக்

கொண்டுபோகும் தன்மை விலங்குகளிடமும் பறவைகளிடமும்கூடக் காண்கின்றோம். பகுத்தறிவோடுங்கூடிய மக்களாகிய நமக்கோ, ஏதேனும் ஒன்றில் வருந்துகின்றவர்க்கு உதவிசெய்தல் இன்றியமையாத கடமையாகும். இவ்வறச் செயலை மேற்கொள்ளுதற்கு நிலையம் தக்க இடமாகும்.

நிலையத்தில் சிலபோது சில குழந்தைகளுக்கு நோய்கள் உண்டாகும். அவ்வமயம் அவர்களால் தங்கள் சொந்த வேலையையும் செய்துகொள்ள வன்மை இருத்தலில்லை. அவர்கட்கு வேளை தவறாமல் மருந்தும் உணவும் கொடுத்தல், படுக்கை போடுதல், உடைகளை மாற்றிக் கொள்ள உதவிபுரிதல், சிறிது நேரம் அருகில் உட்கார்ந்து ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுதல், பிணி நீங்கிக் குளிக்குங்கால், உடனிருந்து உதவிசெய்தல் முதலியன மற்றப் பெண்களையே சாரும். இக்காரியத்திற்குத் தலைவியாரே முன்னணியில் நிற்கவேண்டும். அப்போதுதான் மற்றக் குழந்தைகளும் உதவி புரிய முன்வருவார்கள். ஒரு சிறுமிக்கு மிகுதியான பாடமோ, கைவேலையோ இருப்பின், அவளால் தன் சொந்த வேலைகளையும் செய்துகொள்ளுதற்கு இயலுவதில்லை. அவ்வமயம் இன்னொருவர் அவளுடைய உண்கலம் அலம்பிவைத்தல், அவள் உடைகளை மடித்துவைத்தல் முதலிய சிறு சிறு வேலைகட்கு உதவிசெய்வர். பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளின் துணிகள், பணம் முதலியவற்றைக் கண்காணித்துக் கொள்ளலும், சிறியவர் பெரியவருக்கு ஓரோவொருகால் இன்றியமையாத வேலைகளைச் செய்தலும் வழக்கம். பணியாளர் நோயுற்றகாலத்தில், முழுவேலையையும் தாங்களே செய்தலும், சிறிது சுகமடைந்தபின்பு சிற்சில

வேலைகளில் உதவி புரிதலும் மாணவிகளின் கடமையாகும்.

ஒருவருக்கு ஏதேனும் மனத்துன்பமோ, நோயோ ஏற்படுங்கால், மற்றவர் அவருக்கு முறையே ஆறுதலோ உதவியோ செய்து அவரைத் தேற்றுவர். இங்ஙனம் நிலையத்தில் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் உதவிகள் பலப்பல. இவற்றுள் சில அறம் என்னும் தலைப்பிலும் வந்துள்ளன. ஆயினும், இங்கு இவற்றை இன்றியமையாது கூறவேண்டியிருத்தலின், இவை சொல்லப்பட்டன.

---

26. நிலையத்தில் நடைபெறும் நிகழ்ச்சி முறைகள்

காலை

1.	துயில்விட்டெழுதல்	5 மணி	
2.	உடற்பயிற்சி	5-30	5-45
3.	கடவுள் வழிபாடு	6	6-15
4.	அருந்துதல் (காபி)	6-20	
5.	படிப்பு	6-40	8-30
6.	உணவு	8-40	9-10
7.	பள்ளிச் செல்கை	9-30	

மாலை

1.	விளையாட்டு	4-30	6
2.	இறை வழிபாடு	6-15	6-30
3.	உணவு	7	7-25
4.	படிப்பு	7-30	9-30
5.	படுக்கைக்குச் செல்லல்	9-45	

வெள்ளிக்கிழமைகளில் இறைவழிபாடு மாலை 7-15 மணி வரையில் நீளும்.

சனிக்கிழமை காலை

1.	துயில்விட்டெழுதல்	5 மணி	
2.	சிற்றுண்டி	7	7-30
3.	எண்ணெய் முழுக்கு	7-35	11 மணி
4.	இறை வழிபாடு	11	11-15
5.	உணவு	12	12-30

மாலை

6.	இளைஞருக்குப் பாடம் கற்பித்தல்	2	3

7.	தலைவியார் பாடம் எடுத்தல்	3	4
8.	பெற்றோர் காணவருதல்	4	6
9.	இறை வழிபாடு	6-30	7

ஞாயிற்றுக்கிழமைகளில் மற்றப் பள்ளி நாட்களைப் போன்றே யாவும் நடைபெறும். ஆனால், சிறு பிள்ளைகளுக்குப் பெரிய பிள்ளைகளும், யாவருக்கும் தலைவியாரும் பாடம் கற்பித்தல், பெற்றோர் காண வருதல் இவைகள் மட்டும் மாறுபடும். அன்று அவர்கள் தமக்குக் குறிப்பித்த இடங்களைத் தூய்மை செய்தல்வேண்டும்.

பண்டிகை, விரதம், கொண்டாட்டங்கள் நடைபெறும் நாட்களில் அதற்கு ஏற்பச் செயல்களும் நேரமும் வேறுபடும்.

நவராத்திரி: (ஒன்பது இரவுத்திருநாள்.) பத்து அல்லது பதினைந்து நாட்கள் விடுமுறைகளில், இறை வழிபாடு உணவு முதலியன ஏறக்குறைய மற்ற நாட்களைப் போன்றே நடைபெறினும், குழந்தைகள் சிற்றுண்டிகள் செய்தல், தலைவியாரிடம் பாடங்கேட்டல், கண்காட்சிச் சாலைகளுக்கோ, வெளியிடங்கட்கோ செல்லுதல் முதலியன மிகுதிப்படும். சிலர், தங்கள் வீடுகட்கும் செல்லுதல் உண்டு. என்றும் ஒரே படித்தாக நடைபெறின், குழந்தைகளுக்கு நிலையத்தினிடம் வெறுப்பு தோன்றுமன்றோ!

தூய்மை: "சுத்தம் சோறுபோடும்," என்னும் ஒரு பழமொழி உண்டு. உடலும், உடையும், உணவும், இடமும் சுற்றுப்புறமுள்ள பொருள்களும் தூயதாக இருக்கவேண்டும் என்பதை யாவரும் அறிவர். அதினும், பலர் வதியும் நிலையங்களில் இதைக் கண்ணுங்

கருத்துமாக நோக்கவேண்டுவது இன்றியமையாத தாகும். பெரிய சமையலாதலால், அங்குத் தூய்மைக் குறைவு ஏற்படுவது இயற்கை. பணியாளரையும், சமையல் இடத்தையும், சமைக்கும் பண்டங்களையும் தலைவியார் அடிக்கடி நோக்கிக்கொள்வார்.

உடல்நலமற்ற சிறுமிகள்தவிர, மற்ற யாவரும் நாடோறும் குளித்துத் துவைத்த ஆடையை உடுப்பர். காலை உணவு உண்பதற்குமுன்பே குளித்துவிடவேண் டும் என்னும் நியதியும் உண்டு. துணிகளை ஒவ்வொரு நாளும் துவைத்தல்வேண்டும். வண்ணானுக்குப் போடும் துணிகளை, அவன் வருமட்டும் தனித்தனியே ஒரு பையிலிட்டு அவரவர்கள் பெட்டிக்கு அருகிலுள்ள சுவரில் தொங்கவிடவேண்டும். அது பார்ப்பதற்கு அழகாகவும், அழுக்குத் துணியினால் ஒருவருக்கும் துன்பமேற்படாமலுமிருக்கும்.

ஒவ்வொரு கிழமையும், மாணவிகள் படுக்கைகளை வெய்யிலில் காயவைத்தல், தத்தம் பெட்டிகள், மேஜைகள், நாற்காலிகள் முதலியவற்றைத் தூயதாக்கல், அவரவர்கட்குக் குறிப்பித்த இடங்களை ஒட்டடை அடித்துப் பெருக்குதல், மேஜையின்மீது விரித்திருக்கும் துணியைத் துவைத்தல், கிருமிகளைக் கொல்லும் மருந்தைத் தெளித்து மெழுகுதல், சாம்பிராணி, சந்தனத்தூள் கந்தகம் முதலியவற்றை நெருப்பிலிட்டு அறைகளிலும் பெரிய கூடங்களிலும் வைத்துப் புகை ஊட்டுதல் முதலியவற்றைச் செய்வர். இது பல சிறு சிறு கிருமிகள் அழிவதற்கு வழியாகும். ஊரில் விஷபேதி, அம்மை முதலியன மிகுதியாகப் பரவி இருக்கும்போது, ஒவ்வொரு நாளும் இந்தப் புகை போடப்படும்.

திங்கட்கொருமுறை எல்லா இடங்களையும் அலம்பு தலும், அவரவர் பெட்டிகளையும் துணிகளையும் வெய்யி லில் காயப்போடுதலும் வழக்கம்.

சமையலறையை ஒவ்வொரு நாளும் அலம்பி வார மொருமுறை ஒட்டடை அடிப்பர்; ஆண்டிற்கு ஒரு முறை வீடு முழுதும் சுண்ணும்பு அடித்தல் வண்ணந் தீட்டுதல் செய்வர்.

சிறுமிகள், அம்மை முதலிய தொற்றுவியாதிகள் உள்ள தம் சுற்றத்தினரைப் பார்த்துவிட்டு வருவரேல், வந்ததும் குளித்து, ஆடையைத் துவைத்து, வெய்யிலில் காயவைத்த பின்பே அவர்கள் மற்றவருடன் கலந்திருப் பார்கள்.

சிரங்கு உள்ளவர் அஃது ஆறு மட்டும் தனியாகவே இருக்கவேண்டும். அவருடைய துணிகள், புத்தகங்கள், உண்கலம், படுக்கை முதலியனவும் வேருகவே வைக்கப் படும். அவர்களுடைய நோய் முற்றும் குணமான பின்பு, அவர் தம் துணிகள் முதலியவற்றை வண்ணு னுக்குப் போடுதலும், மற்றவற்றை இரண்டு மூன்று நாட்கள் வெய்யிலில் உலர்த்தலும் வழக்கம்.

குணங்கள்: நிலையத்தில் வாழும் சிறுமிகளுக்குச் சில நற்குணங்கள் இருப்பது இன்றியமையாததாகும். இன்றேல், பல திறப்பட்ட மக்கள் வாழும் நிலையத்தில் அவர்கள் ஒற்றுமையாக இருத்தற்கு இயலாது. இப் பழக்கம் அவர்களைப் பெரும்பான்மையும் குணவதிக ளாக்கக்கூடும்.

அதிகப் பேச்சு, கோபம், சோம்பல், அடிக்கடி உண்ணுதல், நினைத்த இடங்கட்குச் செல்லுதல், விருப்ப

மானபோது தங்கள் காரியங்களைச் செய்தல் முதலிய வற்றை விலக்குதல் வேண்டும். எதற்கும் பொறுமை கொள்ளுதல், அன்னியரையும் உறவினரைப் போன்றே கருதுதல், தம் பொருளைப் போன்றே பிறர் பொருளையும் பார்த்தல், பிறருக்கு உதவி செய்தல், பெரியவருக்குக் கீழ்ப்படிதல், பணியாளரிடமும் அன்பு பாராட்டல், செல்வர் ஏழைகள் என்னும் வேறுபாடின்றி நடந்து கொள்ளல், வந்தவரை இன்முகத்துடன் வரவேற்றல், பிணியாளருக்குத் தங்களாலான நலமுறைகளைச் செய்தல், யாவரிடமும் இனிமையாகப் பேசுதல், பசி நோய் முதலியவற்றைக் கூடியமட்டும் தாங்குதல், தங்கள் பொருள்களையும், உடலையும் கண்காணிப்பாகப் பார்த்துக்கொள்ளல், நிலையத்திலும் கல்லூரியிலும் ஒற்றுமையாக இருத்தல், கல்லூரி ஆசிரியரிடம் பணிவுடன் நடந்து கொள்ளல், கூடியவரையும் எப்போதும் மெல்லிய குரலுடன் பேசப் பழகுதல் முதலிய பல நற்குணங்களைக் கொள்ளுதல்வேண்டும். இளமையில் பழகும் இப் பழக்கம் அவர்கள் பிற்கால வாழ்க்கைக்கு ஊன்று கோலாக நின்று உதவும் என்பது திண்ணம்.

அட்டிற்றொழில் (சமையல்): கல்வியிலேயே காலங் கடத்தும் மாணவிகளுள் பெரும்பான்மையவர் வீட்டுக் காரியங்களைச் சீர்மைபெற நடத்தும் முறையை அறிதல் இல்லை. அதனால், அவர்களை இல்லக்கிழத்திகளாகக் கொள்ளும் கணவரும், மற்றக் குடும்பத்தினரும் பல துன்பங்களை அடையக் காண்கின்றோம். அவற்றை ஒருவாறு போக்க நிலையத்தில் சில முறைகள் கையாளப் பட்டன. நாடோறும் அவரவர் இருந்து படிக்கும் இடங்களைப் பெருக்கித் தூய்மை செய்துகொள்ளல், புத்தகங்களை அலங்கோலமாகப் போடாமல் ஒழுங்காக

வைத்தல், துணிகளைத் துவைத்து மடித்துப் பெட்டியில் அழகாக அடுக்கிவைத்தல், உணவு நீர் முதலியன உண்ணும் பாத்திரங்களைச் சுத்தமாகத் துலக்கி வைத்துக் கொள்ளல் முதலியவற்றை ஒவ்வொரு மாணவியும் செய்தல்வேண்டும். இவற்றுள் சிலவற்றைத் தூய்மை என்னும் தலைப்பிலும் குறிப்பித்துள்ளோம்.

நாளும் பரிமாறுந்தொழில் மாணவிகளைச் சார்ந்ததே. அவர்கள் நாற்பது ஐம்பது பேருக்கும் ஒரே அளவாகப் பங்கிடுதல்வேண்டும். விருந்து நாட்களிலும் கொண்டாட்டங்களிலும் வந்தவர்களுக்கும், நிலையத்திலுள்ளவர்க்கும் மாணவிகளே பரிமாறுவார்கள். அப்போது சிற்சில பண்டங்களைச் செய்யும் வேலையும் அவர்களைச் சாரும். அக்காரியங்கள் அவர்கட்கு இன்பமாகவே தோன்றின.

அன்றியும், ஒவ்வொரு சனி ஞாயிறுகளிலும் மாலை நான்கு மணிக்குமேல், நிலையத்திலுள்ள பெரிய பெண் ஒருத்தியும் சிறுபெண் ஒருத்தியும், நான்கு பேருக்காகும் விருந்துணவைச் சமைத்து, நிலையத்திலுள்ள வேறு இரு பெண்களை விருந்திற்கழைப்பர். வந்த விருந்தினரை முகமனுரையுடன் வரவேற்று அவருடன் சிறிது போது பேசிய பின்னர் உணவிடுதல் வழக்கம். வந்த விருந்தினருக்கு, வெற்றிலை பாக்கு மலர் கொடுத்தல்வேண்டும். அவர்கள் உண்டபிறகே சமைத்த இருவரும் உணவு உண்பர். சமையலுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, எண்ணெய், நெய், மோர் முதலியன ஈயப்படுவது மட்டுமேயல்லாமல், ஒரு அணா 6 பையும் கொடுக்கப்படும். அக்காசில், காய்கறி, இலை, வெற்றிலைபாக்கு, பூ முதலியன வாங்குவார்கள். ஏழெட்டு வகைக் காய்கறிகள் சுவை

யுடன் சமைத்தல்வேண்டும்; குழம்பு மிளகுநீர் (இரசம்) நான்கு பேருக்கே ஆகுமாறு அளவுடன் வைத்தல்வேண்டும். சிலர், கொடுத்த பணத்தில் இரண்டொரு காசும் மீதம் பிடிப்பர். இச்சமையலின் அளவு, சுவை, காய்கறி வகைகள் முதலியவற்றைப் பார்ப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட பெரிய பெண்ணொருத்தி, அவற்றிலுள்ள குறைவு நிறைவுகளை ஒரு புத்தகத்தில் குறித்து வைப்பாள். உணவின் சுவை கெட்டு முதலியவற்றில் முதன்மை பெற்றவளுக்கு ஆண்டிறுதியில் பரிசளிக்கப்படும்.

விடுமுறைநாட்களில் மாணவிகள் நான்கைந்து பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு சிற்றுண்டியைச் செய்யப் பழகுவர். ஒவ்வொரு கொண்டாட்ட நாட்களிலும் மாணவிகளுள் சிலர், மற்ற மாணவிகள் யாவருக்கும் பரிமாறல்வேண்டும். அவ்வமயங்களில் அவர்கள் மிக்க பொறுமை காட்டுவதுமட்டுமேயல்லாமல், அவர்கள் ஆடையில் சிறு அழுக்கும் படுதல் கூடாது.

இதைத்தான் தற்போது "Basic Training," எனப் பெயரிட்டுச் சில பள்ளிக்கூடங்களில் கற்பிக்கின்றனர்.

முடிவுரை

ஒரு தேசத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ, ஓர் உத்தியோக சாலைக்கோ அந்தந்தக் காரியங்களை வரன் முறையாக நடத்துதற்கு ஒரு தலைவர் இருந்தே ஆக வேண்டும். இன்றேல், பலரும் தலைமைபாராட்டத் தொடங்கிக் காரியங்களைச் சீர்குலையச் செய்வர்.

அத்தகைய தலைவர்நிலை, மிக்க பொறுப்பு வாய்ந்தது. அவருக்கு, அவனுள்ள பலர் பண்புகளையும் நன் குணர்ந்து கொள்ளும் அறிவும், அவரவர் இயல்பிற் கேற்ப நல்லுரைகளைப் புகன்று அவரைத் திருத்தும் பெருந்தகைமையும், யார் எதைக் கூறினும் அவற்றின் உண்மையை ஆராய்ந்தறியும் நுட்பமதியும், பிறர் குற் றங்களைக் கண்டித்தற்கேற்ற காலம் வாய்க்கும்வரை பொறுத்திருக்கும் பொறுமையும், வாயாற் சொல் வனவற்றைச் செயலில் செய்துகாட்டும் உயர் பண் பும், குற்றத்திற்குத் தக்க தண்டனையும், குணத்திற்குத் தக்க பரிசும் ஈயும் அறநிலையும், யாதொரு பயனையும் கருதாது தம் கடமையைத் திருத்தமுறச் செய்யும் நல் லியல்பும், பாவத்திற் கஞ்சும் மனநிலையும், உலகியல் அறிவும், தன்னலங் கருதாத்தகைமையும், கடவுட் சிந்தையும் ஆகிய இன்னண நற்பண்புகள் பலவும் இருத் தல் வேண்டும். இத்தகையவரே உண்மைத் தலைவர் எனக் கூறுதற்குப் பொருத்தமுடையவர். இத்தகைய வரால் நடத்தப்படும் இடங்களே சிறப்புடன் நடை பெறும். அவண் வதியும் மக்களும் நன்னெறியைப் பற்றி ஒழுகுவார்கள்.

இச்சிறப்புகள் பொதுவாக எல்லாத் தலைவருக்கும் இருக்க வேண்டுவனவே. ஆயினும், வயதிலும், அறிவி

லும், கல்வியிலும் குறைந்த இளைஞர்கள் வதியும் நிலையத்திற்குத் தலைமை பூணும் பெரியாருக்கு இப்பண்புகள் இன்றியமையாது இருந்தே ஆகவேண்டும்.

அன்றியும், நிலையத் தலைவியாருக்கு அம்மாணவிகளைத் தம் குழந்தைகளைப் போன்றே கருதும் பரந்த எண்ணம் இருத்தல் நல்லது. அப்போதுதான், அவர்களிடமுற்றும் குற்றங்களைப் பொறுத்து அவர்களை நல்வழிப்படுத்துதற்கு மனமுண்டாகும். செல்வர், வறிஞர், நுண்ணறிவுடையவர், அஃதற்றவர், உயர் குடும்பத்தினர் தாழ் குடும்பத்தினர் ஆகிய யாவரையும் எப்போதும் எதிலும் ஒரே தன்மைத்தாய் நடப்பித்தல் தலைவியாருக்கு இன்றியமையாதது. அங்ஙனமின்றி, ஒருகால் சிலரிடம் நட்புப் பூண்டும், இன்னொருகால் வேறு சிலரிடம் நட்புப் பூண்டும் இருத்தல் மிக்க இழிதகைமையுடையதாகும். சிலர் மற்றவர்மேல் சுமத்தும் குற்றங்களை முற்றும் நம்பி, சிறிதும் ஆராயாது கோள் சாட்டப்பட்டவரைத் தண்டித்தலும், குற்றத்திற்கு மேற்பட்டனவும், குழந்தைகளால் தாங்க முடியாதனவுமான தண்டனைகளைத் தருதலும் தலைவியாரின் பெருந்தகைமைக்கும் நடுநிலைக்கும் ஏலா. சிறியவற்றிற்கும் சினங்கொண்டு வாயில் வந்தபடி தீய சொற்களைச் சொல்லலும், சிறுமிகள்முன் இயம்பத்தகாத நாகரிகமற்ற வார்த்தைகளையும், செயல்களையும் மேற்கொள்வதும் தலைவியாரின் ஒழுக்கமுறைக்கு ஏற்றனவாகா. ஈண்டு,

> "ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
> வழுக்கியும் வாயால் சொலல்"

என்னும், திருவள்ளுவர் வாக்கை நோக்குக.

தலைவியார் சிறுமியரைக்காட்டிலும், பெரியவரும், கல்வியிலும் அறிவிலும், முதிர்ந்தவருமாயிருப்பினும்,

பேச்சிலும், செயலிலும் அவர்களிடம் நன்மதிப்பாக (மரியாதையாக)வே நடந்துகொள்ள வேண்டும். மதிப்புக் கொடுத்தே மதிப்புப் பெறவேண்டுமன்றோ? இன்றேல், அவர் கல்விக்குத்தான் பயன் யாது? எதிரொலிக் கல்லின் அருகில் நின்று நல்லன தீயனவற்றுள் எவற்றைக் கூறுகின்றோமோ, அவைதாமே நம் காதில் வந்து விழும். கிளிகளிடமிருந்து நல் வார்த்தைகளைக் கேட்க விரும்பின், அவைகளுக்குக் கற்பிப்பன நல்ல சொற்களாக வல்லவா இருத்தல்வேண்டும்! அங்ஙனமே, இளைஞரிடமிருந்து நாம் நல்லன எதிர்நோக்கின், நம் சொற்களும் செயல்களும் தூய்மை உடையனவாகவே அமைய வேண்டும்.

எந்தக் காரணத்தினாலும் தலைவியார், சிறுமியரிடமிருந்தும், அவர் தம் உறவினரிடமிருந்தும் சிறு பயனையும் எதிர்நோக்குதல் கூடாது; அதிலும், பொருளைப் பற்றிய அளவில் மிகுந்த கண்டிப்பாய் இருத்தல்வேண்டும். பெற்றோருள் சிலர் தம் குழந்தைகள் நிலையத்தில் சேர்ந்தவுடன் தலைவியாருக்குச் சில பண்டங்களையும், பழங்களையும் கொணர்ந்து கொடுக்கக் கூடும். அவர்கள் எத்துணைப் பெரியவர்களாயிருப்பினும், அவற்றைத் தலைவியார் அடியோடு மறுத்தே ஆகவேண்டும். இன்றேல், தலைவியார் பல பழிப்புச் சொற்களை ஏற்கவேண்டிவரும்.

இளம் பெண்கள், அடிக்கடி படக்காட்சிக்கும், கடைகளுக்கும், புகைப்படமெடுக்கும் இடங்கட்கும் பெரியவர் துணையின்றிச் செல்லல் நம் நாட்டு வழக்கத்திற்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்றதன்று. இப்பழக்கம் அவர்களைப் பெரிதும் கெடுப்பதாகும். அன்றியும், இது

சிறுமிகளின் பணச்செட்டு, அடக்கம் ஒழுக்கங்களைக் கெடுத்து, அவர்கள் வாழ்க்கையைப் பாழ்படுத்திவிடும்.

அப்போதைக்கப்போது சிறு பிள்ளைகளையும் பெரிய பிள்ளைகளையும் தனித்தனியே அழைத்து, ஒரு பகுதியினர் மற்றொரு பகுதியினரிடம் கொண்டுள்ள கருத்துக்களையும், பணியாளர் போக்குகளையும், நிலையத்திலிருக்கும் நன்மை தீமைகளையும், எப்போதும் மகிழ்வுடனிருக்க அவர்கள் தேடும் வழிகளையும் தலைவியார் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் நல்லது. இச்செயலால் தலைவியார் அறிந்துகொள்ளும் செய்திகள் பலவாகும். ஆயினும், ஒவ்வொருவர் எண்ணத்தின்படியே தலைக்கட்டல் கூடியதன்று. அவற்றுள் பலர் கருத்துகள் எவையோ அவற்றை மேற்கொள்ளலாம். ஒரோவொருகால் அவர்களுடனிருந்து விளையாடுதலும், விளையாட்டுப் பேச்சுகளைப் பேசுதலும் செய்யலாம். இவைகளும் அவர்களுக்கு இன்பத்தை ஊட்டுவனவே.

குழந்தைகள், தங்கள் குடும்பத்துன்பங்களையும், தம்முடன் பிறந்தவர்களின் வேறுபாட்டினையும் தம்மிடம் சொல்லிக்கொள்ளக்கூடிய அத்துணை எளிமையும் அன்பும் தலைவியாரிடம் காணப்படல் வேண்டும். அவ்வமயம் அவர்களுக்கு ஆறுதல் பகர்தல் மட்டுமேயல்லாமல், 'அவற்றைப் போக்க ஏதேனும் வழியுண்டா,' என்பதையும் தலைவியார் நோக்குதல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவியின் குடும்பநிலை செல்வநிலை முதலியவற்றைத் தலைவியார் தெரிந்துகொண்டிருத்தல் நன்மையே. ஆயினும், என்ன காரணம் பற்றியும் ஒரு மாணவியின் நிலைகளை இன்னொரு மாணவியிடம் சொல்லுதல் தகுதியுடையதன்று. சிலவற்றை அதற்குரிய

மாணவியிடம் கேட்டலும் கூடாது. ஏன்? அவள் சிறுமியாதலால், தம் குடும்பத்தைப் பற்றியன சில அவளுக்குத் தெரியாமலுமிருக்கலாம். ஒருகால் தெரிந்திருப்பினும், அவை பிறர் அறியலாகா நலமற்றவைகளாயிருப்பின், அவற்றைத் தலைவியார் அறிந்துகொண்டிருப்பதற்காக அவள் இள நெஞ்சம் மிக வருந்தும். சிறுமிகள் யாவருடைய மறைவான செய்திகளுக்கும் தலைவியாரின் நெஞ்சம் ஓர் இருப்புப் பெட்டகமெனத் திகழ்தல் வேண்டும். அவை ஒரு காலத்திற்குப் பயன்படலாம்.

மாணவியர், ஒவ்வொரு பொருளிலும் தத்தம் பெயரைப் பொறித்து வைக்குமாறு செய்ய வேண்டும். அவர்கள் வரவு செலவு கணக்குகளை மாதமொருமுறை தலைவியார் பார்த்து வருதல் நல்லது.

மாணவிகள் செய்யும் காரியங்களைத் தலைவியார் பல வழிகளிலும் கூர்ந்து நோக்கி வருதல் தேவை. அப்போதே ஒவ்வொருவர் குணங்களும் அவருக்கு நன்கு புலனாகும்.

நிலையத்திலுள்ள மாணவிகளுக்கு வரும் கடிதங்களைத் தலைவியார் பார்த்தே கொடுத்தல் வேண்டும் என்னும் ஒரு கட்டுப்பாடு உண்டு. ஆயினும். அக்கடிதங்களை வேறு மாணவிகளிடம் கொடுத்துப் படிக்கச் செய்தலும், அதில் உள்ள அவர்கள் குடும்பக் குறைவுகளைக் கொண்டு அவர்களை இழிவாகப் பேசுதலும் தலைவியாருக்குப் பெருந்தவறாகும்.

நிலையம் வீடுமன்று, பாடசாலையுமன்று. இவ்விரண்டிற்கும் இடைப்பட்டது. இங்கு, சில வீடுகளைப் போன்று குழந்தைகளை விருப்பப்படி விடுதலும், சில

பாடசாலைகளைப் போன்று மிகக் கண்டித்தலும் கூடாது. மாணவிகள் இளைஞராயும், முழு நேரத்தையும் நிலையத்திலேயே கழிக்கவேண்டியவராயும் இருத்தலின், எழுதல், நடத்தல், இருத்தல், பேசல், சிரித்தல் முதலிய சிறு சிறு காரியத்திற்கும், கோட்பாடு என உரைக்கில், கடின விலங்கால் கட்டுண்டு சிறையிலிருப்பதாக வன்றோ அவர்கட்குத் தோன்றும்? அறச்சாலையைச் சிறைச்சாலை ஆக்குதல் நலமோ? இம்முறையில் அவர்களுக்கு மகிழ்வோ இன்பமோ தோன்றுதல் யாங்ஙனம்? அவர்கள் உடலும், உயிரும், அறிவும் வளர்வது எவ்வாறு? அவர்களிடம் ஒழுங்கீனமன்றோ உருக்கொள்ளும்! அவர்களுக்கு உரிமையைத் தாராது கட்டுப்படுத்தி வைக்க வைக்க அவர்கள் தலைவியாருக்குத் தெரியாமல் சில செயற்கைமுறையில் நுழையத்தான் செய்வார்கள். இதனால், சிறுமியருக்கு இளமையிலேயே வஞ்சனை, கள்ளத்தனம் முதலியன பதிந்து, அவர்கள் பிற்கால வாழ்க்கையைப் பாழ்படுத்தும்.

நிலையத்தில் இயல்பில் வேறுபட்ட பலர் வதிவதாலும், நேரந்தவறாது காரியங்கள் நடைபெறவேண்டியிருத்தலாலும் பெரும்பான்மையும் மாணவிகள் அவண் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வரன் முறைப்படியே நடக்கத்தான் நேரிடும். சிலபோது சிலர், சிலவற்றில் தவறுங்கால் அவற்றால் ஏற்படும் துன்பங்களை அவர்கட்கு எடுத்துக் காட்டின், கூடிய மட்டும் தாங்களே அவற்றிலிருந்து திருந்திக்கொள்ள முயல்வார்கள். அவற்றையே "கோட்பாடு கோட்பாடு," எனக் கடினமாகக் கூறின், அவர்கள் மனம் வேறுபட்டு, அச்சத்தினாலேயே பெரும்பான்மையும் தவறி நடக்க இடமுண்டாகும். தவறுதலும், மறத்

தலும் மக்கள் இயற்கை. அதனினும், சிறுமியரிடம் இவை எளிதில் குடிபுகும்.

ஆதலின், தலைவியார் எத்துணை மட்டும் மாணவிகளை இயற்கை முறையிலும் அன்பு வழியிலும் நடத்துகின்றாரோ, அத்துணையும் இருபாலார் மனத்திற்கும் அமைதியும் இன்பமும் உண்டாகும். அவற்றிலிருந்து மாறுபடில் இரு சாராருக்கும் அஃதொரு நரகவீடாகவே தோன்றும்.

ஒவ்வொரு மாணவியின் உடல் நலம், கல்விப் பெருக்கு, அறிவு நிலை, நற்பண்பு முதலியன தம்மைச் சார்ந்தே உள்ளன என்னும் உண்மையை நன்குணர்ந்த தலைவியார், ஒருகாலும் தம் கடமையிலிருந்து பிறழார் என்பது ஒருதலை.

நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிகள் சில

கள்ளன் வந்ததாய்க் கலக்கமுற்றது

ஒருநாள் இரவு ஒன்பதரை மணி இருக்கும். சிலர் படுக்கைக்குச் சென்றனர்; சிலர் படித்துக் கொண்டிருந்தனர். யான் என் அறையில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தேன். சமயற்காரரும் தூங்கச்செல்லும் நேரம். அவ்வமயம் பெரிய மாணவி ஒருத்தி, சிறுநீர் கழித்தற்பொருட்டு, நடுக்கட்டிற்குச் சென்று தூக்க மிகுதியினால், விரைவுடன் திரும்பிவந்து படுக்கையில் படுத்துக்கொண்டாள். அவள் திரும்பும்போது மூன்றாங் கட்டிலிருந்து வந்த சமையற்காரி, அம்மாணவியின் வெள்ளைப்புடைவையையும், அவள் செல்லும் விரைவையும் பார்த்துக் கள்ளனென ஐயங்கொண்டு அவளைப் பின்பற்றினாள்; ஆனால், அவள் படுக்கையில் படுத்துக்கொண்டதைச் சமையற்காரி பார்க்கவில்லை. ஆதலின், யாரோ ஒரு திருடன் வந்து வீட்டிற் புகுந்துகொண்டானென்றும், அவன் தனக்குப் பயந்து எங்கோ ஓடி ஒளிந்து கொண்டானென்றும் அவள் தீர்மானித்துக்கொண்டாள்; அந்த அச்சத்தினால் அவள், "திருடன் திருடன்," எனக் கத்தினாள். பக்கத்தல் கீழே உறங்கிக்கொண்டிருந்த பிள்ளைகளுள் பெரும்பாலாரை விழிக்கச் செய்தது. அவர்களும் "திருடன் திருடன்," எனக் கத்திக்கொண்டே மாடிக்கு வந்தார்கள். மாடியில் இருந்தவர்களும் அவர்களுடன் சேர்ந்து அவ்வாறே கத்திக்கொண்டே என் அறைக்கு ஓடிவந்தார்கள். ஆனால், திருடனைப் பார்த்தவர் ஒருவருமில்லை. திடீரென உண்டான இக்கத்துதலும், அப்பிள்ளைகள் ஓடிவரும் அலங்கோலமும் எனக்கு அச்சத்தையும்

வியப்பையும் விளைவித்தன. 'யான் என்ன?,' என்று அவர்களைக் கேட்டபோது, "திருடன் திருடன்," என்னும் வார்த்தைகள் தவிர வேறொன்றும் அவர்கள் வாயிலிருந்து வெளிவந்திலது. வேறேதேனும் அவர்கட்குத் தெரிந்திருந்தால்தானே சொல்லப்போகின்றார்கள் !

அங்ஙனம் ஓடிவந்தவர் என் அறையில் நுழைந்து கதவை அடைத்துவிட்டனர். யான் வெளிச்சென்று பார்த்தற்கும் விட்டாரில்லை. சிலர் கதவை அழுத்திக் கொண்டு, "ஐயோ திருடர்கள் வந்துள்ளார்கள். நீங்கள் வெளியே போகக்கூடாது. உங்களை அடித்துவிடுவார்கள்," எனக் கத்துகின்றனர். தூக்கத்தில் இருக்கும் சில சிறு குழந்தைகளோ கீழிடத்திலேயே இருக்கிறார்கள். அவர்களை என்ன தடுத்தும் எனக்கு வழிவிடுவதாய்க் காணவில்லை. என்ன செய்வதென்றும் எனக்குத் தோன்றவில்லை ! என் மனமோ வெளியே சென்று பார்க்கத் துடிக்கிறது ! உடல் விரைகின்றது ! கீழே என்ன நடைபெறுகிறதெனத் தெரிந்துகொள்ளாமல் எங்ஙனம் யான் உள்ளே இருக்கமுடியும் ? அவர்கள் வார்த்தைகளினால், "சில கொடியோர் தடிகளுடன் உள்ளே வந்துவிட்டனரோ !" என நினைக்கவும் இடந்தந்தது. இரண்டு கைகளாலும் கதவினிடம் இருந்த இருவரை இழுத்துவிட்டு நான் வெளியே செல்ல முயன்றேன். அதற்குள் நான்குபேர் விரைந்துவந்து அக்கதவை அடைத்துக் கொண்டனர். கோபித்தும் பார்த்தேன் ! "நீங்கள் மிக்க கோழைகள், உங்களுக்கு அறிவே இல்லை. எனக்கு வழி விடுவதற்கென்ன ? இந்த அதிகப்பிரசங்கித்தனமான காரியத்தைச் செய்ய உங்களுக்கு யார் கற்பித்தது ?" எனப் பல சினச் சொற்களையும் கூறினேன். அவற்றுள் ஒன்றும் பயன்பட்டிலது. அவ்வமயம் ஒன்றும் செய்ய

இயலாமையின் யாரையேனும் உதவிக்கு அழைத்தலே நலம் என எனக்குத் தோன்றிற்று.

என் அறையில் பின்புறத்திற்குப் போகும் வழி ஒன்று உண்டு. அப்பின்புறமிருந்து பார்க்கில் எதிர் வீடு நன்ருகத் தெரியும். யான் அவ்வழியே கீழிறங்கிச் செல்லாததற்குக் காரணம், பின்புறக் கதவை இரவு ஒன்பது மணிக்கே பூட்டிவிடுவர். அத்திறவுகோல் முன்புறக் கூடத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும். அதைச் சென்று எடுப்பதற்கும் வழி இல்லை. இங்ஙனம் எதற்கும் வசதி இல்லாமையால், யான் என் அறையிலிருந்துகொண்டே, "யாரோ திருடர் உள் நுழைந்துள்ளனர். தயவு செய்து உதவிக்கு வாருங்கள்," என உரக்கக்கூவினேன். உடனே சிலர் முன்புறமாய் ஓடிவந்தனர். அவர்களைப் பார்த்து முன் தெருவில் இருந்த சிலரும் உள் நுழைந்தனர். அப்போதுதான் என் அறையிலிருந்த மாணவிகள் எனக்கு வழி விட்டார்கள். யானும் கீழே இறங்கிச் சென்றேன். வந்தவர்கள் ஒவ்வோர் அறையையும் ஒவ்வொரு மூலையையும், பரண்களையும் "நிலையத்தில் தேடாது விடப்பட்ட இடம் ஒன்றும் இல்லை", என்னுமாறு ஆராய்ந்தார்கள். ஒருவரும் காணப்படவில்லை. ஆதலால், அவர்கள், "ஒருவருமில்லை எதையோ கண்டு சிறுமியர் மயங்கி இருப்பர். நடு இரவில் மறுபடியும் ஏதேனும் கலக்கமுண்டாயின் தெரிவியுங்கள் நாங்கள் வருகிருேம்," எனக் கூறிச் சென்ருர்கள். அவ்வமயம் வந்தவர்களுள் யாரோ ஒருவன் ஒரு சிறுமியின் விலையுயர்ந்த காஷ்மீரச் சால்வை ஒன்றைக் களவாடிச் சென்ருன். அதுதான் அவ் வாரவாரத்தின் பயன்.

அப்போதும் சில மாணவிகளுக்கிருந்த கலக்கம் முற்றும் நீங்கவில்லை. யான் மட்டும் இது வீணுய் உண்

டான கலக்கமே, என நன்ருய்த் தெரிந்துகொண்டேன். ஆயினும், அதன் காரணம் எனக்குப் புலப்படவில்லை. அதை அறிதற்கும், சிறுமிகளுக்கிருக்கும் ஐயத்தை நீக்குதற்கும் "அச் சத்தம் முதன்முதலில் யாரிடமிருந்து தோன்றியது," என விசாரிக்கப் புகுந்தபோது, "அவளைப் பார்த்து யான் கத்தினேன்; அவளைப் பார்த்து யான் கத்தினேன்," என ஒருவரிலிருந்து ஒருவரிடம் தொடர்ந்து கொண்டே சென்ற அஃது, இறுதியில் சமையற்காரியிடம் போய்நின்றது. அவளை வினவியபோது "வெள்ளைத்துணி கட்டிக்கொண்டிருந்த யாரோ ஒருவன் நடுக்கட்டிலிருந்து விரைந்து சென்றதாயும், அங்கு வந்து பார்த்தபோது அவன் காணுது போனதாயும், சொன்னுள். "அந்தச் சமயத்தில் யாரேனும் நடுக்கட்டிற்குச் சென்றுவந்தீரா?" எனக் கேட்க, முற்குறிப்பிட்ட மாணவி அச் சத்தம் கிளம்புதற்கு ஒரு விநாடியின் முன்பே தான் நடுக்கட்டிற்குச் சென்று தூக்கத்தினுல் விரைந்துவந்து படுக்கையில் படுத்துக்கொண்டதாய்ச் செப்பினுள். "அவள் உடுத்துக்கொண்டிருந்தது வெள்ளைப்புடவை," என முன்னரே தெரிவித்துள்ளேன். இதனுல், இக்கலக்கத் தோற்றத்திற்குக் காரணம் அப் பெண்ணே எனக் குழந்தைகளுக்கும், எனக்கும் நன்கு புலனுயிற்று. பின்புதான் அவர்கள் அச்சம் நீங்கியது. ஆயினும், வேலைக்காரி மட்டும் தான் செய்தது வெறும் ஆரவாரமென்பதை ஒப்புக்கொள்ளவே இல்லை. "தான் பார்த்தது ஆண்மகனே என்றும், அவன் ஒருகால் ஓடிவிட்டிருக்கக்கூடும்," என்றும்தான் இறுதிமட்டும் கூறினுள். வந்தவன் அங்ஙனம் ஓடுதற்கு வழியில்லாமையினுலும், அதற்குப்பிறகு கள்ளன் என்ற கனவுகூட ஏற்படாமையினுலும், அவள் தன் அறியாமையினுல் உண்

டாக்கிய ஆரவாரத்திற்கு நாணியே நாங்கள் தக்க காரணங்களுடன் கூறியவற்றிலும் சிறிதும் நம்பிக்கை கொள்ளாதொழிந்தாள்,'' எனத் தீர்மானிக்கவேண்டி வந்தது. இஃதொரு வீணான கலக்கமே!

உ. கிளை ஒடிந்ததனால் கேடு

விடுமுறையில் வீடு செல்லாமல் நிலையத்திலிருக்கும் சிறுமிகளை எங்கேனும் அழைத்துச் சென்று அவர்களுக்கு இன்பமூட்டுவது வழக்கம். சிறுமியருக்கு எப்போதும் ஓரே இடத்தில் இருப்பின் வெறுப்புத் தோன்றுமன்றோ! ஆகவே 1927-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் விடுமுறையில் சைதாப்பேட்டை விலங்குமருத்துவ சாலைக்கு அருகிலிருந்த எங்கள் உறவினர் மாளிகை ஒன்றில் தங்கி இருந்தோம். அங்கிருந்தே சுற்றுப்புறங்களிலுள்ள பல இடங்களுக்குச் சென்று பார்த்து வந்தோம். அவ்வில்லத்தின் சுற்றிலும் பெரிய மரங்களும், பூஞ்செடிகளும், வெளியிடங்களும் இருந்தன. அவ்விடம் சிறுமிகள் இன்பமாய் உலவுதற்கும், படித்தற்கும் மிக்க வசதியாயிருந்தது. அவர்கள் அங்கு மிக்க மகிழ்வுடன் காலங்கழித்தார்கள்.

ஒரு நாள் மாலை பிள்ளைகளும் யானும் அதிக மக்கள் போக்குவரவற்ற ஒரு தனி இடத்திற்குச் சென்றோம். சிறுமிகள் அவண் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் ஒரு மர நிழலில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பின்பு அச்சிறுமிகள் சிறிது தொலைவில் சென்று பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தார்கள். ஒரு பெண் மட்டும் யானிருந்த

மரத்தின் கிளையைப் பிடித்து ஊசலாடிக்கொண்டிருந்தாள். யான் பார்த்தவுடன் கிளை ஒடியப் போகிறது, அதை விட்டுவிடு எனக் கூறினேன். கூறி வாய் மூடுவதற்குள் அக்கிளை முறிந்து அவள் துடையின்மேல் விழுந்தது. அதனால் கீழே உட்கார்ந்து கொண்டாள். அதைத் தள்ளிவிட்டு எழுந்திருக்கவோ அவளால் முடியவில்லை. என்றாலும் அக்கிளையை நகர்த்தவோ, தூக்கவோ இயலவில்லை. அருகிலோ ஒருவருமில்லை. அப்பெண்ணோ சுமை தாங்கமுடியாமல் கத்துகிறாள்; காலை அசைத்துக்கொண்டே இருக்கிறாள். "இங்ஙனமே இருந்தால் கால் நசுங்கிவிடுமே," என்னும் அச்சம் எனக்குண்டாயிற்று. என் செய்வேன்! என் மனம் துடித்தது! உடல் நடுங்கிற்று! சுற்றும் முற்றும் பார்த்தேன். இறைவனருளால் அச்சமயம் சிறிது தொலைவில் யாரோ ஒருவர் போய்க்கொண்டிருந்தார். அவரைச் சத்தமிட்டழைத்தேன். என் நடுக்கக் குரலைக் கேட்ட அவர் 'ஏதோ ஆபத்து' என ஓடிவந்தார். அதைப் பார்த்தவுடன் அவருக்கும் கை நடுங்கிற்று. அவ்விளங் காளையாலும் அக்கிளையைத் தூக்கமுடியவில்லை. பின்பு மிக்க துன்பத்துடன் அதைச் சிறிது உயர்த்தினார். உடனே யான் அப்பிள்ளையை அங்கிருந்து நகர்த்தினேன். நற்காலமாக அம்மாணவிக்குக் கடுமையான ஊறு ஒன்றும் நேரவில்லை. பாதத்திலும் தொடையிலுமே சிறிது அடிபட்டது. தக்க சிகிச்சையினால் ஒரு வாரத்தில் நலம் ஏற்பட்டது.

௲. ஆமணக்கு விதைகளின் அரியசெயல்

1929-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் விடுமுறையில் சில சிறுமிகள் நிலையத்திலேயே இருந்தனர். விடுமுறையின்போது நிலையத்தில் இருக்கும் பிள்ளைகள் குறைந்தது மூன்று மணி நேரமாயினும் பொதுப் பொருள்கள், கணக்குகள், அவரவர்கட்குக் கடினமாயிருக்கும் பாடங்கள் முதலியவற்றைப் படிக்க வேண்டுமென ஏற்பாடு செய்தல் உண்டு. இது தவருமல் நடைபெறுகின்றதா? என்று சிறிய பிள்ளைகளைப் பெரிய பிள்ளைகளும், பெரிய பிள்ளைகளை யானும் நாடோறும் கவனித்துக்கொள்வது வழக்கம். அதனுல் பல சிறுமியர் பயனடைவர்; மற்ற நேரத்தை ஆடல், பாடல், கதை சொல்லல் முதலியவற்றில் கழிப்பர்.

அவ்விடுமுறையில் சிலர் கல்லூரியிலிருந்த ஆமணக்கு விதைகளைக் கொண்டு வந்து விளையாடிக்கொண்டிருந்தனர். ஒருநாள் இவ்விளையாட்டே வினையாக முடிந்தது: ஒரு மாணவி ஒரு விதையை நறுக்கி அதன் பருப்பைத் தின்று பார்த்தாள், அது மிக்க சுவையாயிருந்தமையின், அதை மற்றவரிடமும் கூறினுள். ஒருவர்பின் ஒருவராய் அவற்றை உடைக்கவும் தின்னவும் தொடங்கினர். யாவரும் ஏறக்குறைய பத்து வயதிற் குட்பட்டவரே. அவர்தம் இளமையும், நன்மை தீமை அறியாத நிலையும் அவர்களை அங்ஙனம் செய்யத் தூண்டின. பெரிய மாணவிகள் ஒருவரும் அவண் இல்லை. அஃதுண்ட இரண்டு மூன்று மணி நேரங் கழித்து, யாவருக்கும் வாயால் எடுக்கவும் வயிற்ருல் போகவும் தொடங்கிற்று. இரண்டு மூன்று முறை வரையும் அஃது அவர்களோடு நின்றிருந்தது. பின்பு பெரிய மாணவிகள் அறிந்தார்கள்.

"இங்ஙனம் யாவருக்கும் ஒரே காலத்தில் நேரக் காரணம் யாது?" என அவர்கள் விசாரிக்கவே உண்மை வெளிப்பட்டது. அதற்குள் பல முறை அவர்கள் வாயா லெடுத்தார்கள். அம்மாணவிகளுக்கு என்ன செய்வ தென்று தோன்றவில்லை. அவ்வமயம் நான் 103° டிக்ரி காய்ச்சலோடு படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தேன். பெரியவருள் தெலுகு மாணவி ஒருத்தி, மிக்க விரை வுடன் என்னிடம் அழுதுகொண்டே ஓடிவந்து, "ஐயோ! அக்கா சின்ன பில்லலந்தரு சச்சி போவுசுன்னரு, மனமு ஏமி சேயுதுமு," எனக் குழறிக் குழறிச் சொன்னள். அதன் பொருள் இன்னதென எனக்குப் புலனாயிற்றில்லை. அப்போதே இன்னொரு சிறுமி ஓடிவந்து செய்திகளை விளக்கமாய்ச் சொன்னள். அதைக் கேட்டவுடன் எனக்கு இடிவிழுந்தது போலாயிற்று! என் உடல் நடுங்கத் தொடங்கிற்று. என்னல் நடக்கமுடியவில்லை. மாடியிலிருந்து ஒவ்வொரு படியிலும் உட்கார்ந்து உட் கார்ந்து மெல்லென இறங்கினேன். அவர்கள் நிலை எனக்கு மிக்க அச்சத்தை உண்டாக்கிற்று. ஐந்து பத்து நிமிடங்களுக்குள் ஒவ்வொருவரும் பலமுறை வாயா லெடுப்பதும், வெளிச் செல்லுவதுமாயிருந்தனர். அவருள் மூவர் சோர்ந்து படுத்துக்கொண்டனர். அவ்வமயம் எனக்குண்டான கலக்கம் கடவுளுக்குத்தான் தெரியும்.

உடனே மருத்துவரை அழைத்துக் காண்பித்தேன். அவர் "அவ்விதை நச்சுப் பொருள்தான். ஆயினும், இம் மருந்தைக் கொடுங்கள்," என்று மருந்து ஒன்றை அரைப் படி தண்ணீரில் கலந்து ஒவ்வொருவருக்கும் கொடுக்கு மாறு சொல்லிச் சென்றார். அம்மருந்து கலந்த அரைப் படி தண்ணீரையும் அவர்களைக் குடிக்குமாறு செய்வ

தற்குள் உண்டான துன்பம் அளவிடற்பாலதன்று. அதைக் குடித்த பிறகு இன்னும் அதிகமாய் வாயாலெடுத்தார்கள். இதனால், ஐந்து பெண்களுக்கு மூர்ச்சை உண்டாயிற்று. அப்போதே அவர்களை மருத்துவசாலைக்கு அனுப்பினேன்.

மருத்துவசாலையிலோ உடனே அவர்கட்குச் சிகிச்சை செய்யவில்லை. அவர்கள் அதன் காரணத்தைக் கேட்டார்களாம். உள்ளதைக் கூற அவணுள்ள (Nurse) தாதி ஒருத்தி, "நிலையத்தில் இவர்கட்கு வயிறு நிறைய உணவிடுதல் இல்லைபோலும்! அதனாற்றான், இவர்கள் இவ்விதையைத் தின்றார்கள்," என்றாளாம். அதைக் கேட்டதும் ஒரு மாணவிக்கு மிகுந்த கோபம் தோன்றி, அவளோடு வாதிட்டு நிலையம் வந்து சேர்ந்தாள்.

பின்பு மருத்துவசாலையிலிருந்தவர் அந்த இலையையும் விதையையும் கொணர்ந்தாலல்லாமல், சிகிச்சை செய்ய இயலாதெனக் கூறினர். அதன் பொருட்டு இரு மாணவிகள் கல்லூரிக்குச் சென்று அவற்றைக் கொணர்ந்து காட்டினார்கள். அதன் பின்பே அவர்கள் குழந்தைகளை மருத்துவசாலையில் சேர்த்துக்கொண்டு சிகிச்சைசெய்யத் தொடங்கினார்கள். அச்சிறுமிகள் நலமடைந்து நிலையம் வரப் பதினைந்துநாட்கள் சென்றன.

நிலையத்திலேயே இருந்த மிகுதிப் பெண்களுக்கும் அன்றிரவெல்லாம் துன்பந்தான். ஒருவரும் துயிலவே இல்லை. சிகிச்சைகள் பல செய்ய நேர்ந்தன. அவர்களும் சிறிது நலம்பெற ஏறக்குறைய ஒருவாரம் ஆயிற்று. அவ்விடுமுறை முற்றும், பெற்றோர் வந்து போதலும், அவர்கட்குச் செய்திகளை விளக்குதலும், அவர்கள் குழந்

தைகளின் அறியாமைக்கும் எனக்குண்டான துன்பத்திற்கும் இரங்குதலுமாகவே கழிந்தது. இந்நிகழ்ச்சியினுல் எனக்குண்டான வருத்தமும், வன்மைக் குறைவும் செப்புந்தரமல்ல.

---

௬. உல்லாசப் போக்கில் ஊறுநேர்ந்தது

பெரும்பான்மையும் ஒவ்வொரு விடுமுறைக்கும் சிறுமிகளை உல்லாசமாய் எங்கேனும் அழைத்துச்செல்லுதல் வழக்கம் என முன்னரே கூறப்பட்டுள்ளது. அங்ஙனமே 1923-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் மகாபலிபுரத்திற்குச் செல்லத் தீர்மானித்தோம். சில தின்பண்டங்களும், அங்குக் கிடைக்காத காய்கறிகளும் திரட்டிக்கொள்ளப்பட்டன. அவ்வமயம் நிலையத்தில் இருந்த சிறுமிகள் ஏறக்குறைய நாற்பதுபேர்.

அவர்கள், மூன்று பெரிய பெண்களும், ஒரு சிறு பெண்ணுமாய்ச் சேர்த்து ஒவ்வொரு தொகுதியாய்ப் பிரிக்கப்பட்டார்கள். "உண்ணல், குளித்தல், வெளிச் செல்லல், திரும்பல் முதலியவற்றில் அவரவர்கள் தொகுதியை அவரவர்களே பார்த்துக் கொள்ளல்வேண்டும். எவ்வகையில் சிறு குறை ஏற்படினும், எனக்குத் தெரிவித்தல் அவசியம். ஒருவரும் எந்த இடத்திற்கும் தனித்துச் செல்லுதல் கூடாது. குறைந்தது இருவராகவேனும் போதல்வேண்டும்," என்னும் சில கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டன.

எங்களுடன் என் ஆசிரியர், தாயார், அத்தை, தங்கை, இரண்டு வேலையாட்கள் வந்திருந்தார்கள். காலை புகைவண்டி ஏறி, பகல் திருக்கழுக்குன்றம்

சேர்ந்து, உணவு உண்டு மாலை நான்கு மணிக்கு மகாபலிபுரம் சென்றடைந்தோம். அச்செல்கை மிக்க மகிழ்வுடையதாகவே இருந்தது. என் ஆசிரியர், செந்தமிழ் இரத்தினகரம்—வல்லை—சண்முகசுந்தர முதலியார் அவர்களின் நண்பர்—ஜமீன்தார் வீடே மகாபலிபுரத்தில் எங்களுக்குத் தங்குமிடமாய் அமைந்தது. அவண் சேர்ந்ததும், நாங்கள் சிறிது சிற்றுண்டி உண்டு கடற்கரைக்குச் சென்றோம். உடனே மழை துளிக்கத் தொடங்கிற்று. அங்குத் தங்க இடமின்மையின் அருகிலிருந்த தலைசயனப் பெருமாள் கோவிலிற்குள் நுழைந்தோம். அர்ச்சகர் வருமளவும் மண்டபத்தில் உட்கார்ந்திருந்த சிறுமியர், ஆண்டாள் திருவாய்மலர்ந்த திருப்பாவையைக் கிளர்ச்சியுடன் பாடத் தொடங்கினர். அதன் முடிவும், அர்ச்சகர் வரவும் ஓரே கால அளவைக் கொண்டன. மூலத்தானத்தில் நுழைந்து இருபுறமும் வரிசையாய் நின்றோம். அர்ச்சகர் அர்ச்சனை செய்துவிட்டுக் கருப்பூரத்தை ஏற்றிக்காட்டினார். அவ்வமயம் எல்லாருடைய நெஞ்சும் தலைசயனப் பெருமாளிடமே பதிந்திருந்தது ஒரு சிறு ஊசி விழும் ஒலியும் கேட்கும் முறையில் சத்தமற்றிருந்தது.

ஜமீன்தார் மகள்

அவண் போந்திருந்த மங்கையருள் பட்டிவீரன் பட்டி ஜமீன்தார் மகளும் ஒருத்தி. அவள் பெயர் காசியம்மாள். அவளும் அவள் உடன்பிறந்த சகோதரிகள் இருவரும், சிற்றப்பா மகள் ஒருத்தியும் நிலையத்திலிருந்து வாசித்துக் கொண்டிருந்தனர். அவள் நிலையத்திற்கு வந்து மூன்று ஆண்டுகளாயின. எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு வயது பதி

ஊந்தே. ஆயினும், பதினெட்டு வயதுபோன்று தோன்று வாள். அழகிய தோற்றமும், கிளர்ச்சிச் சொற்களும், சுறுசுறுப்பான செயல்களும் அவளிடம் அமைந்திருந் தன நிலையக் கோட்பாடுகளின்படியே ஒழுகவேண்டு மென்னும் ஊன்றிய எண்ணத்தைக் கொண்டவள்; பிறருக்குச் சிறு தொல்லையும் தாராமல் நடந்துகொள் ளப் பெரிதும் முயல்பவள்; கல்வியில் ஊக்கங் கொண் டவள். செல்வக் குடும்பத்தைச் சார்ந்த அச்சிறுமியிடம் செருக்குப்பேய் சிறிதும் அணுகிற்றிலது. அடக்கமும் பணிவும் அவளிடம் அடிமை பூண்டிருந்தன. எப்போ தும் நகைமுகம் வாய்ந்த நங்கை. மகாபலிபுரம் செல்ல மிக்க விருப்பங்கொண்ட நாலைந்து குழந்தைகளுள் அவளே முதன்மையானவள். அவ்விடுமுறையில் அவ ளைத் தன் ஊருக்குச் செல்லுமாறு யான் தூண்டியும், அவள் மனம் மகாபலிபுர உல்லாசப் பிரயாணத்திலேயே ஊன்றிநின்றது. அவள் விருப்பத்தை மறுக்க மனமற்ற யான் அவளையும், அவள் சகோதரிகள் மூவரையும் உட னழைத்துச்செல்ல உடன்பட்டேன். மற்றக் குழந்தை களின் பெற்றோர்களைப்போன்றே அக்குழந்தைகளின் பெற்றோரிடமிருந்தும் அனுமதிக் கடிதம் வரப் பெற்றேன்.

நஞ்சு தலைக்கேறியது

இனி, நம் கருத்தை அர்ச்சகரிடமும், சன்னிதியினிட மும் செலுத்துவோம்: அர்ச்சகர், பெருமாள் யாவருக் கும் சேவையாகுமாறு சூட ஒளியைக் காட்டிக்கொண் டிருக்குங்கால், மேற்கூறிய மாணவி முதற்படியிலிருந்த மற்றொரு பிள்ளையை இறக்கிவிட்டுத் தான் போய் அங்கு நின்றாள்; நின்ற அவ்விநாடியே எதிர்ப்புறமாக நின்று

கொண்டிருந்த என்னிடம், "அக்கா! என் கால் பெரிய விரலில் ஏதோ கடித்தது," எனக் கூறிக்கொண்டே மற்றொரு காலின் பெரிய விரலால் அக்காலைத் துடைத்தாள். உடனே "இக்காலையும் கடித்துவிட்டது," எனக் கத்தினாள். இரு சிறுமிகள் அவளை வெளியிலுள்ள கொடிக் கம்பத்தினிடம் அழைத்துச் சென்றார்கள். "அஃது என்ன பூச்சி," என்றறிய யானும், இன்னும் சிலரும் விளக்குக்கொண்டு தேடினோம். ஒன்றும் காணப்பட்டிலது. இரண்டொரு விநாடியில் வெளிப்போந்து பார்க்குங்கால், அம்மங்கை அஃது ஏறுகிறதென்றும், தன்னால் நடக்க முடியாதென்றும் சொல்லி அழுதாள். அதற்கு வேண்டிய முதலுதவி செய்து அருகிலிருந்த ஜமீன்தார் வீட்டிற்கு அவளைத் தூக்கிச் செல்லவேண்டியதாயிற்று. சென்றவுடன் அப்பெண் என்னைவிளித்து, "அக்கா விஷம் என் தலைக்கேறிவிட்டது. இனி யான் பிழைக்கமாட்டேன். அப்பாவுக்குத் தந்தி கொடுத்து விடுங்கள்," எனக் கூறினாள். எதிர்நோக்காது வெளிப்பட்ட அவ்வார்த்தைகளாகிய அம்புகள் என் மனத்தை எங்ஙனம் ஊடுருவித் தைத்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா! செய்வதொன்றும் எனக்குத் தோன்றவில்லை. என் குடல் நடுங்கிற்று. செங்கற்பட்டிற்கு வந்துதான் தந்தி கொடுக்கவேண்டும். அப்போதோ மணி ஏழு ஆயிற்று. மழை பெய்துகொண்டிருக்கிறது. என் ஆசிரியர் உடனே ஜமீன்தாருக்குத் தெரிவித்தார். அந்த ஜமீன்தார் மூலிகைகளினால் நஞ்சைப் போக்கும் மருத்துவரையும் மந்திரக்காரரையும் அனுப்பினார். அவர்களால் பற்பல சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஆசிரியரும் நஞ்சைப் போக்கும் மருந்தொன்றைத் தந்தார். பத்துமணிக்குமேல் உறக்கதேவதை அவளை ஆட்

கொண்டது. ஆனால், அவள் உடலிலிருந்து உண்டான வியர்வைக்கு அளவே இல்லை. பல துணிகள் நனைந்தன. பெரிய பிள்ளைகள் மூவரும், என் தங்கையும், யானும் இரவு முற்றும் தூங்கவே இல்லை. அவளுக்குச் சிகிச்சை செய்வதிலேயே எங்கள் காலங் கழிந்தது. விடிந்த பிறகு தெளிந்த முகமும் கலக்கமற்ற வார்த்தைகளும் அவளிடம் காணப்பட்டன அப்பிள்ளையே, "இப்போது என் உடல் நல்ல நிலையில் இருக்கிறது. நாம் தீர்மானித்த படியே இன்னும் நான்கு நாட்கள் இருந்துபோகலாம்," எனப் பகர்ந்தாள். அவ்வார்த்தைகள் எனக்கு மிக்க களிப்பையும் ஆறுதலையும் அளித்தன. பெரிதும் மகிழ் வடைந்தேன். காலையிலும் சில மருந்துகளைக் கொடுத் தோம். ஆயினும், அன்றைக்கே சென்னை செல்லத் தீர் மானித்தமையின், அச்சிறுமியை அசையாமல் கொண்டு போகப் படகே ஏற்றதெனக் கருதி, அதைப் பேசிவரக் காலையிலேயே ஓர் ஆளை அனுப்பியிருந்தோம்,

ஆபத்தான நிலை

பகல் பன்னிரண்டு மணி வரையும் நன்றாய் இருந்த அவள், அதற்குப் பின்பு பன்முறை கூப்பிட்டாலும் பேசவில்லை; கண்களையும் திறக்கவில்லை. அவளுடைய இந்நிலை என்னைப் பெரிதும் வருத்திற்று. அங்கும் இங் கும் சென்றேன். அச்சிறுமியைப் பார்க்கப் பார்க்க என் மனம் கொதித்தது! என் தலை சுழன்றது! உடல் நடுங்கிற்று! நா பேச எழவில்லை! அவள் அருகில் நிற்கவும் மனம் இடந்தரவில்லை! பன்முறை கடவுளைத் துதித் தேன். என் மனத்தில் பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றின: "அந்தோ! அழகுக் குழந்தை யைக் கொல்லவா இங்கு வந்தேன்! இங்கு வாராமல்

இருந்தால் இத்துன்பம் நேர்ந்திராதே! நான் இப்போது என்ன செய்தால் இக்குழந்தை சுகம் பெறுவாள்? இதைக் கேட்டால் பெற்றோர் மனம் என்ன பாடுபடும்! என்னைத் தூற்றமாட்டாரா! அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்! 'உம்மிடம் ஒப்புவித்த என் அருமை மகள் எங்கே?' என்று கேட்டால் என்ன விடை பகர்வேன்? தன்னிடம் வந்தடைந்த கோவலன் இறந்துபட்டதை அறிந்த இடை மாது உடனே உயிர் துறந்தனளே! ஏன் நம் உயிர் அங்ஙனம் பிரிதல் கூடாது? யான் கவலையீன மாயிருந்தேனென்று உலகம் பழியாதா! உலகப் பழிப் பிற்கும், பெற்றோர் வசைக்கும் ஆளானேனே! நிலையத்தை மேல்பார்த்து யான் பெற்ற பேர் போதும்! அப் பெற்றோர் முகத்தில் எப்படி விழிப்பேன்! கலாசாலைத் தலைவியாருக்கு என்ன விடை இறுப்பேன்!" என்றிவ்வாறு நினைத்துக்கொண்டே கீழே படுத்துப் புரள்வதும் உட்காருவதுமாய் இருந்தேன். அவ்வமயம் என் தாயார் ஆசிரியர் முதலியோர் இயம்பிய தேறுதல் வார்த்தைகள் பலப்பல. அவற்றுள் ஒன்றேனும் என் செவியில் நுழையவே இல்லை. என்னுயிர் பிரிந்தால் நல்லது என்னும் எண்ணம் ஒன்று தவிர வேறொன்றும் என் மனத்திற் படவேயில்லை.

பிணமானாள்

சிறிது நேரத்தில் படகு வந்தது. அப்படகில் அப் பிள்ளையைக் கிடத்தினர். யானும் இன்னும் சிலரும் அதில் ஏறினோம். ஆனால், "அப்பிள்ளை என்ன நிலையிலிருக்கிறாள்" என்று யான் பார்க்கவே இல்லை. பார்க்கவும் மனமெழவில்லை. அவள் இனிப் பிழைக்கமாட்டாள் என்னும் எண்ணம் மட்டும் என் மனத்தில் ஊன்றி

யிருந்தது. படகிலேறி வீடுவந்து சேருமட்டும், யான் என்ன நிலையில் எப்படியிருந்தேன் என்று எனக்குத் தெரியாது. "என்ன செய்வேன்! பெற்றோருக்கு என்ன சொல்வேன்!" என்னும் வார்த்தைகளை மட்டும் திருப் பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே இருந்தேனும்.

மற்றப் பிள்ளைகளை, என் தங்கை புகைவண்டி மூலம் சென்னை அழைத்துப் போந்தனள். என் தங்கை யின் மன வன்மையும் புத்திகூர்மையும் பயன்படுதற்கு அதுவே தக்க சமயமாயிருந்தது. அவர்கள் அன்றிரவே திருவல்லிக்கேணி வந்தடைந்தார்கள்.

பதுமாவதியம்மாள் செய்த ஏற்பாடுகள்

1. சென்னையிலிருந்த என் தகப்பனுருக்கு நடந்த செய்தியை அறிவித்தது.
2. பொழுது புலர்வதற்குமுன் (நான்கு மணிக்கு) பாப்பாஞ்சாவடிக்கு இரண்டு வண்டிகளைக் கொணர்ந்து செல்லுமாறு என் சகோதரருக் குத் தெரிவித்தது.
3. அப்பெண்ணின் பெற்றோருக்குத் தந்தியடித் தது.
4. மயிலாப்பூரிலிருந்த அப்பெண்ணின் உறவினர் ஒருவருக்குச் செய்தியைச் சொல்லியனுப்பியது.
5. இச்செய்தியை அண்டை அயலாருக்குச் சொல் லுதல் கூடாது என்று காவற்காரனுக்குத் திட்டம் செய்தது.

படகிலேறிய நாங்கள் நான்கு மணிக்கே பாப்பாஞ் சாவடி அடைந்து, என் சகோதரர் ஏற்பாடு செய்திருந்த

வண்டிகளின் மூலம் காலை 5-30 மணிக்கு நிலையத்திற்கு வந்து சேர்ந்தோம். அப்போதுதான் 'அப்பெண் இறந்துவிட்டாள்' என்பதை அறிந்தேன். உடனே என்னை யான் மறந்துவிட்டேன். சில நிமிடங்கள் எனக்கு ஒன்றுமே புலப்பட்டிலது. பின்பு என் தம்பி எனக்குச் சில தேறுதல் வார்த்தைகளைச் செப்பி. "இனிச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்தல்தான் அறிவுடைமையேயன்றிச் சென்றதைச் சிந்தித்தலில் பயனில்லை," என வற்புறுத்தினான். அதற்குமேல் எனக்குச் சிறிது தெளிவு உண்டாயிற்று.

பெருந்துன்பமும் பெற்றோர் பெருந்தகைமையும்

மேல் நடைபெறவேண்டிய காரியங்களில் தலையிட்டேன். உடனே யானும், இன்னும் இரண்டு பெரிய பெண்களும் கல்லூரித் தலைவியார் வீட்டிற்குச் சென்றோம். அவரிடம் இதை வெளியிட்டவுடன், "O, God!" எனக்கூறி அவர் அங்ஙனமே நாற்காலியில் சாய்ந்துவிட்டார். இரண்டு விநாடிகள் அவர் ஒன்றுமே பேசவில்லை. அவ்வமயம் எனக்குண்டான குழப்பம் அளவிடற்பாலதன்று. பின்பு அவர், யான் என்னென்ன ஏற்பாடுகளுடன் அவண் சென்றேன் என்பதை விசாரித்தார். அவற்றை அறிந்தபின் அவருக்குச் சிறிது மனநிறைவு ஏற்பட்டது. அவர் என்னை நோக்கி, "உன்னைப்பற்றி எனக்குத் தெரியும்; நீ திருத்தமாகக் காரியங்களைச் செய்வாய் என்பதையும் யானறிவேன். ஆயினும் என்செய்வது," எனக்கூறி எங்களுடன் நிலயத்திற்கு வந்து இறந்த பெண்ணின் அருகில் முழங்கால்படியிட்டு செபஞ் செய்துவிட்டு எனக்குத் தேறுதல் செப்பி வீடு திரும்பினார்.

சிறிது நேரத்தில் மயிலாப்பூரில் உள்ள அப்பெண்ணின் உறவினர், அதற்கெனவே செய்துவந்த மரப் பெட்டி ஒன்றில், அப்பெண்ணைக் கிடத்தி, வண்ணாரப் பேட்டையிலிருந்த பாடசாலை ஒன்றில் கொண்டுபோய், பனிக்கட்டி முதலியவற்றை இட்டு அதைப் பாதுகாத்து வைத்தனர். அச்சிறுமி இறந்த மூன்றும் நாளே அவள் பெற்றோர் சென்னை வந்துசேர்ந்தனர்.

இன்னொரு முறை அச்சிறுமியைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பம் என்னைப் பெரிதும் தூண்டிற்று. ஆயினும், "அவள் பெற்றோர் நம்மைக் கண்டவுடன் என்ன குற்றம் கூறுவரோ! என்ன வசைப்பாட்டு பாடுவரோ!" என்னும் அச்சம் என் மனத்தை வாட்டியது. மூன்று ஆண்டுகள் என் குழந்தையைப்போன்று வளர்த்த அன்பும், அவள் அறிவும், பண்பும் அவளைப் பாராமலிருக்க என்னால் இயலவில்லை. இம்முறையில் இரண்டு வேறுபட்ட எண்ணங்களும் ஒன்றோடு ஒன்று போராடின. இறுதியில் பிந்தியதே வெற்றி பெற்றது! ஆகவே, என் தாயாரும், என் தங்கையும், ஒரு பெரிய மாணவியும், யானும் வண்ணாரப்பேட்டைக்குச் சென்றோம். அஃது அச்சிறுமியை எடுக்கும் நேரமாயிருந்தது. உயிர் நீங்கிய அவ்வுடலை மிக்க அழகாய் அலங்கரித்திருந்தனர். அக்காட்சி என் மனத்தைக் கொள்ளை கொண்டது. ஆறாத்துயரத்துடன் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தேன். அந்நிலையில் இருந்த என்னை அப்பெண்ணின் தாயார் பார்த்தனர். அவர்கள் என் அருகு வந்து, "என் அதிர்ஷ்டம் இருந்ததைப் பார்த்தீர்களா! இங்ஙனமே இதற்கு முந்தி இரண்டு பெண்களைப் பறிகொடுத்தேன்! யான் மிக்க பாவி! உங்களுக்கும் பெருந் துக்கத்தை விளைத்தேன்.

நாற்பது குழந்தைகளுள் என் குழந்தையை மட்டும் விஷப்பூச்சி தீண்டிற்றெனில் அது யாருடைய பாபமா யிருக்கும்! உங்களுக்காகவேனும் அவள் பிழைத்திரா மல் போய்விட்டனளே! உங்களிடமிருந்து கல்வியும் நல் லொழுக்கமும் கற்று என்மகள் கம்பீரத்துடன் வீடு திரும் புவாள் என நினைத்திருந்தேனே! என் எண்ணம் ஆகாயக் கோட்டை ஆயிற்றே! என் செய்வது! எல்லாம் அவ ரவர் வினையின் பயன்! நீங்கள் வருந்தாதீர்கள்!" என எனக்கே அவ்வம்மையார் தேறுதல் பகர்ந்தார்.

அப்பெண்ணை நச்சுப்பூச்சி தீண்டியதிலிருந்து சென்னை திரும்பும்வரை நடந்த செய்திகள் யாவற்றை யும் என் தாயார் அவ்வம்மையாருக்கு எடுத்தியம்பினர். அவற்றைச் செவியேற்ற அவர், "இதற்குமேல் நாங்கள் தான் என்ன செய்ய முடியும்! என் அருமைக் குழந்தை யின் ஆயுள் அவ்வளவுதான்! ஆனால், குழந்தையின் உயிர் நீங்கிய உடனே தனிப்புகைவண்டியில் வைத்து எங்கள் ஊருக்கு அனுப்பியிருந்தால், நலமாயிருந்திருக் கும். இப்போது நாங்கள் ஐம்பது பேர் வந்தும், இன் னும் பார்க்கப் பிரியப்பட்டவர் பலர் உள்ளனர்," என இயம்பினர். அப்போது யான், "உங்கள் எண்ணம் எங்களுக்குத் தெரியாமையாலும், அதிகப் பணச்செல வைக் கருதியுமே அக்காரியத்திற்குப் பின்வாங்கினோம்," என விடையிறுத்தேன். அவ்வமயம் அப்பெண்ணின் தந்தையாரும் எங்களிடம் வந்தனர். அவர், "நீங்கள் அதிகம் வருந்துவதாய்க் கேள்வியுற்றேன். இவையெல் லாம் நம்மால் ஆகக்கூடியனவோ! நீங்கள் இன்னும் பல குழந்தைகளை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியிருத்த லின், மனத்திண்மையை விடுதல் கூடாது," எனச் செப்பினர். "என்ன வசைமலர்களை நம்மேல் தூவு

வரோ" என அஞ்சியிருந்த எனக்கு அவர்தம் இனிய சொற்கள் அளவற்ற மன ஆறுதலை அளித்தன. அவர்கள் பெருந்தன்மை எனக்கு இறும்பூதை விளைத்தது! "தம் அரிய மகவை இழந்திருக்கும் அவ்விநாடியில் இத்துணை விரிந்த மனப்பான்மை உண்டாதல் யாவருக்கும் அமைவதோ!" என அவர்தம் சீரிய பண்பையும் பெருந்தகைமையையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தேன்.

ஆயினும், என் உடல் நலம் முற்றும் கெட்டது. சின்னாட்கள் படுக்கையிலேயே இருந்தேன். கல்லூரிக்கும் செல்லவில்லை. இதைக் கேள்வியுற்ற அப்பெண்ணின் தந்தையார், தாம் அழைத்துச் சென்ற மற்ற இரு பெண்களையும் என் ஆறுதலின் பொருட்டுத் திரும்பவும் நிலையத்திற் கொண்டுவிட்டு, "இவர்களைக் காசியைப் போல நினைத்து உங்கள் துயரத்தை ஆற்றிக்கொள்ளுங்கள்," எனப் பல ஆறுதல் வார்த்தைகளை இயம்பிச் சென்றார். ஆயினும், அப்பிள்ளையைப் பறிகொடுத்த துயரம் என் மனத்தைவிட்டு நீங்கப் பன்னாட்கள் சென்றன. அதனால் பல பிணிகளும் எனக்கு உண்டாயின.

ரு. பைத்தியக்காரன் படக்காட்சி

ஒவ்வோர் ஆண்டும் ஆறும் பாரத்தில்(S. S. L. C.) படிக்கும் மாணவிகளுக்கு, சோதனைக்குமுன் பாடங்களைப் படித்தற் பொருட்டுக் கல்லூரியில் ஒருவாரம் விடுமுறை விடுதல் உண்டு. அங்ஙனம் விடப்பட்ட ஒரு விடுமுறையில் ஒரு நாள் வீட்டிலிருந்த மாணவிகளுள் ஒருத்தி, மூன்றும் மாடியில் படித்துக்கொண்டிருந்தாள். நிலையக் கட்டிடத்தில் மூன்றுவது மாடிவரையும் தெருவிலிருந்தே மேலேறிப் போகப் படிகள் உண்டு. அப்படிக் கதவுகளை எப்போதும் பூட்டிவைத்தல் வழக்கம். யாரேனும் அப்பக்கம் வர நேர்ந்தாலன்றி, அக்கதவைத் திறத்தல் இல்லை. திறப்பினும் அப்போதே பூட்டிவிடுவர். என்ன காரணத்தினாலோ அன்று திறந்தவர் அக்கதவைப் பூட்ட மறந்துவிட்டனர். நாங்கள் யாவரும் கல்லூரிக்குச் சென்றவுடனே, ஒருவன் அவ்வழியாய் ஏறி மூன்றும் மாடிக்கு வந்தான். அவனைப் பார்த்ததும் அவண் படித்துக்கொண்டிருந்த மாணவி, "யார் யார்?" எனக் கேட்டாள். அவன் மறுமொழி பகராமலே, உள் கூடத்திற்குச் சென்றான். அவன் ஒன்றும் பேசாமையினாலும், தான் தனியாய் இருப்பதனாலும் மிக்க அச்சங்கொண்ட அவள், விரைவாய்த் தெருப்புறமே இறங்கிப் படிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு கீழே இருந்த மற்றப் பிள்ளைகளுக்கும், சமையற்காரருக்கும் செய்தியைத் தெரிவித்தாள். அவ்வமயம் காவற்காரன் கடைக்குச் சென்றிருந்தமையின், சமையற்காரர் வீட்டிற்குள் இருந்த படிகளின் வழியாய் மூன்றும் மாடிக்கு விரைந்து சென்றனர். சில மாணவிகளும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். மேல்மாடிக்குச் சென்ற அவர்கள் அங்கிருந்த

பெரிய கூடம் அறைகள் எங்கும் தேடினார்கள். ஒருவரும் காணப்படவில்லை. ஆதலால், "அம்மாணவி, நம்மை ஏமாற்றவே இங்ஙனம் கூறினாள்," எனச் சிலரும், "எதையோ பார்த்து ஆள் எனக் கருதினாள்," எனச் சிலரும் சொல்லி அவளை ஏளனஞ் செய்தனர். அவளோ, "இல்லை; யான் உண்மையாகத்தான் மனிதனைப் பார்த்தேன்; அவன் எங்கோ ஒளிந்துகொண்டிருப்பான்," என ஊன்றிக் கூறினாள்; அவளுக்கு மேல்மாடிக்குச் செல்ல அச்சமாய் இருந்தமையின், கீழேயே நின்றிருந்தாள். ஆயினும், "நீயே வந்து பார்," என அவளை மற்றவர் வற்புறுத்தி அழைத்துச் சென்றனர். அவளும் சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் கண்ணுக்கும் அவன் காணப்படவில்லை. ஒன்றும் தெரியாது அவள் தியங்கினாள்! பின்பு கண் கண்ணைகப் பின்னப்பட்ட அழுக்குத் துணிப்பெட்டியில் ஒரு மனிதனிருப்பதாய் ஒருத்தி கண்ணிற்குப் புலப்பட்டது. அவள் மற்றவருக்கும் காட்டினாள். அதில் இருப்பவன் மனிதனே என மற்றவரும் தீர்மானித்தனர். அப்பெட்டியில் அவன் சுகமாக உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் கண் முதலிய உறுப்புகள் அத்துளைகளின் வழியாய்த் தெரிந்தன; அவர்களைப் பார்த்ததும் அவன் ஓடி ஒளியவில்லை. உடனே அவர்கள், அவன் வெளியே ஓடிவிடாதவாறு அப்பெரிய கூடத்தின் கதவைப் பூட்டிக்கொண்டு, போலீஸ் நிலையத்திற்குச் செய்தியைத் தெரிவித்தார்கள். சேவகர் வந்தபோதும் அவன் அப்பெட்டியிலேயே உட்கார்ந்திருந்தானும். சேவகர் அவனை வெளிவருமாறு எத்தனைமுறை சொல்லியும் அவன் வாராமல் ஒன்றிற்கொன்று மாறுபட்ட வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தானும். ஆதலால், அவர்கள் அவனை அப்பெட்டி

யோடும் தூக்கி ஒருவன் தலையில் வைத்துத் தெருவழியே எடுத்துச் சென்றனராம். அவ்வமயம் அவன் கூண்டிலடைபட்ட புலிபோலக் காணப்பட்டானும். போலீஸ் நிலையத்திற்குப் போகுமட்டும் ஒவ்வொரு வீட்டிலுள்ளாரும் வெளிவந்து பார்த்தனராம். யாவருக்கும் அஃதொரு வியப்பாகவும் படக்காட்சி போன்றும் காணப்பட்டதாம். அன்று யாவருக்கும் பணமின்றிப் படக்காட்சி காணும் பாக்கியம் கிடைத்தது!

இச்செய்தியைக் கல்லூரியில் இருந்த எனக்குத் தெரிவித்தனர். யான் அங்கு வந்து பார்த்ததும், அவனை எங்கோ பார்த்ததாய் எனக்கு நினைவிருந்தது. சிறிது சிந்தித்துப் பார்த்தேன்; நிலையத்தில் இரண்டு மாதங்களுக்குமுன் மின்சார விளக்குகளைப் பழுது பார்த்தவர்களுள் இவனும் ஒருவன்," என அறிந்தேன். அதைக் குறித்து அவனைக் கேட்க, அவனும் 'ஆம்,' என ஒப்புக்கொண்டான். ஆனால், அவன் புத்திநிலையோடு பேசுவதாய்த் தெரியவில்லை. வேண்டுமென்றே அங்ஙனம் நடித்தானே! அன்றி உண்மையோ அறியேன்! அதிகாரிகளிடமும் அவன் அங்ஙனமே முரண்படப் பேசியதால், அவன் பயித்தியக்காரனென்றே தீர்மானித்து அவனைத் தண்டனைக்கு உட்படுத்தாமலே விட்டுவிட்டார்கள். இஃதும் எங்களுக்கு இறைவன் செய்த பேருதவியேயாகும். அவனை உண்மைக் கள்வன் எனத் தீர்மானித்திருப்பின், அஃது ஒரு முடிவிற்கு வருமளவும், யானும் குழந்தைகளும் போலீஸ்கோர்ட்டுக்குப் பன்முறை செல்லவேண்டியிருக்குமல்லவா? அத்துன்பம் நேராதவாறு நீக்கிய இறைவனைப் பன்முறை வாழ்த்தினேம்.

கூ. வெற்றிலைபாக்கின் வேடிக்கை

நிலையத்தில் பண்டிகைகள் யாவற்றையும் கொண்டாடுதல் வழக்கம் என முன்னரே கூறியுள்ளேன். அதன்படியே ஓராண்டு கௌரிவிரதம் கொண்டாடப்பட்டது. அந்நாள் இரவு குழந்தைகள் யாவரும் பல வகைச் சிற்றுண்டிகளை உண்டபின், வெற்றிலைபாக்குப் போட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள். சிரங்குக்குப் போட இரசபஸ்பமும் போரிக்கும் தேங்காய் எண்ணெயுடன் கலந்து ஒரு கிண்ணத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதைச் சுண்ணாம்பு என நினைத்து, ஒரு பிள்ளை வெற்றிலையில் தடவிப் போட்டுக்கொண்டாள். அதைப் பார்த்து மற்றும் சிலரும் அங்ஙனமே செய்தனர். இறுதியில் அம்மருந்தைப் பற்றித் தெரிந்த ஒருத்தி அஃதின்னதெனத் தெரிவித்தாள். அதன் பிறகுதான், "இது சுண்ணாம்பாய் இருந்தால் வாய் சிவக்காதா? இல்லையே. அதனால் இது மருந்தாகத்தானிருக்கவேண்டும்," என்று ஒருவர்பின் ஒருவராய்ச் சொல்லத் தொடங்கினர். அது வரையும் மருந்தின் சுவையோ, அத்துடன் கலந்திருந்த தேங்காயெண்ணெயின் மணமோ அவர்கட்குப் புலனாயிற்றில்லை. ஒன்றையும் நோக்காது காரியஞ் செய்வது இளமையின் இயல்புதானே! அதற்குமேல், சிலர், "வாய் குமட்டுகிறது என்றும், சிலர், வாயாலெடுக்க வருகிறது என்றும், சிலர், வயிற்றில் வேதனையாயிருக்கிறது என்றும்," சொல்லத் தொடங்கினர். மருந்தெனத் தெரிந்த எண்ணத்தினாலும் இங்ஙனம் உண்டாயிருக்கலாம். இச்செய்தி என்னிடம் வருங்கால், இரவு பத்து மணி இருக்கும். இஃது எனக்கு அதிக அச்சத்தை உண்டாக்கவில்லை. ஆயினும், உடனே சிகிச்சை செய்வதுதான் நலமெனத் தோன்றிற்று. ஆதலின், மருத்து

வரை அழைத்துச் செய்தியைக் கூறினேன். அவர் அம்மருந்தை நோக்கிவிட்டு, "இது கெடுதியை விளைவி யாது, ஆயினும், சிகிச்சை செய்தல் நலம்,'' எனக்கூறி, ஒரு மருந்தை எழுதித்தந்தார். அவ்விரவே அது வாங்கிக் கொடுக்கப்பட்டது. அன்றிரவு சுகமே தூங்கினர். மறு நாளும் அது குழந்தைகளுக்கு ஒரு துன்பத்தையும் செய்யவில்லை.

இவர் அறியாமையை அறிந்த நிலையப் பிள்ளைகளுள் சிலர், கைகொட்டிச் சிரிக்கத் தொடங்கினர். வேறு சிலர், "கையில் எடுத்தவுடன் எண்ணெயின் தன்மைகூடத் தெரியவில்லையா! காரமின்றிச் சுவையற்றிருப்பதும் உங்களால் கண்டுபிடிக்க முடியாமற் போயிற்று! வாய் சிவக்காமல் இருப்பதைப்பற்றியேனும் நோக்கவேண் டாவா! வெற்றிலைபாக்குக் கிடைத்ததே போதுமென நினைத்தீர்கள் போலும்! அதன் சுவை அறிந்து தின்ன அத்துணைப் பொறுமை ஏது! இவ்வளவு பரபரப்பா! இத்துணை அறியாமையா!" எனப் பல வகையில் ஏள னஞ் செய்தனர். பாவம் அவர்களுக்கு மிக்க நாணத்தை உண்டாக்கிற்று! ஆயினும், அவர்கள் ஏளனஞ் செய் பவர்களுக்கு இடந்தருவார்களா! "ஆம் ஆம், நீங்களும் அப்படித்தான் செய்திருப்பீர்கள்! நீங்கள் தப்பித்துக் கொண்டதனுல் மிக்க அறிவுடையவர்கள் போலப் பேச முன் வந்துவிட்டீர்கள்! இதைக்காட்டிலும், எத் தனையோ அறியாமையான காரியங்கள் நீங்கள் செய் ததை நாங்கள் அறியோமா? அவற்றிலும் இஃதொன் றும் பெரியதன்று,'' என அவர்களுக்கு விடையிறுத் தார்கள். இங்ஙனம் வெற்றிலைபாக்கு வேடிக்கை யாகவே முடிந்தது

கழக வெளியீடு—௫௮௨



Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, :: MADRAS-1.

Head Office :

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

விலை ரூ. 2-0-0.

அப்பர் அச்சகம், சென்னை-1.